

கல்கி
KALKI.
35 காசு
16.1.1966.



MTP-1-P-1-65/66 TM

கல்கி பொருளடக்கம்

விசுவாவசு தை 3 ❊ ஜனவரி 16


★

உலகில் நாம் எங்கு சென்றாலும் கேட்கக்கூடிய விஷயங்கள் இரண்டு. ஒன்று உயர்ந்து கொண்டே போகிறது: மற்றொன்று குறைந்து கொண்டே வருகிறது. உயர்வது வாழ்க்கைச் செலவு. குறைவது கல்வித் தரம்.

— புதுமொழி

★

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே


நான் வேடிக்கை பார்ப்பேன்
நிதி மந்திரி
ஜெசீந்திர செளத்திரி
சர்வதேச கடனுதவிக் கழகம்
கடன் வசூல்
PK



மலர் 25 ● இதழ் 25

தனித்துப் போரிடுவதா? கூட்டுச் சேருவதா?

தனித்து நின்று போராட வேண்டுமா, வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேருவதா என்பதே இப்போது சுதந்திரக் கட்சியின் பிரச்னை. வோட்டுக்கள் பல மூனைகளில் சிதருமல் தேர்தல் சமயத்தில் மற்றக் கட்சிகளுடன் உடன்பாடு செய்து கொள்வதைக்கூடப் பெரிய அளவில் சாதிப்பது சிரமமாகத்தான் இருக்கிறது. அரசியல் கட்சிகள் பல கூடிச் சேர்ந்து பணி புரிவது அவ்வளவு சுலபமல்ல. எனினும் அது அசாத்தியமும் அல்ல. காங்கிரஸை இதன் மூலம் தோல்வியுறச் செய்ய முடியுமெனில் இத்தகைய தேர்தல் கூட்டு நிரந்தர நன்மை செய்யும். கம்யூனிஸ நாடுகளில் இருப்பது போல் இன்று காங்கிரஸ் கட்சியும் அரசாங்கமும் ஒன்றோடு ஒன்று ஒன்றிப்போய்க் குழப்பத்தை விளைவித்து, சர்க்காரின் சர்வ வல்லமையினால் தனி மனிதனின் சுதந்திரங்களைப் பறித்து வருகிறது. இச்சமயத்தில் கம்யூனிஸ்டுகள் தவிர மற்ற எல்லா எதிர்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து காங்கிரஸை உறுதியாக எதிர்த்து, மக்கள் இன்று தாங்கும் சுமைகளையும் இப்போது படும் அவதிகளையும் குறைத்து, நல்ல நிருவாகத்தை ஏற்படுத்த வேண்டுமென்றே எந்தக் கட்சிச் சார்புமில்லாதவர்கள் — அவர்கள்தான் இந்தத் தேசத்தில் பெரும்பான்மையோர் — விரும்புகின்றனர். ஆயினும் எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் ஏதேனும் ஒரு தனிப்பட்ட சார்பும் மனத் தடையும் இருக்கின்றன. இது சில சமயங்களில் பகிரங்கமாகிறது; சில சமயங்களில் உள்ளூற இருக்கிறது. கட்சிகள் இந்த மனத் தடையை விட முடியவில்லை. ஒவ்வோர் எதிர்க் கட்சியும் தனது தனி உருவத்தைக் காத்துக் கொள்ள வேண்டுமென்பதிலும், பிறரோடு சேர்ந்து இத் தனி உருவத்தை மங்கச் செய்து கொள்ளக் கூடாதென்பதிலும் மிகவும் கவனமாக இருக்கிறது.

இதே சமயத்தில் இக்கட்சிகள் ஒவ்வொன்றும் காங்கிரஸைப் பதவியிலிருந்து விலக்கும் அளவுக்குத் தேவையான சக்தியைப் பெற வேண்டும் என்ற ஆர்வமும் கொண்டுள்ளன. எனவே, தேசத்தின் பெரும் பத்திரிகைகள் தேர்தல் கூட்டுக்கள் காரிய சாத்தியமல்ல என்று கூறிய போதிலும், எதிர்க் கட்சிகள் தங்களது தனிச் சார்புகளுக்கு பங்கமின்றியே — தங்களது தனிப்பட்ட முக்கியத்துவம் குன்றுமலே, — ஒன்று சேர்ந்து நல்ல நிருவாகம் என்ற ஒரே பிரச்னையை அடிப்படையாகக்கொண்டு காங்கிரசுக்கு எதிர்ப்பு அணியாகப் பணியாற்ற வேண்டும்; பணியாற்ற முடியுமென்று நான் நம்புகிறேன். தேச நடப்பில் இன்று நெருக்கடியான, பயங்கரமான சூழ்நிலை தோன்றியுள்ளது; இதனால் 'நல்ல நிருவாகம்' என்ற ஒரு விஷயமே அவசரப் பிரச்னையாகி யிருக்கிறது. காங்கிரஸின் தலைவர்கள் தேச விவகாரங்களைச் சரிவர நிர்வகிக்காததால் பொருளாதாரம் நாசமாகியிருக்கிறது. காங்கிரஸின் படாடோபப் பொருளாதாரத் திட்டம் காரணமாகத் தேசம் மீள முடியாமல் கடன் வலையில் சிக்கியுள்ளது. ஆனபடியால் காங்கிரஸை அதிகாரத்திலிருந்து இறக்குவதென்பதே ஒரு போற்றத்தக்க அரசியல் இலட்சியமாகி விட்டது.

சுமார் இருபது வருஷங்களாக நிர்வாக அதிகாரங்களைப் பலவிதங்களில் உபயோகப்படுத்திக் கொண்டு தன்னை மேலும் நிலைப்படுத்திக் கொள்ளக் கருதும் ஒரு கட்சியைத் தோல்வியுறச் செய்யும் காரியம் ஒரு தனிப்பட்ட பிரச்னை. இதர கட்சிகளுக்கிடையேயுள்ள வித்தியாசங்களெல்லாம் இந்தப் பிரச்னையைப் பாதிக்க விடக் கூடாது. காங்கிரஸ்

ஆட்சி என்பது நமது காலத்தின் மகத்தான ஊழலுக்கு ஒரு பெயராகி விட்டது. இந்தப் பிசாசத்தின் பிடியிலிருந்து மக்களை ஓர் ஐந்தாண்டுகளுக்கேனும் விடுவித்து, மக்கள் உண்மையான ஜனநாயகம் என்ன என்று பார்ப்பதற்கு உதவி புரிவது ஓர் அவசியமான சாதனையாகும்.

நான் கூறுகிற ஐக்கிய முன்னணியானது கட்சிச் சார்பில்லாத நல்ல சர்க்கார் ஒன்றை அமைப்பதற்கு முன்கூட்டியே உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் என்ன சாதிக்க முயல்கிறோம் என்பது தேசத்துக்குப் புரியும். இதைப் போன்ற ஒரு கூட்டு அணிக்கு நாம் என்ன பேர் தந்தாலும் சரி, அது காரிய சாத்தியமானதென்றே தோன்றுகிறது. மத்திய சர்க்கார் அமைக்குமளவுக்கு அது போதிய வெற்றியும் காண இயலும். விஸ்தாரமான அடிப்படையின் பேரில் நல்ல திறமைசாலிகளைக் கொண்டு அது மந்திரி சபையும் அமைக்க இயலும். இப்போது அடைந்துள்ள அபாய நிலையிலிருந்து தேசம் காக்கப்படும்.

எதிர்க் கட்சிகள் தங்களது பிரத்தியேகச் சார்புகளைத் தியாகம் செய்து இவ்வாறு நடப்பதற்கு இயலாவிடில் நாம் தூய கலப்பற்ற சுதந்திர வழியையே பிறழாமல் சார்ந்து ஒருசில ஸ்தானங்களில் வெற்றி பெறுவோம். அப்போது காங்கிரஸுக்கு மீண்டும் ஆட்சி நடத்துவதற்கு இடம் தரத்தான் வேண்டும். இப்போது நாம் எதிர்க் கட்சியிலிருந்து கொண்டு சில நன்மைகள் செய்வதுபோலவே அப்போது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பணி புரிவதோடு திருப்தி கொள்ள வேண்டும். நாம் என்ன செய்ய முடியுமோ — என்ன செய்ய வேண்டுமோ அதற்கு இந்த வெறும் எதிர்ப்புப் பணி மிகவும் பின் தங்கி நிற்குமெனினும் இதுவும் உபயோகமானதே. பார்லிமெண்டிலும் ராஜ்ய சட்ட சபைகளிலும் நாம் சில ஸ்தானங்கள் பெற்று ஆழப் பதியக் கூடிய யோசனைகளையும், விமரிசனங்களையும் வெளியிடலாம். மகாத்மாஜியின் பெயரைச் சொல்லிக் கொண்டு அவர் முற்றிலும் வெறுத்த செயல்களில் ஈடுபட்டுள்ள காங்கிரஸாரின் தவறுகளினால் நாம் மனம் சலித்து விடாமல் 'அரசாங்கத்தின் குறைந்த பட்ச அதிகாரம்; தனி மனிதரின் அதிக பட்ச சுதந்திரம்' இவற்றை துவஜ வாசகமாகக் கொண்டு காந்தியக் கொடியைத் தூக்கிப் பிடிக்கலாம்.

என்றாலும் 1967ல் ஆட்சி பீடத்தைக் காங்கிரஸ் பெற முடியாதபடி அதனைத் தோல்வியுறச் செய்தாலே நல்ல நிருவாகம் ஏற்படுவதற்கு உத்வேகம் கிடைக்கும். 'இந்திய சுதந்திரத்துக்கு எந்தக் கட்சி தியாகம் செய்தது என்பதைப் பொறுத்திராமல் அரசியல் கட்சிகள் யாவும் இந்நாட்டில் நல்ல முறையில் சீராக அமைய வேண்டுமாயின் காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சியாக இருக்கக் கூடாது; அது தன் அந்தஸ்தைப் பயன்படுத்திக் கொண்டு நிருவாக அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடாது' என்று 1948ல் காந்தியடிகள் கூறினார். அவர் விரும்பிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமாயின் 1967ல் காங்கிரஸுக்குத் தோல்வி தர வழி காணவேண்டும். ஏகபோக்கியங்களின் பிறப்பிடமான பெர்மிட் — லைசென்ஸ் முறையின்மீதமைந்த ஒரு பரஸ்பர உதவிக் கழகமாகிவிட்டது இன்றைய காங்கிரஸ் ஆட்சி. குரல்வளையைப் பிடிக்கும் இதன் பிடியிலிருந்து மக்களை விடுவித்தாலே ஜனநாயகத்தின் உண்மை உருவம் தெளிவு படும். இதற்கு அடுத்த தேர்தலில் வழி செய்ய வேண்டும்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது.)

வி. பி. மேனன் மறைவு

பாரத நாட்டுச் சரித்திரத்திலே நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்ட திரு வி. பி. மேனன் இந்த நிலையற்ற வாழ்விலிருந்து விடுதலை பெற்று இறைவனடி சேர்ந்து விட்டார். பாரத நாட்டுச் சுதேச சமஸ்தானங்களை குடியரசு இந்தியாவில் இணைத்த பெருமை பட்டேல் அவர்களைச் சாருமெனில், உண்மையில் பட்டேலின் காரியதரிசியாக இருந்து அவர் விருப்பத்தைக் காரியாம்சத்தில் நிறைவேற்றி வைத்த திரு வி. பி. மேனன் அவர்களுக்கும் இதில் பெரும் பங்கு உண்டு. பட்டேல் அவர்கள் தம்மிடம் வைத்திருந்த அபார நம்பிக்கையின் காரணமாகவே, ஐந்நூறுக்கு மேலிருந்த சுதேச சமஸ்தானங்களை இணைக்க முடிந்தது என்று மிகுந்த நன்றியுணர்ச்சியுடன் வி. பி. மேனன் குறிப்பிடுவார். ஆனால் இக்காரியத்தை வெற்றிகரமாகச் சாதிக்கக் கூடியவர் வி. பி. மேனன்தான் என்று பட்டேல் கண்டாரெனில் வி. பி. மேனனிடம் ஓர் அபாரத் திறன் இருந்திருக்கத்தானே வேண்டும்? இப்படிப் பட்டேலின் வலது கரமாக விளங்கிய திரு வி. பி. மேனன் ஓய்வுபெற்ற பின் நாடு போகிற போக்கைக் கண்டு பெரிதும் ஆதுரப்பட்டார். நாட்டில் காங்கிரஸுக்குச் சரியான எதிர்க் கட்சி உருவானாலொழிய தேசத்தைப் பேரழிவிலிருந்து மீட்க முடியாது என்று உணர்ந்தார். ராஜாஜி சுதந்திரக் கட்சி ஆரம்பிக்க ஊக்கியவரும் துணை நின்றவரும் அவரே. அவரது மறைவு சுதந்திரக் கட்சிக்குப் பெரு நஷ்டமாகும். எனினும்,



இப்படிப்பட்ட செயல் திறமை கொண்டவர்கள் சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்தவர்கள் என்று நினைக்கும் தோறும், அநுபவத்தாலும் உழைப்பாலும் சாமானிய குமாஸ்தா பதவியிலிருந்து பெரும் பதவிகளுக்கு உயர்ந்த வி. பி. மேனன் போன்றோரின் சரிதத்தை நினைக்கும்தோறும் யாருக்கும் அந்த நினைவுகளே புது ஊக்கத்தையும் ஊட்டும்.

★

வெளிப்படத் தெரிகிற காரணங்கள் முற்றிலும் உண்மைக் காரணங்களாக இருப்ப தில்லை. ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் தமது ராஜிநாமாவுக்குக் கூறியுள்ள கார ணங்கள் இப்படித்தான் உள்ளன. அவற்றை ஏற்பது சிரமமாயிருக்கிறது. அவர் மிகவும் தன்னம்பிக்கையுடன் வற்புறுத்திக் கூறுவது போல், அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளில் ஏதும் பொருளில்லை எனில், மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் உள்ள ஒரு நீதிபதி அக்குற்றச் சாட்டைப் பூர்வாங்கமாக விசாரிப்பதற்கு அவர் ஏன் ஆட்சேபிக்க வேண்டும் என்பது புரியவில்லை. பிரதம மந்திரி தாஷ்கெண்டி லிருந்து திரும்பி வரும் வரை பொறுத் திருப்பதற்கில்லாமல் உடனடியாக இவ் விஷயம் பைஸலாக வேண்டும் என்பதில் அவர் ஏன் இவ்வளவு தீவிரமாயிருக்க வேண்டும் என்பதற்கும் காரணம் புரியவில்லை. பிரதம மந்திரிக்குத் தம்மிடம் நம்பிக்கை யில்லாவிடில் தாம் விலகிவிட வேண்டியது தானே என்கிறார் ஸ்ரீ டி. டி. கே. இவ்விஷயங் களில் நம்பிக்கை என்பது மந்திரியிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பை ஒட்டியதாகும். பார்லிமெண்ட் அங்கத்தினர் சிலர் நிதி மந்திரியைக் குறித்துப் பெரும் ஊழல் குற்றச்சாட்டு கொண்டு வந்துள்ள போது அதை குப்பைக் கூடையில் அப்படியே போடுவ தற்குப் பிரதமர் தயாராயிருந்தால்தான் நம் பிக்கை இருக்கிறது என்று அர்த்தமில்லை. நம் பிக்கை இருக்கிறது என்பதால் இது போன்ற குற்றச்சாட்டுக்களில் பிரதமர் ஜாக்கிரதை யான வழியைப் பின்பற்றக் கூடாது என்று பொருளில்லை. இது எப்படியாயினும் இந்த விவகாரத்தின் மூலத்துக்குச் சென்று இதன் படிப்பினையைக் கவனிப்போம்.

ஸ்ரீ டி. டி. கே.யின் நீண்ட அறிக்கையைப் பட்சபாதமின்றிப் படித்தபின் இந்த அசங் கியம் அவ்வளவும் பெர்மிட்—லைசென்ஸ் முறை யினாலே உண்டானதுதான் என்பதை மக்கள் சிந்தித்து உணர வேண்டும் என்றே கருது கிறேன். விஷமம், அபவாதம், தருமசங்கட நிலை இவற்றின் வேர் என்னவெனில் தொழில் — வியாபாரம் இவற்றைச் சர்க் காரும் அதன் அதிகாரிகளும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே ஆகும். இதை யாரும் சுலப மாகக் காணலாம். பெர்மிட்—லைசென்ஸ் முறை தவிர்க்க முடியாத ஒன்று என எண்ணுவது தவறு. இதை நிச்சயமாக ஒழிக்க முடியும். மிகவும் அவசியமான அள வுக்கு, நேர்மையாக நிர்வகிக்கக் கூடிய அள வுக்கு மட்டுமே இந்த முறை சிறிதளவு எஞ்சி நிற்கலாம். அவ்வளவே. அப்போதுதான் நேர்மை வாய்ந்த நிதிமந்திரி அல்லது வர்த் தக மந்திரி அல்லது பெரும் அதிகாரிகளின் கௌரவம் கெட்ட மனிதர்களின் தயவை எதிர்பாராமல், அபவாதத்துக்கு ஆளாகாமல் இருக்க முடியும்.

இது ஏன் ஒருவன் மண்டையை அநா வசியமாகக் குடையும் விஷயமல்ல. தேசத் தின் பொருளாதாரம் முழுவதையுமே மலைப் பாம்பு போல் சுற்றி நெருக்கும் ஒரு பிரச்னை இது. நாற்பத்தைந்து கோடி மக் களைக் காக்க வேண்டிய வியாபாரத்திலும் தொழிலிலும் பெர்மிட் — லைசென்ஸ் முறை பெற்றுள்ள ஆதிக்கம் எப்படி மூச்சைப் பிடிக்கிறது என்பதையும், இது தேசத்தை ஊழலாக்கும் எத்தகைய விரோதி என்பதை யும் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் ராஜிநாமா பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வந்திருக்கிறது. ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் தம்முடன் சம்பந்தப்பட்டவர் களின் வியாபார விஷயங்களைத் தாமே பரிசீலிக்காமல் நேரு அவர்களின் கையெழுத் துக்கு வைத்ததாகக் கூறியிருக்கிறார். இதனால் சுலபமாகப் பணம் சம்பாதிக்க விரும்பிய மற்றவர்களின் பொறாமைக்கு ஆளாகா திருக்க முடியும் என்று ஸ்ரீ டி. டி. கே. நினைத்தது அப்பாவித்தனமாகத் தோன்று கிறது. ஒரு பெரிய அதிகாரத்திலுள்ளவரின் அதிகாரச் செல்வாக்கில் அவரது உறவினர் களும் நண்பர்களும் பங்கு பெறத்தான் செய் வார்கள். அதோடு, நீதிமன்றத்துடையது போன்ற சட்டத் திட்டங்களில்லாமல் லைசென்ஸுகளும், பெர்மிட்டுகளும் வழங்கப் பட்டு ஏகபோக்கியங்கள் உருவாகின்றன என் பதையும் நாம் அறிவோம். இந்தியாவில் இன்றுள்ள நிலையில் தொழில் போட்டியிருந்



தால் ஏகபோக்கியம் ஏற்படாது. ஆட்சியி லுள்ள கட்சி, சிலருக்கு மட்டும் லைசென்ஸ்கள் வழங்குவதால்தான் ஏகபோக்கியங்கள் ஏற் படுகின்றன. ஒரு நூறு சலுகைக்காரர்கள் தாங்கள் லைசென்ஸ் பெற்றுள்ள துறை களில் சிறிய ஏகபோக்கியங்கள் பெற்றிருப்ப தால், இந்த லைசென்ஸ் முறையில்லாவிடில் அவர்களுடன் இத்துறைகளில் போட்டியிட்டு, பண்டம் வாங்கும் மக்களுக்குச் சாதகமாக விற்கக் கூடிய ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தீமை உண்டாகிறது.

பெரிய அளவில் ஒரு தொழில் நடப்பதால் அது ஏகபோகத் தொழில் என எண்ணுவது தவறு. டாடா இரும்புத் தொழிற்சாலை பெரி தாக இருப்பதால் மட்டும் அது ஏக போக்கிய மாகாது. இரும்பு உற்பத்தி செய்ய மற்றவர் களும் முன் வந்து, அவர்கள் ஏதேனும் தந் திரத்தால் தடுக்கப்பட்டாலே டாடா ஓர் ஏகபோகமாகும். இதில் பெரியது, சிறியது என்ற அளவு வித்தியாசமில்லை. எனக்கு வேண்டிய பௌண்டன் பேனாவை நான் பம்பாயி லுள்ள 'க' என்ற கம்பெனியில் மட்டுமே வாங்க முடிந்தால் 'க' ஓர் ஏகபோக்கியம்.

எனக்கு வேண்டிய ஸனடோஜனை நான் 'கா' என்ற ஓர் கம்பெனியில்தான் வாங்க முடியுமெனில் அது ஓர் ஏகபோக்கியம். இது போலவே சிறிய துறைகளில் லைசென்ஸ் பெற்ற நூற்றுக் கணக்கான ஏகபோக்கியக் காரர்கள் இல்லாவிடில் ஆயிரக் கணக்கானவர்கள் அவர்களுடன் போட்டியிட்டு எளிமையாக வாழ்ந்து, பொருள் வாங்கும் மக்களுக்கு அனுகூலமாக விற்பனை செய்வார்கள். இதை நான் மேலும் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. தடையில்லாத போட்டி விருப்பினும் ஏகபோக்கியம் பெறுமளவுக்கு இந்தியாவில் கொழுத்த பணக்காரர்களுக்குச் சக்தி இல்லை. அமெரிக்காவில் அப்படி நடக்கிறது என்பதை நமக்கு உதாரணம் காட்டுவதில் பொருளில்லை. இது இந்தியாவுக்குப் பொருந்தாது. இந்தியாவின் தொழில் ஊக்கத்தின் மீது லைசென்ஸ் முறை ஒரு வியாதி போல் வந்து படிந்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவர். அப்படியிருந்தும் இது பற்றி மக்கள் அதிகம் குறை தெரிவிக்காததற்குக் காரணம், காங்கிரஸ் அரசாங்கம் ஒரு தவிர்க்க முடியாத நிலைமை என்ற பிரமையில் அவர்கள் இருப்பதுதான்.

★

காலனி ஆதிபத்தியம் போய் சுகர்ணரின் கீழுள்ள இந்தோனேசிய சர்க்காரில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் சிற்சில ஆட்சி முறைகளின் கீழ் என்னென்ன நடக்கலாம் என்பதற்கு ஓர் உதாரணம். அந்நாட்டின் முக்கிய உணவாகிய அரிசியின் விலை சென்ற ஆண்டில் இருந்ததைப்போல் இருபது மடங்காகி யிருக்கிறது. இந்தோனேசியா சர்க்கரை உற்பத்திக்குப் பெயர் எடுத்தது; எனினும் இப்போது அங்கே சர்க்கரை தட்டுப்பாடாக உள்ளது. பெட்ரோலின் விலை இரண்டு மாதங்களுக்கு முன் இருந்ததைப்போல் 250 மடங்காம்! ஜனவரி மூன்றும் தேதி விற்றதைப்போல் மறு நாளாகிய நாலாம் தேதி நான்கு மடங்கு விலை ஏறியிருக்கிறது. அப்படியும் மைல் நீளத்துக்கு 'பங்க்கு'களில் கியூ வரிசை நிற்கிறதாம். தபால் தந்தி, டெலிபோன் கட்டணங்கள் ஜனவரி 4ந் தேதியன்று பத்து மடங்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. சுமத்திராவிலுள்ள நீதிபதிகள் 'பொருளாதாரக் குற்றம்' செய்பவர்களை அவசர விசாரணை செய்து மரண தண்டனை அளிக்க முடிவு செய்திருக்கிறார்களாம்.

★

கணிசமான வாக்குகள் பெற முடியாத அபேட்சகர்கள் தேர்தலில் போட்டியிடாமலிருக்க வழி காண வேண்டும் என்பதில் தேர்தல் கமிஷனர் முனைந்திருக்கிறார். இது அரசியல் சாஸனப்படி சரியல்ல. ஜனநாயகக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இது தவறாகும். ஒருவர் தம்மொருவருடைய ஒரே ஒரு வோட்டைத் தான் பெற முடியுமெனினும் கூட, நாம் ஏதோ ஒரு கருத்தை வெளிப்படுத்த விரும்பினால் தேர்தலுக்கு நிற்க உரிமை பெற்றிருக்க வேண்டும்.

பிரான்ஸில் டிகால் தெளிவான வெற்றி பெற்றதற்கு எந்த உபாயம் பின்பற்றப்பட்டதோ அதையே நாமும் அநுசரிப்பது யுக்தம். ஒரு தொகுதியில் வாக்குகள் எண்ணப்பட்ட பின், வெற்றி பெற்றவர் மெஜாரிட்டி பெறவில்லை என்று தெரிந்தால் அவருக்கும் அவருக்கு அடுத்தபடியாக வாக்குப் பெற்றவருக்குமிடையே இரண்டாவது வாக்குப் பதிவு நடத்த வேண்டும். எடுத்த எடுப்பிலேயே வாக்காளர்களை, 'ஒருவர் இல்லாவிடில் இன்னொருவர்' என்பதாக வரிசைக் கிரமமாகச் சிலர் பெயர்களைக் குறிப்பிடச் சொல்வதைவிட இது சிறந்த வழி. ஏனெனில் இருப்பதற்குள் யார் அதிகப்பட்ச வாக்குப் பெற்றிருக்கிறாரோ அவரைக் குறித்து இம்முறையில் தான் நிச்சயமான தேர்வு செய்ய முடியும்.

தேர்தல் செலவுகளைப் பொறுத்தமட்டில் முன்பு நான் கூறியதையே திரும்பச் சொல்கிறேன் — வாக்காளர் சீட்டு விநியோகிப்பதும், வாக்குகள் சேகரிப்பதும் சர்க்காரின் அலுவலாக வேண்டும். வாக்கெடுப்புக்குச் சுமார் ஒரு வாரம் முன்பே அபேட்சகர்கள் பிரசாரத்தை நிறுத்திவிட வேண்டும். அதிகாரிகள் வண்டிகளில் வாக்காளர் வீடுகளுக்குச் சென்று வாக்குச் சேமிக்க வேண்டும். இதற்கு எத்தனையோ இடையூறுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டலாம். எனினும் இதுவே இன்றைய தேர்தல் முறையை அபிவிருத்தி செய்ய வழி. 1967ல் பரீட்சை செய்து பார்க்கத் தகுதியுள்ள வழி இது.

வருந்துகிறோம்



தமிழ்ப்படத் தயாரிப்பில் தனிப் புகழ் பெற்று விளங்கும் நாராயணன் கம்பெனியின் உரிமையாளர் கே. எஸ். நாராயண ஐயங்கார் தமது எழுபத்து நாலாவது வயதில் 6-1-66 அன்று மறைந்தது தமிழ்ப்பட உலகுக்குப் பெரிய நஷ்டமாகும். ஸ்ரீரங்கத்தில் பிறந்த அவர் சாதாரண நிலையிலிருந்து — உழைப்பால் உயர்ந்து பிரபல கிராமபோன் கம்பெனியான சரஸ்வதி ஸ்டோர்ஸின் பங்குதாரரானார். 1938ம் ஆண்டு நாராயணன் கம்பெனியைத் தொடங்கி ஒரு படாதிபதியானார். ஆர்யமாலா, சிவகவி, ஜகதலப்பிரதாபன், ஏழை படும்பாடு, மனம் போல மாங்கல்யம், கணவனே கண்கண்ட தெய்வம், தேவதா (ஹிந்தி) ஆகிய வெற்றிப் படங்களைத் தயாரித்துத் தமிழ்ப்பட உலகின் முன்னணியில் நிறுத்திப் பெரும் புகழ் பெற்றார். அவரது மறைவுக்கு நம் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராஜாஜியின் கடிதம்

சென்னையிலிருந்து வெளியாகும் சில தினசரிப் பத்திரிகைகள் வாக்குறுதி அளித்தால் அவற்றின் மீதுள்ள சர்க்காரின் வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்றும், 'கல்கி' 'ஸ்வராஜ்யா' விஷயமாக ராஜாஜியிடமிருந்து ஒரு கடிதம் வந்த பிறகே அவற்றின் மீது தொடுக்கப்பட்ட வழக்கை ரத்துச் செய்ததாகவும் முதன் மந்திரி திருச்சியில் கூறியிருப்பதாகச் செய்தி வந்துள்ளது. ராஜாஜி முதன் மந்திரிக்கு என்ன எழுதியிருக்கக் கூடும் என்பதை பற்றித் தப்பபிப்பிராயம் ஏதும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அக் கடிதத்தின் தமிழாக்கத்தை அடியில் கொடுத்திருக்கிறோம்:

அன்புள்ள பக்தவத்சலம் அவர்களுக்கு,

என்னுடைய கட்டுரைகளையும், அவற்றின் மொழிபெயர்ப்புக்களையும் முறையே 'ஸ்வராஜ்யாவி'லும், 'கல்கி'யிலும் வெளியிட்டதற்காக ஸ்ரீ போதன் ஜோஸப்பின் மீதும், ஸ்ரீ சதாசிவத்தின் மீதும் தொடரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையில் உறுதியாக நிற்கக் கூடியவையல்ல. அக்கட்டுரைகள் இந்தியாவின் பாதுகாப்பைப் பாதிக்கும் என்று பொருள் கொள்வது அதீத கற்பனையாகும். நான் சர்க்காரின் நிகழ்காலக் கொள்கைகளில் பலவற்றை அங்கீகரிக்கவில்லை. எனினும் எனது விமரிசனமும் யோசனைகளும் சர்க்காருக்கு உதவி புரியும் நோக்கத்திலேயே எழுந்தவை. இந்தியப் பாதுகாப்பைத் தடுப்பதற்காக அல்ல. அவை எவ்விதத்திலேனும் இந்தியப் பாதுகாப்புக்குப் பாதகம் விளைவிக்கும் என்று கருதுவது வெறும் கற்பனையும், பொருந்தாத எண்ணமுமேயாகும். இதே அபிப்பிராயங்கள் அல்லது ஏறத்தாழ இதே அபிப்பிராயங்கள்—பத்திரிகைகளிலும் பொது மேடைகளிலும் வேறு பிரமுகர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு உரியவை என்று இந்திய சர்க்கார் கருதவில்லை. எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதே சமயத்தில் என் கட்டுரைகளைப் பிரகரித்ததற்காகக் குற்றம் சாட்டுவது இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்ற நற் பெயருக்கு ஊறு விளைவிக்கக் கூடும்; இங்கு பத்திரிகைச் சுதந்திரமுள்ளது என்ற கருத்துக்கும் ஊறு விளைவிக்கக் கூடும். குற்றச்சாட்டுக்கு அடிப்படையாக அமைந்துள்ள கட்டுரைகளில் நான் காச்மீர விஷயமாக பாகிஸ்தானுக்கு இந்திய சர்க்கார் எதையும் விட்டுக் கொடுக்க வேண்டும் என விரும்பவில்லை என்பது நன்கு தெளிவு செய்யப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பை நமது பாதுகாப்புப் படைகள் திடமுடன் எதிர்க்க வேண்டும் என இக் கட்டுரைகளில் வலியுறுத்தியிருப்பதும் தெளிவு.

சமாதானம் ஏற்பட்ட பிறகு உசிதமான சமயத்தில் இந்திய சர்க்கார் தானாகவே முன்வந்து, காச்மீர மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் பன்முறை தந்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப காச்மீர மக்களின் விருப்பத்தை அறிய வழி காண வேண்டுமென்று நான் சொல்லியிருப்பது இன்றைய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கு ஊறு விளைவிக்குமென அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது.

கார்ட்டூன் குறித்தும், (போதன் ஜோஸப்பின் கட்டுரையில் கண்டுள்ள) லண்டன் 'நியூ ஸ்டேட்ஸ்மன்' மேற்கோள் குறித்தும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை. நம்முடைய கொள்கையைப் பற்றி இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் உள்ள மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதை இந்தியா அறிய வேண்டும். ஸெப்டம்பர் மாதம் நடந்த ஒரு பொதுக் கூட்டத்திலும் அக்டோபர் 16ந் தேதி 'ஸ்வராஜ்யா'வின்* முதல் கட்டுரையிலும், நாற்பது குடும்பத்தாருக்கு ஒருவர் விதம் திரட்டி இருபது லட்சம் பேருள்ள ஒரு படை அமைக்க வேண்டுமென நான் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன்.


என்னைப் போன்ற ஸ்தானமும், பொதுச் சேவை அனுபவமுமுள்ள ஒருவரின் கருத்துக்களையும், விமரிசனங்களையும், யோசனைகளையும் பரப்பி உதவி புரிவதை 'ஸ்வராஜ்யா'வின் ஆசிரியரும் பிரசுரகர்த்தரும் ஒரு கௌரவமாகக் கருதுவதாகச் சொல்கிறார்கள். அவர்கள் மீது குற்றம் சாட்டிவிட்டு, என் மீது நடவடிக்கை எடுக்காமலிருப்பதைக் காணும்போது எனக்கு வேதனை உண்டாகிறது. சர்வ தேச வட்டாரங்களில் இது என்மீதே தொடுக்கப்பட்ட வழக்கு என்றுதான் தோன்றும். எனவே நீதியை உத்தேசித்தும், இந்திய சர்க்காரின் நற்பெயரை உத்தேசித்தும் இவ்விவகாரத்தை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நல்லுணர்ச்சி ஏற்படுத்தி, குற்றச்சாட்டுக்கு இலக்கான கட்டுரையில் விமர்சிக்கப்பட்டுள்ள விஷயத்தில் சமரஸம் உண்டாக்குவதற்காக சர்வதேச வல்லரசுகள் முயற்சிகள் எடுத்து வருவதாலும் புனர் பரிசீலனை அவசியமாகும். இவ்விஷயத்தில் நீங்கள் மனப்பூர்வமான கவனம் செலுத்தி நிலைமையை மீண்டும் பரிசீலித்துப்பார்க்க வேண்டும் என்பதற்காகவே இக்கடிதத்தை எழுதுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்) சி. ராஜகோபாலாச்சாரி

* இக் கட்டுரை அக்டோபர் 17-ந் தேதி 'கல்கி' இதழில் வெளியாகியுள்ளது.

சபரி மோக்ஷம்



வால்மீகி ராமாயண நாட்டிய நாடகமான சபரி மோக்ஷத்தில்
மான் : கிருஷ்ணவேணி; சீதை : என். கலா; ராவணன் : குன்னிராமன்; சூர்ப்பனகை : புஷ்பா

ஆண்டுக்கு ஒரு புதிய கலைப் படைப்பை அளித்து வரும் கலாக்ஷேத்திரத்தின் தலைவி ஸ்ரீமதி ருக்மிணி தேவி இவ்வாண்டு அளித்த கலைப் பரிசு வால்மீகி ராமாயண நாட்டிய நாடகத்தின் நான்காவது பாகமாகிய சபரி மோக்ஷம். இந்த ''ஸீஸனின்'' முக்கிய நிகழ்ச்சிகளில் சபரி மோக்ஷம் முதன்மை யானது.

ஆரணிய காண்டப் பகுதி நடன நாடக மாக அமைப்பதற்கு முற்றிலும் ஏற்றது என்று சொல்ல முடியாது. தக்க சம்பவங்களைப் பொறுக்கி, சுவைபடக் கோத்து ரம்மிய மாக நடனத்தில் புனைந்தளிப்பது சுலப மல்ல. இதை மிகவும் போற்றத்தக்க முறை யில் அமைத்து வழங்கியிருக்கிறார் ஸ்ரீமதி ருக்மிணி தேவி.

அகஸ்திய ஆசிரமத்தின் மனத்தைக் கவரும் சாந்தியையும், பஞ்சசரோவரத் தின் மனோகரமான இயற்கை வனப்பையும் நடனங்கள் மூலம் மனக் கண்ணால் காண முடிகிறது. சூர்ப்பனகையின் நடனங்களும் நடிப்பும் மெருகு பெற்று உன்னதமாக விளங்கின. அரக்கியின் நடனத்திலும் அழகைக் காணலாம் என்பதை புஷ்பாசங்க ரின் நடனம் குறிப்பாக எடுத்துக் காட்டிற்று.

மாயமானாக நடித்த கிருஷ்ணவேணி தனது பயிற்சி மிகுந்த பரதநாட்டியக் கலைச் சிறப்பாலும், துள்ளித் துள்ளி மேடை முழு வதிலும் ஓடிய கவர்ச்சியினாலும் நாட்டிய நாடகத்துக்கு அழகும், விருவிருப்பும் கூட்டினார். ராவணனுடைய பாகத்தை ஏற்று நடித்த குன்னிராமன் கதகளி நடனங்களில் மெருகேறியவர். அவருடைய நடனங்களும், கபட சந்நியாசியாக நடித்த பாலகோபாலின் பாவம் நிறைந்த நடிப்பும் இந்த நடன நாட்டியத்துக்கே சுவையூட் டின. சீதையைக் கவர்ந்து செல்வதைச் சித்திரிக்கும் நடனங்களும், சீதையை ஒரு கையில் இணைத்தவாறே ஜடாயுவிடம் சண்டையிடுவதும், ஜடாயு அடிபட்டு வீழ்வ தும் உயர் அம்சங்கள்.

சீதையாக நடித்த என். கலாவின் நடிப்பில் எழிலும், பரத நாட்டியச் சிறப் பும் கலந்து மிளிர்ந்தன. சபரிமோக்ஷப் பகுதி சபையோருக்குத் தெய்விக மணத் தைப் பரப்பியது. கலைமூலம் தெய்விகத் தைப் பரப்ப வேண்டியதுதான் முறை என்பதை லட்சியமாகக் கொண்டுள்ள கலா க்ஷேத்திரம் இந்தப் பகுதியை இப்படித்தான் நடிக்க வேண்டும் என்று கூறத்தக்க வகையில் அமைத்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.


ஃ ஃ ஃ

வாசுதேவாச்சாரியாரின் முன்னிலையில் நிகழ வேண்டிய இந்த நடன நாடகம் வாசுதேவாச்சாரியாரின் நாலுவது பிறந்த தின விழாவில் அரங்கேற்றப்பட்டது. ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் குருபக்திக்குச் சான்று. ராமாயண மூல சுலோகங்களுக்கு வாசு தேவாச்சாரியார் அமைத்துத் தந்துவிட்டுச் சென்ற மெட்டுக்களையே அவருடைய பேரன் ஸ்ரீ ராஜாராமின் உதவியுடன் பயன்படுத்தி யிருக்கிறார்கள். இனிமையான பின்னிசை ஸ்ரீமதி கமலா ராணியினுடையது. சென்னை சங்கீத சபைகள் இந்நடன நாடகத்தைக் கலாக்ஷேத்திரக் கலைக் குழுவினரைக் கொண்டு நிகழ்த்தி மகிழலாம்.

அத்தியாயம் இருபத்துமூன்று

உள்ளத்தின் உறுதி கண்டான்

கிழக்கு வெளுத்திருந்ததே தவிரப் பொழுது இன்னும் சரியாகப் புலரவில்லை. குதிரையிலிருந்து சரிந்து வீழ்ந்த கிருஷ்ணதேவராயர் நினைவிழந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தார்; விசுவநாதன் போர்க் களங்களிடையே ஆறாகப் பெருகியோடும் குருதியில் திளைத்தவனென்று



னும் சக்கரவர்த்தியை அந்த நிலையில் கண்டவுடன் நிலை குலைந்து செயலிழந்து விட்டான். ராமராயர் மட்டிலும் நெஞ்சுறுதியைத் தளர விடாமல் உடன் வந்த மெய்க் காவல் வீரர்களைக் கொண்டு மளமளவென்று காரியங்களைக் கவனிக்கலானார்.

அரண்மனையிலிருந்து சிவிகை வரவழைக்கப் பெற்றது. சக்கரவர்த்தியோடு விசுவநாதனையும் சிவிகைக்குள் இருக்கச் செய்துவிட்டு, மருத்துவருக்கும் அரசமாதேவியாருக்கும் ஆட்களை அனுப்பி வைத்தார் ராமராயர்.



சிவிகை அரண்மனைக்குத் திரும்பியவுடன் சக்கரவர்த்திக்குச் சிகிச்சை நடைபெறத் தொடங்கியது. அரசமாதேவியரான திருமலா தேவியும் சின்னா தேவியும் கதறிக் கண்ணீர் வடித்தார்கள்.

சக்கரவர்த்தியின் உயிருக்கு ஆபத்தில்லை என்றார் அரண்மனை மருத்துவர். கிருஷ்ண தேவராயருக்குச் சிறிது சிறிதாக நினைவு திரும்பியது. விழிகளை மெல்லத் திறந்து சுற்றிலும் நோக்கினார். நடந்த நிகழ்ச்சிகளை அவர் ஊகித்து உணர்ந்து கொண்டாரெனத் தெரிந்தது. ராமராயரை அருகில் அழைத்து, ''கூடிய வரையில் இந்தச் செய்தி அரண்மனைக்குள்ளாகவே இருக்கட்டும்; வெளியில் தெரிந்தால் வீணாகப் பரபரப்பு ஏற்படக் கூடும்'' என்றார்.

அடுத்தாற்போல் அவர் கண்கள் தமது இரு தேவியாரின் இரு முகங்களையும் கனிவோடு நோக்கின. ''எனக்கொன்றும் ஆபத்தில்லை; கவலைப் படாதீர்கள்'' என்று கூறிப் புன்னகைபூத்தார். அவருடைய புன்னகை அவர் தேவியாரின் விழிகளிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீரைப் பெருகச் செய்தது.

''கடமைகள் மிகுந்திருந்ததால் இதுவரையில் உங்களோடு அமைதியாகப் பொழுது போக்க முடியவில்லை. இப்போது அதற்குரிய பொழுது கிடைத்திருக்கிறது. உடல் நலம் தேறும் வரையில் நான் உங்களுடைய பாதுகாப்பில் இருக்க முடியும்'' என்று கூறிச் சிரித்தார் மன்னர்.

''எப்படியாவது தாங்கள் நலம் பெற்று எழுந்தால் போதும்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார் திருமலா தேவி.

சக்கரவர்த்தி அரசியல் அலுவல்களுக்கென்றே தனியாக அரண்மனை

எழுப்பிக் கொண்டிருந்தார். அரண்மனையை அடுத்து வேறு ஒரு கோட்டைக்குள் அந்தப்புரத்தில் தேவியர் இருவருக்கும் தனித் தனி மாளிகைகள் இருந்தன. தமது அக வாழ்வு புறவாழ்வு இரண்டினையும் தனித் தனியே இணைந்து இயங்குமாறு செய்து தமது சொந்த வாழ்க்கையை ஒரு வரம்புக்குள் வைத்திருந்தார் அவர்.

அரச மாதேவியர் முதல் அனைவரையும் அடுத்த கூடத்துக்கு அனுப்பி விட்டுப் பிறகு விசுவநாதனையும், ராமராயரையும் மட்டிலும் தம்மோடு தனித்திருக்கச் செய்தார்.

''உங்கள் எல்லோருடைய விருப்பத்துக்கும் மாறாக, நம்மவர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், நான் எப்படியும் படை நடத்திச் செல்ல வேண்டுமென்ற முடிவுக்குத் தான் வந்து கொண்டிருந்தேன். விஜய நகரத்தில் என் ஆட்சி நடைபெறும் காலத்தில் வடக்கே மற்றொரு படையெடுப்பு நடந்தது என்ற பழிச் சொல் வந்துவிடக் கூடாது என்பதுதான் என் எண்ணம். ஆனால்..... இறைவனின் சித்தம் வேறு விதமாக இருந்திருக்கிறது.''

''தங்கள் ஆட்சியில் விஜயநகரம் படையெடுப்பின்றி அமைதியோடு வாழ்கிறதே. அப் பெருமை என்றென்றும் நிலைத்திருக்கும் சக்கரவர்த்திகளே!'' என்றான் விசுவநாதன்.

''பரத கண்டத்தில் எந்தப் பகுதியிலும் இனி யாரும் படையெடுக்கத் துணியக் கூடாது. எல்லாரும் ஒற்றுமையாகத் திரண்டு நின்று பகைவரை முறியடிக்கும் பழக்கம் மட்டிலும் நமக்கு வந்து விட்டால், பிறகு உலகத்தில் பகையே இல்லை பரத கண்டத்துக்கு. அதற்காகத்தான் இவ்வளவு முயற்சிகள் செய்தேன். பாமினி சுல்தான்கள் வரவில்லை என்பதற்காக விஜயநகரத்தின் கடமையை மறக்கக் கூடாதல்லவா?''

உடல்நிலை மிகவும் மோசமாக இருந்த நிலையிலும் சக்கரவர்த்தி தம் முழுச் சக்தியையும் திரட்டிக் கொண்டு பேசினார். ராமராயரிடம் உடனடியாக வடக்கே புறப்பட்டுச் செல்லுமாறு கட்டளை யிட்டார். ராமராயர் அதை எதிர்பார்க்கவில்லை.

''தங்களை இந்த நிலையில் விட்டுவிட்டு நான் புறப்பட வேண்டுமா?'' என்று தயக்கத்தோடு கேட்டார் அவர்.

''என்னிலும் உயர்ந்தது இந்த விஜயநகர சாம்ராஜ்யம். இந்த சாம்ராஜ்யத்தை விடப் பெரியது நமது பரத கண்டம். ஆகவே, நீங்கள் தாமதிக்காமல் புறப்பட்டுத்தான் ஆக வேண்டும்.''

ராமராயருக்குச் சக்கரவர்த்தியை விட்டுப் பிரிந்து செல்வது மிகவும் மன வேதனையைக் கொடுத்தது. மருத்துவர் அவரிடமும் விசுவநாதனிடமும் சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றி அவ்வளவு நல்ல செய்தி சொல்லவில்லை. உயிருக்கு ஆபத்து ஏற்படாது என்று உறுதி கூறினரே தவிர, மீண்டும் பழைய உடல் வலிமையைச் சக்கரவர்த்தி பெறமுடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படவில்லை. ஆகவே சில தினங்களாவது அங்கே தங்கியிருந்து விட்டு, உடல் நலம் ஓரளவு தேறியவுடன் புறப்பட நினைத்தார் ராமராயர். சக்கரவர்த்தியோ தமது கட்டளையில் பிடிவாதமாக இருந்தார். மேலும் காலதாமதம் ஆவதை அவர் விரும்பவில்லை.

ராமராயருக்குச் சக்கரவர்த்தி விடை கொடுத்தனுப்ப வேண்டிய நேரம் வந்தது. அப்போது விசுவநாதன் மட்டிலும் அவருக்கு அருகில் இருந்தான். பணிப் பெண்கள் இருவர் பிறவிச் செவிடு, ஊமை. காது கேட்காத தொலைவில் வைத்தியர் மருந்து கரைத்துக் கொண்டிருந்தார்.

''ஹாஸன்கானிடமும் ராஜசிம்மனிடமும் என்னுடைய அன்பைச் சொல்லுங்கள். மற்றவர்கள் ஒத்துழைக்காவிட்டாலும் என்னால் இயன்றதைச் செய்வதாக ஹாஸன்கானிடம் வாக்களித்திருந்தேன். என்னால் இயன்ற அளவுக்கு ஆயுதங்களையும் உணவுப் பொருட்களையும் போருக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்லுங்கள். தீமையை எதிர்க்கும் சக்தி இங்கே அழிந்துவிடவில்லை என்பதைப் பகைவரிடம் நாம் நிரூபிக்க வேண்டும்.''

பிறகு சிறிது நேரம் சக்கரவர்த்தி மௌனத்தில் மூழ்கினார். அவரது கண்கள் கலங்கின.

''ஒருவேளை அவர்களாலும் பாபரை முறியடித்து டில்லியைக் கைப்பற்ற முடியாமல் போனால்...'' என்று தமக்குத் தாமே கூறிக் கொண்டு, ''அந்த நிலை வந்துவிட்டால் பிறகு நாம் பாபரை அங்கேயே தடுத்து நிறுத்த வேண்டும்'' என்றார்.

விசுவநாதனிடம் கூறி ராமராயரிடம் கொடுத்தனுப்புவதற்காக ஓர் ஓலை எழுதச் செய்தார் கிருஷ்ண தேவராயர். போரின் முடிவு வேறு விதமாக இருக்குமானால், இந்த ஓலையை ராமராயர் பாபரிடம் இரகசியமாகச் சேர்த்துவிட வேண்டும் என்பது அவர் திட்டம்.

சக்கரவர்த்தி ஓலைக்காகச் செய்தியைக் கூறலானார்:

> ''கல்வியறிவும் பண்பாடும் கொண்ட போர் வீரரான பாபர் சக்கரவர்த்தி அவர்களுக்கு, விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயர் அனுப்பும் திருமுகமாவது:
>
> காபூல் தேசத் தலைவரான தாங்கள், தங்கள் போர்த்திறனாலும், அறிவாலும் ஆற்றலாலும் இப்போது டில்லி சிம்மாசனத்தைக் கைப்பற்றியிருக்கிறீர்கள். தங்களுடைய வெற்றிக்கு நான் வாழ்த்துக் கூற வேண்டிய அவசியத்தை அங்கு ஆட்சி செய்து வந்த இப்ராகிம் லோடி ஏற்படுத்தி விட்டார். அதனால் வாழ்த்துகிறேன்.
>
> ஆனால் அதே சமயம் தங்களுக்கு முக்கியமாகச் சில ஆலோசனைகள் கூற வேண்டியது என் கடமையென்று உணர்கிறேன். தாங்கள் போர்வீரராக மட்டிலுமின்றிக் கல்வியறிவிலும் பண்பாட்டிலும் சிறந்தவராக விளங்குகிறீர்கள் என்றும் கேள்வியுற்றிருக்கிறேன். இதற்கு முன்பு படையெடுத்து வந்து இங்கு வெற்றி கண்டவர்களில் சிலர் வெறும் போர் வெறியர்களாக மட்டும் இருந்திருக்கிறார்கள். குடிமக்களின் நன்மையில் நாட்டமோ, இந்த நாட்டுப் பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை இவற்றில் பற்றுதலோ அவர்களுக்கு இருந்ததில்லை. அவர்க


KTR
FACE POWDER

னுடைய கொடுங்கோல் ஆட்சியே அவர்களை இங்கு நிலைக்க விடாமல் செய்திருக்கிறது. தாங்கள் பரந்த மனத்தோடு பண்புள்ள முறையில் ஆட்சி செலுத்துவீர்கள் என்று நம்புகிறேன்.

மற்றொரு முக்கியமான செய்தியையும் நான் கூற வேண்டும். டில்லியைச் சூழ்ந்துள்ள பகுதியோடு நிற்காமல் தெற்கிலும் படையெடுத்து வரத் துணிந்தீர்களானால், விஜயநகரத்தின் பகையைத் தாங்கள் வலிந்து தேடிக் கொண்டவர்களாவீர்கள். எங்களது சாம்ராஜ்யத்தின் இலட்சியத்தையும் அதன் வலிமையையும் தாங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். எந்தப் படையெடுப்பையும் முறியடிப்பதற்கு விஜயநகரம் எப்போதும் சித்தமாக உள்ளது.''

கிருஷ்ணதேவராயர் கூறியபடி ஓலையை எழுதி முடித்தான் விசுவநாதன். அதை ராமராயரிடம் கொடுத்த சக்கரவர்த்தி, ''ஒரு வேளை பாபர் வெற்றியடைந்து விட்டால், அவரிடம் இதைச் சேர்ப்பித்து விடுங்கள்; அதுவரையில் இது இரகசியமாகவே இருக்கட்டும்'' என்றார்.

ராமராயர் ஓலையைப் பெற்றுக்கொண்டு யோசனை செய்தார். ''நாம் ஹாஸன்கான் முதலியவர்களுக்கு ஆயுத உதவி செய்வது பாபருக்குத் தெரிந்தால் அவர் நம்மிடம் கோபம் கொள்ளக் கூடுமல்லவா?'' என்றார்.

''அது கட்டாயம் அவருக்குத் தெரியத்தான் வேண்டும்'' என்றார் சக்கரவர்த்தி; ''அதோடு அவருடைய கோபத்துக்கு நாம் சிறிதும் அஞ்சியவர்களல்ல என்பதும் அவருக்குத் தெரியத்தான் வேண்டும்.''

கிருஷ்ணதேவராயரின் ராஜதந்திரம் ராமராயரை மெய்சிலிர்க்க வைத்தது.

''ராமராயரே! ஹாஸன்கானும் ராணாசிம்மரும் வெற்றி பெறுவதற்காக உங்களால் முடிந்த உதவிகள் அனைத்தையும் செய்யுங்கள். அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் நமது நோக்கம். ஆனாலும் போரின் முடிவு வேறு விதமாக இருந்தால், அப்போதும் நாம் இங்கு இருக்கிறோம் என்பதைப் பாபர் உணர வேண்டும்'' என்றார் சக்கரவர்த்தி.

ராமராயர் ஓலையுடன் விடைபெற்றுக் கொண்டு சென்றார். நூற்றுக் கணக்கான யானைகளும் குதிரைகளும் அவர் பின்னே ஆயுதங்கள், உணவு தானியங்கள், திரவியங்கள் முதலியவைகளுடன் சென்றன. சக்கரவர்த்தி அதன் பிறகு களைப்பு மேலிட்டால் நெடு நேரம் கண் மூடியிருந்துவிட்டு, பிறகு விசுவநாதனிடம், ''ஏனோ, எனக்கு இந்தப் போரில் அவர்களால் பாபரை வெல்ல முடியாதென்று தோன்றுகிறது'' என்று கலக்கத்தோடு கூறினார்.

''அப்படியே பாபர் வெற்றி பெற்றாலும் அவர் தெற்கே திரும்புவதற்குக் கனவிலும் துணிய மாட்டார். அதற்கான ஏற்பாடுகளைச் சக்கரவர்த்திகள் செய்து விட்டீர்கள்'' என்றான் விசுவநாதன்.

உயிருக்கு மன்றாடி வலியாலும் வேதனையாலும் துடிக்கும் நிலையிலிருந்த மாமன்னர் தம்மையே மறந்து, தமது கடமைகளைக் கவனித்த நிகழ்ச்சிகள் அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன.


அத்தியாயம் இருபத்துநான்கு

தந்தையின் ஓலை

தெற்கில் பாண்டிய நாட்டை நோக்கிப் படை நடத்திச் சென்ற நாகம நாயகருக்கு வழியெங்கும் தமிழ் நாட்டில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியதால், அவருடைய படைவீரர்களின் பராமரிப்பக்கே பெரும் பொருள் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அது தமிழ் நாடாக இல்லாமல் வேறு பகை நாடாக இருந்திருந்தால் வன்முறைகளிலேயே குடிமக்களைத் துன்புறுத்தி, அவர் தமது படைவீரர்களின் தேவைக்கு உணவுப் பொருள்களைச் சேகரித்திருப்பார். ஆனால் அது விஜயநகர சாம்ராஜ்யத்துடன் இணைந்த நாடு. குடிமக்கள் வாயிலாக அந்தச் செய்தி சக்கரவர்த்திக்கு எட்டுமானால் அவர் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டார். ஆகவே அரும்பாடுபட்டு நாகம நாயக்கர் திரட்டியிருந்த கைப்பொருள் அவர் காவேரிக் கரையை அடைவதற்குள் பெரும் பகுதி தீர்ந்து விட்டது.

கைப்பொருள் கரையக் கரைய அவருக்கு வீர சோழன் மீது ஆத்திரம் அதிகரித்துக் கொண்டே வந்தது. சந்திரசேகர பாண்டியரின் நாட்டையும் கைப்பற்றி ஆளவேண்டுமென்று ஆசைப்பட்டவன் தன்னுடைய சோழ நாட்டில் கூட முறையான ஆட்சி செலுத்தவில்லை என்பதைக் கண்டுகொண்டார். சோறுடைய சோழ நாட்டில் ஏற்பட்டிருந்த பெரும் பஞ்சத்துக்கு அவனுடைய சீர்கெட்ட ஆட்சியே காரணம் என்று நாகம நாயகருக்குத் தோன்றியது.

உறையூரின் காவிரிப் படுகையில் வீர சோழனையும் அவனுடைய சிற்றரசர்களான அதிகாரிகளையும் போர்க் களத்தில் சந்தித்துத் தம்முடைய ஆத்திரத்தை யெல்லாம் அவர் தீர்த்துக் கொண்டார். தமிழ் நாட்டின் ஆட்சிப் பண்புக்கே இழுக்குத் தேடியவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்த பின்பு அவருடைய படை வீரர்கள் உறையூருக்குள் புகுந்தார்கள். அங்கு ஆட்சி முறையைச் சீர்ப்படுத்துவதற்காகத் தம்முடன் வந்திருந்த அதிகாரிகள் சிலரை வீரர்களுடன் விட்டுவிட்டு, அவர் சந்திரசேகர பாண்டியரோடு மதுரைக்குச் செல்லத் திட்டமிட்டார். அதற்கு முன்னதாக அவருக்குச் செய்தியை விஜயநகரத்துக்கு அனுப்ப வேண்டுமென்று தோன்றியது. அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான ராமபத்திர நாயக்கரை அங்கு அனுப்பி வைத்தார். சக்கரவர்த்தி, சாளுவ நரசிம்மர், விசுவநாதன் இவர்களுக்குத் தனித்தனியே ஓலை கொடுத்தனுப்பி யிருந்தார்.



''சார்! உங்களுக்குத் தந்தி வந்திருக்கு!''

விசுவநாதனிடம் அவர் எவ்வளவு ஆழ்ந்த பாசம் கொண்டிருந்தார் என்பது ராமபத்திர நாயக்கருக்கே அப்போதுதான் விளங்கியது. அவனுடைய உடல் நலம், அவனைச் சக்கரவர்த்தியும் அமைச்சரும் நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்களா என்ற விஷயம், அவனுக்கு அரண்மனையில் உள்ள செல்வாக்கு, இவ்வளவையும் கவனித்து வரச் செய்தார் நாகம நாயக்கர். ராமபத்திர நாயக்கர் விசுவநாதனின் வளர்ச்சியையும், ஆற்றலையும் நன்கு அறிந்தவர். 'என்றாலும் அவனை இவர் இன்னும் குழந்தையாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார். நெடுங்காலத்துக்குப் பிறகு பிறந்த அவருடைய ஒரே குமாரனல்லவா? அதனால்தான் அவனிடம் இப்படி உயிரையே வைத்திருக்கிறார் நாகம நாயக்கர்!' என்று நினைத்துக் கொண்டார் ராமபத்திர நாயக்கர்.

விஜயநகரத்துக்கு ராமபத்திரர் திரும்பிய போது ஏனோ அந்த நகரத்தில் ஒரு பனிப் படலம் சூழ்ந்திருப்பது போன்ற ஒரு மன மயக்கம் அவருக்கு ஏற்பட்டது. நகரத்தின் வழக்கமான கம்பீரத்திலும் சுறுசுறுப்பிலும் ஒரு தளர்ச்சி தென்படுவதாக அவருக்குத் தோன்றியது. தம்முடைய வீட்டுக்குச் சென்று, தமது மனைவி மக்களைச் சந்தித்துக் காரணம் விசாரித்தார். கிருஷ்ணதேவ ராயருக்கு உடல் நலம் இல்லையென்றும் அவரை வெளியிலே நகரத்தில் இப்போது காண முடிவதில்லை என்றும் அவர்கள் கூறினார்கள். அரண்மனைக்குச் செல்பவர்கள் கூட அவரை நேரில் சந்திக்க முடியாமல் திரும்புகிறார்கள் என்று ராமபத்திரர் கேள்வியுற்றார். சக்கரவர்த்திக்கு என்ன காரணத்தால் உடல்நலமில்லை என்பதை மட்டிலும் யாராலும் தெளிவாகக் கூற முடியவில்லை.

அரண்மனைக்கு ராமபத்திர நாயக்கர் சென்றபோதும் அங்கே வழக்கம்போல் கலகலப்பு நிறைந்திருக்கவில்லை. சக்கரவர்த்தியைக் காண்பதற்காக வந்து காத்திருக்கும் அமர நாயக்கர்களின் சிவிகைகள் வெளி வாயிலில் நிறைந்திருப்பதுண்டு. வாயிலில் சிவிகைகளையோ, உள் மண்டபத்தில் அமரநாயக்கர்கள் கூட்டத்தையோ ராமபத்திரரால் காண முடியவில்லை. கட்டுக்காவல் மட்டிலும் வழக்கத்தை விட அதிகமாகவே இருந்தது.

காவலர் தலைவனிடம் ராமபத்திர நாயக்கர் தாம் ஓலையோடு வந்திருப்பதைச் சொல்லி, சக்கரவர்த்தியை நேரில் காண வேண்டுமென்று தெரிவித்தார். அவருக்கு நன்கு பழக்கமானவன்தான் காவலர் தலைவன். என்றாலும் அவரிடம் பணிவோடு சக்கரவர்த்தியை நேரில் காண முடியாதென்றும் அவர் திருமலாதேவியின் மாளிகையில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினான். நாகம நாயக்கரிடமிருந்து முக்கியமான செய்தியோடு அவர் வந்திருப்பதாகக் கூறவே, அவரை அழைத்துக் கொண்டு அரண்மனையிலுள்ள அலுவலகத்துக்குச் சென்றான். அமைச்சர் சாளுவ நரசிம்மர் இன்னும் அங்கு வந்து சேரவில்லை. விசுவநாதன் அரியநாத முதலியாருடனும் பணியாட்களுடனும் இருந்து அன்றைய அலுவல்களைச் சுறுசுறுப்போடு கவனித்துக் கொண்டிருந்தான்.

ராமபத்திர நாயக்கரைக் கண்டவுடன் அவனுக்குத் தன் தந்தையாரையே நேரில் கண்டதுபோல் மகிழ்ச்சி ஏற்பட்டது. அவரை அழைத்து அருகே அமர்த்திக் கொண்டு நாகம நாயக்கரின் நலனைப் பற்றி ஆர்வத்தோடு விசாரித்தான். முதுமைப் பருவத்தில் நெடுந்தொலைவுக்குப் படையெடுத்துச் சென்ற அவரது நிலையை அறிந்து கொள்வதில் அவனுக்கு அளவற்ற துடிப்பிருந்தது. விவரங்களனைத்தும் கூறிய ராமபத்திர நாயக்கர், மெல்லச் சிரித்துக் கொண்டே, ''உங்கள் இருவரில் யார் மற்றவர் மீது அதிகமான அன்பு வைத்திருக்கிறீர்கள் என்பதையே என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை'' என்று பூரிப்போடு கூறினார்.

''தந்தையாரின் வெற்றியைப் பற்றி எனக்குச் சிறிதும் சந்தேகம் ஏற்படவில்லை. ஆனால் வயது மிகுந்த காலத்தில் அவர்கள் தங்களது நலனைக் கவனித்துக் கொள்ளாமல் புறக்கணித்து விடுவார்களே என்ற கவலைதான் எனக்கு'' என்றான் விசுவநாதன்.

''நீங்களோ உங்கள் தந்தைக்கு வயதாகி விட்டது என்ற காரணம் கூறி அவர் மீது அன்பைச் சொரிந்து கொண்டிருக்கிறீர்கள். அவர்களோ உங்களை இன்னும் சிறு குழந்தையாகவே பாவித்து அன்பைப் பொழிகிறார்கள். இது எனக்கு வியப்பாகவும் பெருமையாகவும் இருக்கிறது. தசரதருக்கு ராமபிரான் குமாரராகப் பிறந்ததுபோல் நீங்கள் அவருக்குப் பிறந்திருக்கிறீர்கள்'' என்றார் ராமபத்திர நாயக்கர். அரியநாத முதலியாருக்கும் அதுவேதான் எண்ணம். அவரும் ராமபத்திர நாயக்கருடன் சேர்ந்து கொண்டு விசுவநாதனைப் பரிகாசம் செய்தார்.

விசுவநாதன் தன் தந்தையிடமிருந்து தனக்கு வந்திருந்த ஓலையை ஒரு முறைக்கு இரு முறை படித்து மகிழ்ந்தான். அவர் சக்கரவர்த்திக்கு அனுப்பிய ஓலையை ராமபத்திர நாயக்கர் நேரில் கொடுக்க விரும்பியபோது தான் அவனுக்குச் சிறிது தயக்கம் ஏற்பட்டது.

''சிறிது நேரம் இங்கேயே தங்கியிருங்கள். சக்கரவர்த்தியார் பெரிய தேவியாரின் மாளிகையில் இருக்கிறார்கள். அவர்களிடம் இந்த ஓலையைக் கொடுத்து மறுமொழி பெற்று வருகிறேன்'' என்றான்.

ராமபத்திர நாயக்கருக்கு இது சற்று ஏமாற்றத்தைக் கொடுத்ததென்றாலும், இதையும் அவர் அந்தச் சூழ்நிலையில் எதிர்பார்க்தாமலில்லை. ஓலையுடன் விசுவநாதன் புறப்பட்டதும் அரியநாத முதலியாரிடம் விவரம் கேட்டார் ராமபத்திர நாயக்கர்.

''சில மாதங்களுக்காவது சக்கரவர்த்திகள் முழுமையான ஓய்வு பெற்றுக் கொள்ளவேண்டும் என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள். மருத்துவர்கள், அரசமா தேவியாரைத் தவிர, அரசியல் ஆலோசனைகளுக்காக இப்போது அமைச்சரும் விசுவநாதனுமே அவர்களைக் கண்டு வருகிறார்கள். எப்போதாவது அச்சுதராயர் சென்று வருவார். மற்ற பொறுப்புக்களையெல்லாம் இப்போது இவர்கள் இருவருமே கவனித்துக் கொள்ளுகிறார்கள்'' என்றார் அரியநாத முதலியார்.

ராமபத்திர நாயக்கருக்குச் சக்கரவர்த்தியின் உடல் நலம் கேட்டு மனம் துயரமுற்றதென்றாலும், விசுவநாதனுக்குப் பொறுப்பு உயர்ந்து விட்டதில் அவர் மகிழ்ச்சியடைந்தார். அமைச்சரோடு சரிசமமாக அவன் உயர்ந்துவிட்டான் என்ற நற்செய்தியை அவர் இப்போது நாகம நாயக்கரிடம் கூற முடியும். ராமராயர் விஜய நகரத்தில் இருந்திருந்தால் ஒருவேளை அவரே அமைச்சருடன் இருந்து காரியங்களைக் கவனிக்கக் கூடும். அவரை வடக்கே அனுப்பிவிட்டு அவருக்குப் பதிலாக விசுவநாதனிடம் சாம்ராஜ்யத்தை விட்டிருக்கிறார் போலும் சக்கரவர்த்தி.

விசுவநாதன் திருமலா தேவியாரின் மாளிகைக்குச் சென்று தன் வரவை அறிவித்தான். உடனடியாகப் பணிப் பெண்கள் அவனை அழைத்துச் சென்று சக்கரவர்த்தியின் அருகில் விட்டு விட்டு, அங்கிருந்து விலகிச் சென்றனர். அரசியல் கடமைகள் பற்றி அவர் பேசும் போது அவருடைய தேவியார்கூட அருகில் இருக்கும் வழக்கமில்லை.

கிருஷ்ணதேவராயர் படுக்கையில் படுத்திருந்தார். இயற்கையாக அவர் முகத்தில் காணப்படும் அந்தப் பொலிவு அப்படியே தான் இருந்தது. ஆனாலும் உடல் சோர்ந்து கிடப்பதை அவரால் மறைக்க முடியவில்லை.

நாகம நாயக்கரின் ஓலையைக் கண்டவுடன் அவர் விழிகளில் புத்தொளி மின்னியது. ''தெற்கிலிருந்து நல்ல செய்தியை அனுப்பியிருக்கிறார் உன் தந்தை. வடக்கேதான் நிகழ்ச்சிகள் நம்முடைய சக்திக்கும் மீறியதாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் நமது சாம்ராஜ்யம் உறுதியோடு விளங்குவதற்கான முன்னேற்பாடு நடந்திருக்கிறது. என் வாழ்த்துக்களைச் சொல்லி அவருக்கு ஓர் ஓலை எழுது!''



''என்னய்யா, சபா கச்சேரிக்கு ரூபாய் ஆயிரத்துக்கு செக் கொடுத்திருக்கிறேன். மறுபடியும் தலையைச் சொறிகிறீரே!''
''ஒண்ணுமில்லே. தேங்காய் மூடி....''

உடனடியாக ஓலையும் கையுமாக இருந்து எழுதத் தொடங்கினான் விசுவநாதன். மதுரையைச் சந்திரசேகர பாண்டியரிடம் கொடுத்து விட்டு அவர் உடனடியாக அவசரமாகத் திரும்ப வேண்டாமென்றும், பாண்டியரின் ஆட்சி அங்கே நிலைத்து நாடு வலிமை பெறும் வரையில் அவர் பாண்டியருக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் எழுதச் சொன்னார். ''உங்களுடைய நிர்வாகத் திறமையைப் பாண்டியருக்கும் அங்குள்ள அதிகாரிகளுக்கும் கற்றுக் கொடுத்து, அந்த நாட்டின் வளர்ச்சிக்கான வழி வகைகளை அவர்களுக்குச் சுட்டிக் காட்டுங்கள். செல்வச் செழிப்பிலும் படை பலத்திலும் அது நம்மைப் போலவே சிறந்து விளங்க வேண்டும். அதற்கான அடிப்படைகளை அங்கே அமைத்து விட்டுத் திரும்பி வாருங்கள்'' என்று குறிப்பிட்டார்.

மாற்றோலையைப் பெற்றுக் கொண்டு விசுவநாதன் அரண்மனைக்குத் திரும்பினான். அவன் திரும்புவதற்குள் அங்கே அமைச்சர் சாளுவ நரசிம்மர் வந்திருந்தார். அவரும் ராமபத்திர நாயக்கரும் மிகவும் நெருக்கமாக அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அமைச்சரின் குரல் அடுத்தாற்போல் இருப்பவர்களால் கேட்க முடியாத அளவுக்கு அவ்வளவு ரகசியம் நிறைந்ததாக இருப்பதாக விசுவநாதனுக்குத் தோன்றியது.

விசுவநாதனைக் கண்டவுடன் தமது பேச்சைப் பாதியில் நிறுத்தி விட்டு, ''எங்கே, சக்கரவர்த்திகளிடம் மறுமொழி பெற்றுக் கொண்டு வந்து விட்டாயா?'' என்று அவன் கரத்திலிருந்த ஓலையை வாங்கிப் படித்தார் அமைச்சர்.

விசுவநாதனுக்கு அமைச்சரின் செயல் இனம் புரியாத சஞ்சலத்தை எழுப்பியது. (தொடரும்)



வயது ஆக ஆக உடல் கனம் கூடாது

உங்களுக்கு நாற்பது வயதுதானே இருக்கும். ஆனால் பார்ப்பவர்கள் அதற்கும் மேலாகத்தானே மதிப்பிடுகிறார்கள்? உங்களுக்கும் வயதுக்கு மீறிய களைப்பு மேலிடுகின்றனதல்லவா?

உங்களுடைய உடல் கனம் சமீபத்தில் அதிகரித்து விட்டதுதான் இதற்குக் காரணம். எடையை எப்படிக் குறைப்பது என்று கவலைப்பட வேண்டாம் அபாயமற்ற முறையில் எடையைக் குறைத்து ஆரோக்கியமுடன் திகழ லிமிகால் அருந்துங்கள்.

போஷாக்குள்ள பரிபூர்ண பதிலுணவு

லிமிகால் உடலுக்கு அத்தியாவசியமான போஷாக்குச் சத்துக்கள் — கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துக்கள், புரோட்டீன்கள், விட்டமின்கள், மினரல்கள்—சரியான அளவில் சாஸ்திரிய முறையில் கொண்டது. லிமிகால் பசியைச் சமனம் செய்து, எடையைக் குறைத்து, ஆரோக்கியமாக வாழ வழிகாட்டும் மரக்கறி உணவு. ஒரு வேளை அளவு லிமிகால் (4 மேசைக்கரண்டி பவுடர் அல்லது 6 பிஸ்கட்டுகள்) ஒரு பரிபூர்ண பதிலுணவு; ஆனால் குறைந்த கலோரிகள் கொண்டது.

சுறுசுறுப்புடன் சுகமாய் வாழுங்கள்


உங்கள் எடை அளவுக்கு அதிகமாய் இருந்தால் (உங்கள் எடை என்ன என்று சோதித்துப் பாருங்கள்) உணவுக்குப் பதிலாக லிமிகால் மட்டுமே அருந்தி விரைவில் எடையைக் குறையுங்கள்—இந்த முறையில் ஒரே வாரத்தில் 3 லிருந்து 4 பவுண்டுகள் வரை குறைக்கலாம்! உங்கள் தற்போதைய எடை சரியான அளவிலிருந்து ஆனால் இனிமேலும் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள விரும்பினால் தினம் ஒரு வேளை மட்டுமே லிமிகால் அருந்தி உடல் கனம் ஏறாமல் ஆரோக்கியமுடன் திகழலாம்.

லிமிகால் பவுடர் சாக்லேட், வாழைப்பழம், ஆரஞ்சு ஆகிய மூன்று இன்சுவைகளில், 225 கிராம்கள் மற்றும் 1.6 கிலோகிராம் ஆகிய இரு சைஸ் டின்களில் கிடைக்கிறது. லிமிகால் பிஸ்கட்டுகள் 27 கொண்ட டின்னில் கிடைக்கின்றன.

எடை குறைந்து எடுப்பாய் விளங்க லிமிகால்—போஷாக்குள்ள பரிபூர்ண பதிலுணவு

ஸாராபாய் கெமிகல்ஸ், P.B 1688, பம்பாய்-1





வீட்டை நெருங்கும்போதே மேளச் சத்தம் கேட்டது. உள்ளே கூடத்தின் மத்தியில் நாற்காலியில் சொர்ணம் கல்யாணப் பெண்ணைப் போல் அமர்ந்திருந்தாள். அவளுடைய தோழிகள் அவளைச் சுற்றி வட்டமாக அமர்ந்து பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தார்கள். சமையலறையிலிருந்து அவ்வப்போது வந்த ருசியான தின்பண்டங்களைத் தின்பதற்காகப் பாட்டும் பேச்சும் சற்று ஓய்ந்தன. பிறகு மீண்டும் தொடர்ந்து அவரவர்கள் வீடு செல்லும் வரை நீடித்தன.

மறுநாளும் எல்லோரும் வந்தார்கள். அதே போல் கொண்டாடினார்கள். மூன்றும் நாள் புட்டு சமைக்கப்பட்டது.

நான்காம் நாள் கொண்டாட்டம் உச்சத்தை அடைந்தது. சொர்ணம் மங்கள ஸ்நானம் செய்விக்கப்பட்டாள். அவளுடன் இருந்த பெண்களுக்கும் எண்ணெய் தேய்க்கப்பட்டது. ஏழு சுமங்கலிகள் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து ஆசீர்வதித்தனர்.

எல்லாம் முடிந்து விருந்தினர்கள் விடைபெற்றுக் கொண்டு சென்ற பிறகு புரோகிதர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

"இந்த முறை அவர்கள் நிந்திக்க வரவில்லை. என் தாயார் துணிந்து செய்த காரியத்துக்கு நன்றி கூற வந்திருந்தார்கள்" என்று என்னிடம் இப்போது கூறினார் சகோதரி. "அவர்கள் கூறியது இன்னும் நினைவிருக்கிறது. 'நீங்கள் தைரியமாக இவ்வாறு செய்ததற்கு நாங்கள் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறோம். ஏழைப் புரோகிதர்களாகிய நாங்கள், ஊருக்குப் பயந்து எங்கள் பெண்கள் பெரியவர்களாவதற்கு முன்பே கல்யாணம் செய்து கொடுக்க அவசரப்பட்டு அதற்காக அக்கிரமமான வட்டிக்குக் கடன் வாங்கிக் கஷ்டப்படுகிறோம். நீங்கள் இப்பொழுது வழிகாட்டி விட்டீர்களே! இனி எல்லோரும் இவ்வாறு செய்வார்கள்' என்றார்கள்."

முதலில் வெகுசிலர்தான் விசாலாட்சியின் வழியைப் பின்பற்றினர். அவளுடைய நண்பர்கள் வட்டாரத்துக்குள்கூட, பண விஷயத்துக்காக மட்டுமல்லாமல் வேறு சில காரணங்களுக்காகவும் தம் பெண்களின் கல்யாணத்தைத் தள்ளிப் போட விரும்பியவர்கள் பலர் உண்டு. ஆயின் தைரியமாகத் தள்ளிப் போடத் துணிந்தவர்கள் வெகுசிலரே.

பெண்களுடைய உடலில் தாய்மைப் பேறு அளிக்கும் உள் உறுப்புக்கள் முழு வளர்ச்சியடையு முன்பே அவர்கள் தாயாகி விடுவது அவர்கள் ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதிக்கக் கூடியது என்று அவர்கள் சமூகச் சீர் திருத்தவாதிகளுடன் சேர்ந்து ஒத்துக் கொள்ளலாம். ஆனால் பிராமணக் குடும்பங்களில் குழந்தை விவாகங்கள் நூற்றுக் கணக்கான வருஷங்களாக நடந்து வருகின்றன. இந்த மரபைத் தகர்த்து விட்டால் அது எதில் போய் முடியுமோ என்ற பயம் தவிர்க்க முடியாததாக இருந்தது.

குழந்தைப் பிராய விவாகங்கள் சாஸ்திரிகமானதல்ல என்றும் தர்ம சாஸ்திரத்தில் இந்தப் பழக்கத்துக்கு ஆதாரம் ஏதும் இல்லையென்றும் வாதித்த படித்த பண்டிதர்கள் இருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் தாங்களும் அப்பண்டிதர்களைப் போலவே படித்தவர்கள்தான் என்று கூறிய பழங்கால ஆசாரசீலர்களான மனிதர்கள் அப்பண்டிதர்களின் வாதத்தைக் கண்டித்தனர். குழந்தைப் பிராய விவாகங்கள் மறைந்துவிடுமாயின் சமூகத்தின் அஸ்திவாரமே தகர்ந்து விடும் என்று அவர்கள் அடித்துச் சொன்னார்கள்.

தாற்காலிகமாக அதைத் தன்னுள்ளேயே வைத்துக் கொண்டிருந்தாளே தவிர, சுப்புலக்ஷ்மிக்கு இந்த விஷயத்தைக் குறித்துத் தீவிரமான அபிப்பிராயம் உருவாகி யிருந்தது. அவள் சிந்தித்துப் பார்த்ததில், ஹிந்து புராணங்களில் கதாநாயகிகள் எவரும் சிறு பிராயத்தில் மணந்திருக்கவில்லை. சீதை, திரௌபதி முதலியவர்கள் கல்யாணம் ஆவதற்குள் மங்கைப் பருவம் எய்தி விட்டிருந்தனர். மண வாழ்க்கையின் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவும், தங்களுக்கேற்ற துணைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் திறமை பெற்றிருந்தனர். அதுதான் சரி, அவ்வாறுதான் இருக்க வேண்டும் என்பது சுப்புலக்ஷ்மியின் தீர்மானம்.

குழந்தைப் பிராயக் கல்யாணங்கள் இல்லாமல் போனால் விதவைகளின் எண்ணிக்கையும் குறைந்து விடும். தவிரவும், சந்தோஷமாக மண வாழ்க்கை நடத்தும் தம்பதிகள் வெகு சீக்கிரம் பெற்றோர்களாக ஆகாமல் இருந்தால் அவர்களுக்கு அநேக கவலை, கஷ்டங்கள் நேராமல் தவிர்க்கப்படலாம் என்றும் அவள் கண்டிப்பாக நம்பினாள்.

சாவித்திரியின் பெண் காந்தாமணி நித்தியாவைவிட மூன்று மாதமே இளையவள். அவள் மிகவும் ஆரோக்கியமான சமர்த்துப் பெண். சாவித்திரி, பாலம் இருவருமே பிரசவத்தின்போது சொல்லி முடியாத வேதனைக்கு, இருதயமே வெடித்து விடும் போன்ற அத்தனை துன்பத்துக்கு ஆளானார்கள். சுப்புலக்ஷ்மி, சித்தி, அந்த இளம் விதவைகள் எல்லோரும் அரச மரத்து வீட்டை விட்டுச் சென்ற சில மாதங்களுக்கெல்லாம் பாலத்துக்கு இன்னொரு பிள்ளை பிறந்தான். சங்கர் என்று அவனை அழைத்தார்கள். இந்த முறை பாலத்தைச் சென்னை வைத்தியக் கல்லூரியின் முதல் பெண் பட்டதாரியான டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி பார்த்தாள். சுப்புலக்ஷ்மியின் மாணவியான நல்லமுத்து ராமமூர்த்தியின் சகோதரி இந்த டாக்டர். டாக்டர் ரெட்டி, தானே இன்னும் சில மாதங்களில் தாய்மைப் பேறு அடையவிருந்தாள். பாலத்தினுடைய வேதனையைப் பார்த்ததும் அவளே ரொம்பச் சங்கடப்பட்டு நிலைகுலைந்து விட்டாள். வீட்டுக்குத் திரும்பி விட்டாள். சித்திதான் பிரசவத்தைப் பார்க்க வேண்டி வந்தது. அவள் ஒருத்திதான் எத்தனை காரியங்களைச் சுமத்தினாலும் அதிகப் படியாக நினைக்காமல் எதையும் இலகுவாகச் செய்து முடித்து விடும் திறன் படைத்தவள் போலிருந்தாள்.

கணவன் வாய்ப்பதில் பாலம், சாவித்திரி இருவருமே பாக்கியசாலிகள் தாம். அவர்களுடைய மண வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாய் இருந்தது. இளமையில் கல்யாணம் செய்துகொள்வது ஆயுள் முழுவதும் ஆனந்தமாக இருப்பதற்கு நல்ல வழி என்று அடிக்கடி கூறப்பட்டு வந்தது. ஏனென்றால், நன்றாக வளர்ந்துவிட்ட மங்கையை விடக் குழந்தைப் பிராய மனைவி, தான் கணவருக்கும் புக்ககத்தாருக்கும் வேண்டியதைச் செய்ய ஏற்றவாறு தன் இயல்புகளை எளிதாக மாற்றிக் கொள்ள முடியும். இப்படியெல்லாம் மனிதர்கள் பேசுவதைக் கேட்டால் சுப்புலக்ஷ்மிக்கு மறுத்துப் பேசத் தோன்றும். என்றாவது ஒரு நாள் வாய் விட்டுத் தன் அபிப்பிராயத்தைக் கூற வேண்டும் என்று அவள் நிச்சயித்துக் கொண்டாள். இப்பொழுது அவ்வாறு செய்வது பெரும் தவறாகி விடும். எல்லோரும் தன்னை ஆசாரத்தைத் துறந்தவள் என்று நினைத்து விடுவார்கள்.

இதைவிட உண்மைக்கு மாறுபட்டது வேறு இருக்க முடியாது. சின்னஞ்சிறு வயதில் இருந்தது போலவே இப்பொழுதும் சுப்புலக்ஷ்மி ஆழ்ந்த பக்தியுடன் இருந்தாள். நல் வாழ்க்கைக்கு



மனித குலத்தின் சேவையில் . . .

இருப்பிடம்

வசிப்பதற்கும் . . . வேலை செய்வதற்கும் தேவை இருப்பிடம். இந்த அத்தியாவசியமான வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்ய, தற்போதைய 439 மில்லியன் ஜனத்தொகை கூடிய சீக்கிரத்தில் 470 மில்லியன் ஜனத்தொகையாக அதிகரிக்கும் என்ற அடிப்படையின் மேல், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலும், மற்றும் அடுத்து வரும் ஐந்தாண்டு திட்டங்களிலும் வீடு கட்டும் கொள்கைகளும், திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இருப்பிட அபிவிருத்திக்கும், நகர அபிவிருத்திக்கும், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் 140 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்ததிட்ட முடிவில் பலதரப்பட்ட, வீடு கட்டும் திட்டங்களின் கீழ் 9 லக்ஷம் வீடுகள் கட்டப்பட வேண்டும். இந்த மகத்தான தேசியப் பணியில் திறமையான ஸிமெண்ட் ஒரு முக்கிய பங்கு கொண்டுள்ளது.

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாங்கள் மிகுந்த பெருமையுடன், நாட்டை வளரச்செய்யும் காரியங்களில், சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் ஸிமெண்ட், சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் போஸ்ஸோலானா ஸிமெண்ட் உற்பத்தி செய்வதின் மூலம் எங்கள் பங்கை பூர்த்தி செய்து வருகிறோம்.

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்.

சென்னை-2

தொழிற்சாலைகள் : சங்கர்நகர், திருநெல்வேலி மாவட்டம் – சங்கரி மேற்கு, சேலம் மாவட்டம்

Criterion-ICT-127 TM

வேண்டியதனைத்தும் ஹிந்து தர்மத்தில் இருந்தன என்பதில் அவளுக்குச் சந்தேகமே இல்லை. தன் பாதுகாப்பில் இருந்த பெண்கள் மாறாத பக்தியுடன் ஆண்டவனைத் தொழ வேண்டுமென்றும், தன்னலமற்ற முறையில் தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் அவள் விரும்பினாள். உண்மையான எல்லாக் கருத்துக்களையும் தாராள மனத்துடனும் சகிப்புத் தன்மையுடனும் வரவேற்கவும் நியாயமான விவேகமான முடிவுகளுக்கு வர முடியாதவர்களிடம் அனுதாபத்தோடு இருக்கவும் வேண்டும் என்று எண்ணினாள். வேதாகமங்களை அந்த இளம் விதவைகள் படிக்க வேண்டும்; முன்னோர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் மேற்கொண்டு அனுசரித்து வந்த நியமங்களையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும்; தொன்றுதொட்டு ஆண்களும் பெண்களும் கடவுள் வழிபாட்டுக்காகச் செய்துவந்த அருமையான சடங்குகளை, மேற்கொண்ட விரதங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் விரும்பினாள்.

இந்த விஷயத்தில் சித்தியைவிட மேலான குரு யாருக்கும் கிடைத்திருக்க முடியாது. சித்தி படித்தவள் மட்டுமல்ல, மிகவும் வைதீகமானவளும்கூட. பிராமணர்களிடம் உள்ள சில பழக்க வழக்கங்கள் சுத்தத்தைக் கருதியே உருவாக்கப்பட்டவை. சிலவற்றைக் காலத்துக்கேற்றபடி மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்றாலும், அன்றாட வாழ்க்கைக்குள்ள நியமங்களைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம் என்று சித்தி அந்தப் பெண்களுக்கு விளக்கினாள்.

அந்த விதவைகள் இல்லத்தில் நடைமுறையில் இருந்து வந்த இந்தச் சம்பிரதாயங்களெல்லாம் எல்லோருக்கும் நன்றாகத் தெரிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பிராமண விதவைகள் இல்லத்தின் மீதிருந்த தவறான அபிப்பிராயம் குறைவதாகக் காணோம். சகோதரி சுப்புலக்ஷ்மியிடமும், அவளுடைய சித்தியிடமும் விதவைப் பெண்களை ஒப்படைக்க இன்னமும் பெற்றோர்கள் தயங்கினார்கள். ஆறு மாதங்கள் கழிந்த பிறகும் ஆதி காட்டேஜில் பத்துப் பெண்கள்தாம் இருந்தனர்.

இது ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. இந்த ஏமாற்றம் மிகவும் அதிகமாக ஒரு காரணமும் இருந்தது. அரசினர் இதுவரையில் மூன்று பேர்



"அடியே, இங்கே வந்து பாரேன்! ஆள் உயரத்துக்குக் கரும்பு வாங்கி வந்திருக்கிறேன்!"

களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தனர். இனி பத்துப் பேர்களுக்குக் கொடுப்பது எனத் தீர்மானித்திருந்தனர். ஓர் உபகாரச் சம்பளத்தின் மதிப்பு மாதத்துக்குப் பதினைந்து ரூபாய்தான். சித்தி மிகவும் சாமர்த்தியமான சிக்கனப் பேர்வழியாகையால் இச்சிறு தொகையே ஒரு பெண்ணுக்கு உணவும் உடையும் அளித்து, கைச் செலவுக்கும் ஆகி, கோடைவிடுமுறைக்கு வீடு செல்ல ரயில் கட்டணத்துக்கும் போதுமானதாக இருந்தது. பி. டி. பள்ளிக்கூடத்தில் சேரும் அளவு தகுதி பெறும் வரையில் எந்தப் பெண்ணுக்கும் அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளிக்காதுதான் என்றாலும் இந்த உதவித் தொகையை நினைத்தாவது சில ஏழைப் பெற்றோர்கள் தம் பெண்களை விதவை இல்லத்துக்கு அனுப்பி வைக்க இசையலாமல்லவா ?

மிஸ் லின்ச்சினுடைய அலுவல்கள் அந்த அம்மாளைச் சென்னை ராஜதானியின் கிழக்குப் பிரதேசங்களுக்கு அடிக்கடி அழைத்துச் சென்றன. இல்லத்தில் சேரக் கூடிய இளம் விதவைகளைத் தேடிப் பிடிக்க இந்தப் பயணங்களைப் பயன்படுத்த அவள் தீர்மானித்தாள்.

முதலில் சிறிதும் வெற்றி காண முடியவில்லை. அப்போதும் சரி, அதன் பிறகும் சரி, தன்னுடைய பேரார்வமே எல்லோரையும் அச்சமுறுத்தி விட்டது



போலீஸ்: காரிலே இருந்த ஆளு எங்கே?
ஒருவர்: அவர் இன்ஷுரிர் செஞ்சுக்கப் போயிருக்காங்க.

என்பதை அவள் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

அவள் சென்ற பல சிறிய ஊர்களிலும், கிராமங்களிலும் அவள் ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி என்ற அளவிலேயே அனைவருக்கும் புதுமையாகத் தென்பட்டாள். ஒரு பெண்மணி அரசாங்க உத்தியோகம் பார்ப்பது அவர்கள் அறிவுக்குப் புரிபடாத விஷயமாக இருந்தது. அவர்களால் இதை நம்பவே முடியவில்லை. நெடிதுயர்ந்து வளர்ந்தும் அடர்த்தியான வைக்கோல் நிறத் தலைமயிருடனும் விளங்கிய மிஸ் வின்ச், உள்ளூரில் முக்கியமான பிராமணர்களை அழைத்து வரும்படி பணித்துவிட்டு சப் டிவிஷனல் அசிஸ்டெண்டின் மேஜையண்டை அமர்ந்திருந்த காட்சியே பார்ப்போரைப் பயமுறுத்தியது.

அநேக பேர்கள் வந்து கூடினபிறகு, "இந்த ஊரில் உள்ள பிராமணக் குடும்பங்களில் விதவைகள் யாராவது இருக்கிறார்களா?" என்று அவள் தன்னுடைய அதிகாரத் தொனியுடன் கூடிய அழுத்தமான ஆணித்தரமான குரலில் கேட்டாள்.

இப்படிக் கேட்கும் போது அவள், பெண்ணாக லட்சணமாகப் பார்வையைத் தாழ்த்த மாட்டாள். அதற்கு மாறாக அவள் அந்த ஆடவர்களைத் தனக்குத் தெரிந்த ஓர் உண்மையை அவர்களால் அப்போது மறுக்க முடியுமா என்று சவால் விடுவது போல் நேருக்கு நேராக நோக்குவாள்.

வந்தவர்களுள் மூத்தவராக இருப்பவர் தலைவராக இருந்து கொண்டு பதிலளிக்க முன்வருவார். "இல்லை, இல்லை. இந்தக் கிராமத்தினர் எல்லோரும் பாக்கியசாலிகள். இங்கு இளம் விதவைகளே கிடையாது" என்று கூறுவார்.

'இவள் ஏன் இதையெல்லாம் தெரிந்து கொள்ள விரும்புகிறாள்? இதற்கு ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டும்; சாதாரணமாக உள்நோக்கம் என்பது கெட்டதாகத்தான் இருக்கும்.

'இளம் விதவைகளுள் அழகானவர்களைப் பொறுக்கி அழைத்துக் கொண்டு போய் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்த மனிதர்கள் கூறுவார்களே அது போல் 'சாவிலும் கேடு கெட்ட வாழ்க்கை'யில் ஈடுபடுத்திவிடுவாளோ?'


விதவைகள் இல்லத்தைப் பற்றி விவரித்துக் கூறி, மிகவும் மதிப்பு வாய்ந்த குடும்பத்தைச்சேர்ந்த இரண்டு பிராமண விதவைகள்தான் அதனை மேற்பார்வையிட்டு வருகின்றனர் என்று அவள் விளக்கியதும் பயன்படவில்லை. அவள் கூறியனவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அவளை நம்பவில்லை. தப்பித் தவறி ஓரிருவர் நம்பினாலும் அவரவர்களுக்குத் தங்கள் பெண்கள் தங்கள் வீட்டிலேயே உதவிக்குத் தேவையாயிருந்தார்கள். பெண்ணுக்கு ஒரு ஊனியும் வராது என்று தெரிந்தாலும்கூட, புடவைகளும் பூவும் நகையும் வாங்கித் தர வேண்டிய தொந்தரவு இல்லாமல் ஒரு வேளையே உணவு உண்டு, இட்ட வேலைகளையெல்லாம் செய்யக் கூடிய ஒரு பெண்ணை அவளுடைய உறவினர்களால் எளிதில் விட்டுவிட முடியுமா?

மிஸ் வின்ச்சினால் அவர்களைத் திருப்திப்படுத்த முடியவில்லை. பல சந்தர்ப்பங்களில் தான் பேசிக் கொண்டிருக்கும் போதே அதை யாரும் நம்பவில்லை என்பதை அவள் கண்டு கொள்வாள். இதை உணர்ந்ததும் அவள் குரல் கடுமையாகிக் கொண்டு வரும். விவரம் தெரியாத குழந்தைகளைச் சந்தோஷமாக வாழ விடாமலும், உலகில் பயன் உள்ளவர்களாக இருக்க விடாமலும் தடுப்பது எவ்வளவு தவறு என்று எடுத்துக் கூறுவாள். விஷயம் இந்த அளவுக்கு வளர்ந்து விட்டதும் ஒரு தகப்பனார் இவள் யார் எனக்கு உபதேசம் செய்ய என்பது போல் எண்ண ஆரம்பிப்பார். ஆத்திரம் அடைந்து மரியாதைக் குறைவாகத் திருப்பிப் பேசுவார். மிஸ் வின்ச்சும் தன் பிரசித்தி பெற்ற ஐரிஷ் கோபத்தைக் காட்டி வெகுண்டு எழுவாள். இரண்டு தரப்பினர்களும் கடச்கடப் பேசிக் கொள்வார்கள். இறுதியில் அந்த ஐரிஷ் பெண்மணி தோல்வியுற்றுத் திரும்புவாள். (தொடரும்)




✿ திருவல்லிக்கேணியில் வேத தர்மசாஸ்திர சம்மேளனத்தைப் புதுப் பெரியவர்கள் தொடங்கி வைத்தார்கள். கூடவே ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு வேத தர்மத்தைப் பற்றி உரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

✿ ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் தமிழ் உரை நூலைச் சென்னை கவர்னர் ஜயசாமராஜ ஒடெயரு தலைமையில் டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் சமீபத்தில் வெளியிட்டார்.



✿ மலாயா பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள் 'தீபாவளி இரவு' என்னும் கலை நிகழ்ச்சியை இரு நாட்கள் நடத்தி, அதன் வாயிலாக வசூலான நிதியை உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு வழங்கியுள்ளனர்.

✿ தமிழ் இசை விழாவில் கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் போட்டியில் முதல் பரிசு பெற்று, ராஜாஜி தம்புராப் பரிசை மந்திரி பூவராகனிடம் பெறுகிறார் ருக்மிணி ரமணி.





கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

63. தவத்தின் தூது

வேட்டுவர்கள் செய்த அளவற்ற அருந் தவத்தால் அகில ஜக அண்ட நாயகியார் அவ் வேட்டுவர் குடிலில் தவழ்ந்தும், தளர்நடை பயின்றும், முற்றத்தில் உள்ள வேங்கைமர நிழலில் உலாவியும், சிற்றிலிழைத்துச் சிறு சோறு அட்டும், வண்டலாட்ட மயர்ந்தும், முச்சிலில் மணற் கொழித்தும், அம்மானையாடியும், தாய் தந்தையரை மகிழ்வித்தார். எளிய மக்களுக்குத் தான் இறைவியின் அருள் கூடுமென்பதற்கே இஃதோர் உதாரணம்.

வள்ளியம்மைக்கு வயது பன்னிரண்டு ஆகியது. தாயும் தந்தையும் அப் பருவத்தைக் கண்டு தம் குல வழக்கப்படி அவளைத் தினைப்புனத்தில் உயர்ந்த பரண் மீது காவல் வைத்தார்கள். வள்ளி — ஆன்மா. முருகன் பரமான்மா; தினைப்புனம் — நெஞ்சம். ஆணவ மலமே காடாக வளர்ந்திருக்கிறது.

> காராரும் ஆணவக்
> காட்டைக் களைந்தறக்
> கண்டகங்கார மென்னும்
> கல்லைப் பிளந்து
> நெஞ்சகமான பூமிவெளி
> காணத்திருத்தி மேன்மேல்
> பாராதி அறியாத
> மோனமாம் வித்தைப்
> பதித்தன்பு நீராகவே
> பாய்ச்சி அது பயிராகு
> மட்டும் மா மாயையவன்
> பறவை அணுகாத எண்ணம்
> நேராக நின்றுவிளை
> போகம் புசித்துய்ந்த
> நின் அன்பர் கூட்டமெய்த
> நினைவின் படிக்கு
> நீ முன்னின்று காப்பதே
> நின்னருட் பாரம்

என்பர் தாயுமான சுவாமிகள். வைராக்கியம் என்னும் பரண்மேல் ஏறி நின்று இறைவன் திருநாமங்களாகிய கவண் கற்களை எறிந்து மும்மலங்களாகிய பறவைகள் கொத்தாதபடி சிவகதி ஆகிய கதிருடன் கூடிய ஞானப் பயிரைக் காத்து வந்தாள் வள்ளி. 'முத்தொழிலையும், மூவரையும் காக்கும் முருகப் பெருமானுடைய தேவியாகிய வள்ளிப் பிராட்டியாரை வேட்டுவர்கள் தினைப் புனத்தைக் காக்க வைத்தது, எளிதாகக் கிடைத்த உயர்ந்த ரத்தின மணியைத் தூக்கணங் குருவி இருளோட்டத் தன் கூட்டில் வைத்தது போலிருந்தது' என்பார் கச்சியப்பர்.

> காட்டில் எளிதுற்ற
> கடவுள்மணி யைக்கொணர்ந்து
> கூட்டில் இருளோட்டக்
> குருகுய்த்த வாறன்றே
> நீட்டுசுடர் வேற்குமரன்
> தேவியாம் தெள்ளமுதைப்
> பூட்டுசிலைக் கையார்
> புனம்காப்ப வைத்ததுவே

தினைப்புனத்தில் எத்திசையும் பார்க்கத்தக்க பரண்மீது நின்ற வள்ளியம்மையார், தட்டை, குளிர், தழல் ஆகிய கருவிகளை ஏந்தி, கிளி, காடை, கவுதாரி முதலிய பறவை இனங்களை ஓட்டியும், மான், முட்பன்றி, யானை முதலிய மிருகங்களைக் கவண் வீசியும் ஓட்டினார். ''பூவைகாள்! புறவங்காள்! மயில்காள்! மணிக் கிளிகாள்! குயில்காள்! ஆலோலம்; ஆலோலம்'' என்று இனிமை நிரம்பத் தனித் தனி கூவியும் தினைப்புனத்தைக் காவல் செய்து வந்தார்.

> பூவைகாள், செங்கட்
> புறவங்காள் ஆலோலம்
> தூவிமா மஞ்ஞைகாள்,
> சொற்கிளிகாள் ஆலோலம்
> கூவல் சேர்வுற்ற
> குயிலினங்காள் ஆலோலம்
> சேவல்காள் ஆலோலம்
> என்றாள் திருந்திழையாள்

மைனுக்கள், புறாக்கள், மயில்கள், கிளிகள், குயில்கள், சேவல்கள் முதலாயின கவண் கல் வீச்சினால் சிதறி ஓடின. ஓடியவை அவள் அழகாலும் குரல் இனிமையாலும் மீட்டும் மீட்டும் திரும்பி வந்தன. மும்மலங்கள் ஜீவனை விட்டு எளிதில் விலகாவன்றோ!

வள்ளி நாயகியாருக்கு அருள் புரியும் பொருட்டு, முருகக் கடவுள் கந்த மலையை விட்டு இறங்கிப் புவிக்குயிராகிய திருத்தணிகை மலையில் தனியே வந்து எழுந்தருளினார். குல மரபின்படியும், முன்வினைப் பயன்படியும் வள்ளிக்கு இளமை முதலே முருகப் பெருமான் மீது மனம் நிறைந்த அன்பு உண்டாயிற்று. வயதும் பருவமும் முதிர முதிர அந்த அன்பு வளர்ந்து உலகப் பற்றுக்கள் தேயத் தொடங்கி விட்டன. முருகப் பெருமானையன்றி வேறொன்றையும் மனம் நாடவில்லை.

நாரத முனிவர் இதனை அறிந்தார்.

திருப்பரங்குன்றத்தில் வள்ளியம்மையின் ஸ்தானத்தில் இன்றும் நாரத

ரைக் காணலாம். அங்கு தேவ நாயகன் ஒருபுறம் தெய்வயானையுடனும் மறுபுறம் நாரதருடனும் காட்சி தருவார். நாரதர் திருமாலின் மைந்தரின் மைந்தர்; வள்ளியோ மாலின் மகள். அதோடு இருவருக்கும் இசை யாழும் தொடர்புண்டு போலும்!

தினைப்புனத்தில் காவல் காத்துநின்ற வள்ளியம்மையாரிடம் நாரதர் சென்று கைதொழுதார். ''ஆகா; என்னே இவ்வம்மையார் பேரழகு! இப்பெருமாட்டியார் முற்பிறப்பில் திருமாலுடைய திருமகளாவார்; சரவணப் பொய்கையில் பெருந் தவம் புரிந்து குமாரக் கடவுள் கட்டளையிட்டபடி





இங்கு தோன்றித் தினைப்புனத்தைக் காவல் செய்து கொண்டிருக்கின்றார். இவர் ஆறுமுகக் கடவுளுக்குத் தேவி யாராகும் நற்றவமுடையவர். இவருடைய அருந்தவத்தின் பெருமையையும், பேரழகின் பெருமையையும் அளவிட வல்லார் யாவர்? முருகனுக்கும் வள்ளிக்கும் மணவினை உலகுய்ய விரைவில் நிகழ்வது சிறந்த பயனும்'' என்று தமக்குள் எண்ணினார். வள்ளியம்மையை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, திருத்தணிகை அடைந்தார்.

திருவேலிறைவன் திருவடியில் வீழ்ந்து பன்முறை பணிந்து, ''ஞான சக்திதர ஸ்வாமியே! ஞான பண்டிதரே! ஞானாகரரே! ஞானசொரூபியே! ஞானோபதேச குருபரரே! ஞான விநோதரே!'' என்று யாழ் மீட்டிப் பாடிப் பரவி நின்றார் நாரதர். அவ்வாறு துதித்த நாரதருக்குத் தணிகேசர் தண்ணருள் புரிந்தார். இளம் பூரணரது இன்னருளைப் பெற்ற இசை முனிவர், ''எம் பெருமானே! முன்னைப் பிறவியில் திருமாலுடைய திருமகளாகிய சுந்தரவல்லியம்மையார், சரவண தடாகத்தில் இருந்து தேவரீரை மணந்து கொள்ளும் பொருட்டுப் பெருந்தவம் புரிந்தார். அப்போது தேவரீர் தோன்றி அருள் புரிந்து பணித்தவாறு வள்ளி மலையில் மானிடம் சிவமுனிவருக்குப் பிறந்து நம்பி என்ற வேட்டுவ மன்னனிடம் வள்ளி என்ற திருநாமத்துடன் வளர்ந்து தினைப்புனத்தைக் காவல் புரிந்து கொண்டிருக்கிறார். எங்கும் நீக்கமற நிறைந்து முழுதொருங்குணர்ந்த முழு முதல்வராகிய தேவரீருடைய திருவுள்ளம் அறியாததுண்டோ? அம்மாதரசியின் அழகில் ஆயிரத்தில் ஒரு கூறும் இலக்குமி தேவிக்கு இல்லை. தவக்கொழுந்தாகிய அத் தையல்நாயகியாரை உலகம் உய்யுமாறு தேவரீர் திருமணம் செய்து கொண்டு அடியேங்களுக்கு அருள் புரிவீர்!'' என்று விண்ணப்பம் செய்து கொண்டார்.

தூது வந்த நாரதர் கூறியதைக் கேட்ட ஆறுமுகப் பெருமான் மகிழ்ந்தார். ''நாரத! நன்று நன்று. நமக்கும் அது திருவுளந்தான்'' என்று திருவாய் மலர்ந்தருளி நாரதரை அனுப்பி வைத்தார். நாரதர் வள்ளியின் தவம். அத் தவமே முன்னர் தானாகவே பாதி வழி தேடி வந்த பரம்பொருளின் அருளைப் பூரணமாக்கி இட்டு வந்தது. நாடக நாரதர் போல் வெறும் காமமே பொருந்திய ஒரு தலைவன்—தலைவியைச் சேர்த்து வைத்தவர் இசை முனி என்று எண்ண வேண்டா!

வள்ளிப் பிராட்டியாருக்குத் திருவருள் புரிய வேண்டும் என்று திருவுளங் கொண்ட முருகக் கடவுள், மானிட வடிவம் பூண்டார். காலில் வீரக் கழல் அணிந்து, வில்லும் அம்பும் ஏந்தி வேட்டுவக் கோலத்துடன் தணிகை மலையினின்று நீங்கி வள்ளி மலையை அடுத்த தினைப்புனத்தை அடைந்தார். பரண் மீது இருந்த வள்ளி நாயகியாரை அணுகி இன்ப மயக்கம் கொண்டவர் போல் நடிக்கலானார்.

முருகப் பெருமான் வள்ளி நாயகியாரை நோக்கிப் பேசினார். பரமான்மா ஜீவான்மாவை நோக்கிப் பேசுறப் பேசலாயிற்று : ''வாள் போன்ற கண்களையுடைய பெண்ணே! உலகிலுள்ள மாதர்கட்கெல்லாம் இறைவியாகிய உன்னை உன்னதமான இடத்தில் வைக்காமல் வேட்டுவர்கள் தனியே இந்தக் கானகத்தில் தினைப்புனத்தைக் காக்க வைத்தனரே! அவர்களுக்குப் பிரம்மன் அறிவைப் படைக்க மறந்து போய் விட்டான் போலும்!''

நாந்தகம்அனைய உண்கண்
நங்கைகேள் ஞாலந் தன்னில்
ஏந்திழை யார்கட்கெல்லாம்
இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப்
போயினர் புளினரா னோர்க்கு
ஆய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும்
அயன்படைத்திலன் கொல்?
என்றான்.

வள்ளி பதில் பேசவில்லை. வேட்டுவக் குமரனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வந்தாள். முருகப் பெருமான் மேலும் பேச்சைத் தொடர்ந்தார்.

''பெண்ணமுதே! உன் பெயர் என்ன? உன் ஊர் யாது? நின் ஊருக்குப் போகும் வழி எது?''

வள்ளி மீண்டும் பதில் ஏதும் பேசவில்லை; முருகப் பெருமானிடம் இன்முகம் காட்டவில்லை. முருகப் பெருமான் பேசப் பேச வள்ளியின் முகம் வேறு திசையில் திரும்ப ஆரம்பித்தது. அவள் மனம் கல்லாகி விட்டதோ? முருகப் பெருமான் மனம் உருகிவிட்டது. தன்னிடம் பேசாவிட்டால் பின்னர் வள்ளிக்குப் பெரிய பழி ஒன்று ஏற்படும் என்று கூறிப் பயமுறுத்தினார். அதாவது தற்கொலை செய்துகொள்வாராம்!

மொழியொன்று புகலா யாயின்
முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின்
விரகமிக் குழல்வேன் உய்யும்

வழியொன்று காட்டா யாயின்
மனமுஞ்சற் றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும்
பராமுகம் தவிர்தி என்றான்.
உலைப்படு மெழுகதென்ன
உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல
வருந்தியே யிரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள்
கலங்கலம் புனலிற் றோன்றி
அலைப்படு தன்மைத் தன்றோ
அறுமுகன் ஆட லெல்லாம்.


நாரதர் சொல்லி முருகப் பெருமான் வள்ளியிடம் வரவில்லை. இதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாரதரே தவம். தவம் தூதாகச் செல்லு முன்பே இறைவன் ஆன்மாவை நோக்கி வந்து விடுகிறான். பக்குவப்பட்ட ஆன்மாவின் பொருட்டு இறைவன் இரங்கி வந்த அருள் நிலையை இது அறிவிக்கின்றது. நாம் இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் இறைவன் நம்மை நோக்கி ஆயிரம் அடி எடுத்து வைக்கின்றார். காரைக்காலம்மையார் பேயுருக் கொண்டு கயிலை மலை ஏறக் கண்ட சிவபெருமான் மனமுவந்து, அவரை ''அம்மையே'' எனப் பணிவுடன் அழைத்தார் அன்றோ?

சுவாமி எதிர்ப்படும்போது நாம் செய்த தவம் விலகிப் போகிறது. சிவம் தோன்றும் வரையில்தான் நாம் செய்த தவம் இருந்து துணை புரியும். சிவம் தோன்றிய பிறகு தவத்திற்கு வேலை யில்லை. எழுதுகோலினால்தான் எழுதுகின்றோம். என்றாலும் எழுதும் போது எழுத்தைத்தானே கவனிக்கிறோம்? கோலைக் கவனிப்பதில்லையே? ''எழுதுங்கால் கோல் காணாக் கண்'' என்பார் திருவள்ளுவர். முருகப் பெருமான் தன் சுய உணர்வுடன் செல்லாமல் வள்ளியின் முன் வேடனாகச் செல்லக் காரணம் என்ன? வள்ளியின் உள்ளப் பக்குவத்தை அறிவதற்காகவே அவ்வாறு சென்றார் சுவாமி. பக்குவப்படாத ஆன்மாக்களுக்கு இறைவன் தன் சுய உருவுடன் காட்சி தர மாட்டான். மானுட சட்டை தாங்கி வந்து அருளுவான்.

''உணக்கிலாததொர் வித்துமேல்
விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே''

— திருவாசகம்

இருவினையொப்பு, மலபரிபாகம் சத்திநிபாதம் எய்திய பக்குவர்க்கே தன் அருள் திருமேனியுடன் காட்சி தருவான் இறைவன். (தொடரும்)



பொன்தேர் நாயகன்

வி. கோபாலன்



அகங்காரப் பனியை மாய்த்து, அறியாமை இருளை விரட்டி, சுபிட்சக் கதிர்களை விரித்தவாறு ஞானப் பேரொளி மழை பொழிந்து மன்னுயிர்களை வாழ்விக்கும் சூரிய தேவன் மிகப் பழைமையான வேதகாலத்திலேயே தனிப் பெரும் தெய்வமாகப் போற்றி வழிபடப் பெற்றிருக்கிறான்.

ஒளித் தேவனின் வரலாறு பற்றி பலவிதத் தகவல்கள். சூரிய தேவன் விச்வகர்மாவின் மகள் ஸம்க்ஞாவை மணந்து கொண்டதாகவும், கணவனின் வெப்பத்தைத் தாங்க முடியாத ஸம்க்ஞா தேவி, தனது நிழலை — சாயாவைப் புகுந்தகத்தில் நிறுத்திவிட்டுத் தான் பிறந்தகம் போய்விட்டதாகவும் மத்ஸ்ய புராணம் கூறுகிறது. ஸம்க்ஞா தேவி, சாயா இருவரும் அருணனின் தேவிகள். சூரியனின் வரலாற்றை விரிவாகக் கூறும் சௌர புராணம் என்னும் ஒரு 'நூல் இருக்கிறது. உபநிஷத நூல்கள் பல சூரியனும், நாராயணனும் ஒரே பரம்பொருள்தான் என்பதை வலியுறுத்துகின்றன. கீதையில் கண்ணன், ''நானே விஷ்ணு! பன்னிரண்டு ஆதித்யர்களுள் நானே சிறந்தவன். ஒளிரும் கிரகங்களுள் நானே சிறந்தவன் ; நானே சூரியன்'' என்று மொழிகிறான்.

சூரியதேவனைப் பிரதான தெய்வமாக வழிபடும் நெறிக்கு 'சௌரம்' என்று பெயர். கிறிஸ்துவ சகாப்தத்துக்கு முற்பட்ட காலத்திலேயே இந்திய பூமியின் வடபகுதியிலும், தென்பகுதியிலும் சூரியன் இயற்கை தெய்வமாகப் போற்றி வழிபடப்பெற்றிருக்கிறான். தொல்காப்பியத்தில் பாலை நிலத்துக்கு எனத் தனித் தெய்வம் ஒன்றையும் குறிப்பிடவில்லை எனினும், 'பிறர் பகவதியையும், ஆதித்தனையும் தெய்வமென்று வேண்டுவர்' என இறையனார் அகப்பொருள் உரைகாரர் கூறுகிறார்.

''ஞாயிறு போற்றுதும்!

ஞாயிறு போற்றுதும்!''

என இளங்கோவடிகளும்,

''நின்றென உலகிடை உலாவு மீமிசை

நின்று நின்று உயிர் தொறும் நெடிது
காக்குமே''

எனக் கம்பநாட்டாழ்வாரும்,

''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு


....

ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி''

என நக்கீரரும் ஆதவனைப் போற்றுவர். அகநானூற்றிலும், நற்றிணையிலும், பத்துப் பாட்டு நூல்களிலும் சூரியனைப் போற்றும் பகுதிகள் உள்ளன.

வடபுலத்தில் நாடாண்ட குப்த மன்னர்கள் சூரிய உபாசிகள். வர்த்தமான வம்சத்து மன்னர்கள் தம்மை 'பரமாதித்ய பக்தன்' என்று கூறிக் கொண்டு பெருமையுற்றதை வடபுலத்துக் கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம். சூரியனது கிரணங்கள் நோய்களை அழிக்கும் என விஞ்ஞான ரீதியில் கூறப்படுவது போன்றே சூரியனை வழிபட்டால் நோய்கள் நீங்கும் என்பது பக்தி வழியில் மலை போன்ற ஒரு நம்பிக்கையாகப் பன்னெடுங் காலமாக இருந்து வந்திருக்கிறது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் மயூரன் என்ற கவிஞன் 'சூரிய சதகம்' என்ற அருளஞ்சலி செய்து நல்ல பார்வை பெற்றான் என்பது வரலாறு விடுக்கும் செய்தி. இந்த 'சூரிய சதகம்' காஞ்சிபுரத்து கச்சபேசுவரர் ஆலயத்தில் கல்வெட்டில் வடிக்கப் பெற்றிருக்கிறது.

ஆதித்யனின் ஏழு குதிரைகள் பூட்டிய ஒரு சக்கரத் தேர்ப் பவனி, கவிஞர்களையும் கலைஞர்களையும் கவர்ந்துவிட்ட ஒன்றாகும். சொற் சித்திரங்களில் பொன்தேர் நாயகனின் பவனியைக் காண்பது போன்று, கற்சித்திரங்கள் பலவற்றிலும் அக்காட்சியைக் காணலாம். புகழ்பெற்ற கொனாரக் சூரியன் கோயில் தேர் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. தேரின் சக்கரங்களும், அச்சாணியும் கூடத் தத்ரூபமாகக் கல்லில் செதுக்கப்பட்டுக் காண்கிறது. சூரியன் ஆலத்தைக் குதிரைகள் இட்டுச்செல்லும் தேராக



இடதுபுறம் :

மேலே : மகாபலிபுரச் சிற்பங்களில் சூரியதேவன்;

கீழே : சூரிய சிற்பங்களுக்குப் புகழ்பெற்ற பாஜா குகைக் கோவில்.


இந்தப் பக்கத்தில் :


மேலே : சூரியனார் கோவிலிலுள்ள சூரியன்.

கீழே : கொனாரக்கிலுள்ள சூரியனின் தேர்ச் சக்கரம்.

அடுத்தது : கங்கைகொண்ட சோழபுரத்தில் கமல யந்திரம்.







வடிக்கும் வடபுலத்துக் கலைப் பாணி தென்னகத்திலும் பரவியிருக்கிறது. பல சோழர் ஆலயங்களிலும், விஜயநகரக் கலைக் கூடங்களிலும் கல்தேர்களைக் காணலாம். சூரிய வழிபாடும், கல்லிலே தேர் வடிப்பதும் சோழர்கள் வடபுலத்து மன்னர்களிடம் கொண்ட சமூக உறவுக்குப் பரிசாகப் பெற்றவைகளாகும்.

சூரியனுக்கு ஆலயமெடுக்கும் நெறியை, தமிழகத்தில் முதன் முதலாகப் புகுத்தியவர்கள் சோழ மன்னர்களே; மகாபலிபுரத்திலும், கழுகு மலையிலும் பல்லவர், பாண்டியர் படைத்த சூரிய சிற்பங்கள் காணப்படுகிறதெனினும், அவ்வரச மரபினர் சூரியனுக்காகத் தனி ஆலயம் எடுக்கவில்லை. கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பராந்தக சோழன் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஜாம்பை கிராமத்தில் சூரியனுக்கு ஓர் ஆலயமெடுத்து 'ஸ்ரீ கண்டராதித்திய — ஆதித்யக்ருஹம்' என்ற பெயரையும் அதற்குச் சூட்டினான்.

இந்திய பூமியில் சூரிய தேவனின் பழைமையான ஆலயங்கள் ராஜபுதனத்துசிரோநா, குஜராத்தில் முதேரா, புகழ்பெற்ற கொனாரக் ஆகிய இடங்களில் அமைந்தவை. இவ்வாலயங்களில் காலத்துக்கு முற்பட்ட காலத்திய பிற தெய்வங்களின் கோயில்களிலும் கூட சூரியனின் சிற்பங்கள் காண்கின்றன. கிறிஸ்துவ சகாப்தத்துக்கு முன்னர் இந்தியாவின் மீது படையெடுத்த அலெக்ஸாந்தரை எதிர்த்துப் போரிட்ட இந்திய மன்னன் போரஸ் என்பான் தனது படை அணிவகுப்பின் முன் சூரியதேவனின் மூர்த்தத்தை வைத்து வழிபட்ட பிறகே போரைத் தொடங்கியதாக வரலாற்றாசிரியர் கார்டியஸ் எழுதுகிறார். சூரியன் அக்காலத்தில் போர்க் கடவுளாக வழிபடப் பட்டதோடு மட்டுமின்றி, கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னரே இங்கு அருணனுக்குச் சிற்பம் எடுக்கப்பட்டது என்பதையும் இந்தச் செய்தி உணர்த்துகிறது.

வடஇந்தியாவில் பாஜாவில் உள்ள பௌத்த குகைக் கோயிலில் சூரியனின் எழில் கொழிக்கும் சிற்பங்கள் பல காண்கின்றன.

சூரியதேவன் இந்திய பூமியின் பழைமையான இயற்கை தெய்வம். அவனன்றி ஒளியில்லை; உலகில்லை; உயிர்கள் இல்லை. இந்திய இதிகாசங்களும், இலக்கியங்களும், காவிய இலக்கியங்களும் அப்பெருமகனின் புகழையே பாடுகின்றன. ஞானச் செல்வத்தை நமக்கு விட்டுச் சென்ற தவமுனிவர்களும் அருணனின் புகழையே பாடியிருக்கின்றனர்; இயற்கையைத் துருவித் துருவி ஆராய்ந்து இன்சுவைக் கவிதைகள் பாடிய கவிஞர்களும் ஆதவன் பெருமையையே பாடியிருக்கின்றனர்.

"'பரிதியே! பொருள் யாவிற்கு முதலே!
பொன்செய் பேரொளித் திரளே?
கருதி நின்னை வணங்கிட வந்தேன்'
கதிர்கொள் வாண்முகம் காட்டுதி சற்றே!"

என்கிறார் பாரதியார்.

ராம்தீர்த் பிரஹமி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கரு நிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சி யளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதி யான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்கியமாக வாழ்வீர்கள்

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM
DADAR, BOMBAY-14

மதராஸ் டிப்போ : 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ் - 3

ஆல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும் ஒரு சிறந்த டானிக்

உங்களுடைய உடல் வளர்ச்சிக்கு ஆல்போ-ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இளையோர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக்கியத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான விசேஷப் பொருள்கள் ஆல்போ-ஸாங்கில் இருக்கின்றன.





ஜே. அன் ஜே. டீஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)

அத்தியாயம் ஐம்பத்தைந்து

விநோத வேலை!

ஐந்து நாட்களுக்குப் பின் ஒரு நாள் அன்று ஞாயிறுக் கிழமை. அச்சகங்களுக்கும், வேஸ்ட் பேப்பர் கம்பெனிகளுக்கும் விடுமுறை தினம்.

மாலை மூன்று மணி இருக்கும். பெட்ஷீட், விலை மலிவான தலையணை, முகம் பார்க்கும் சிறிய கண்ணாடி, சீப்பு, மண் கூஜா, பிளாஸ்டிக் தம்ளர் — இத்தியாதி பொருட்களைப் புதிதாக வாங்கிக் கொண்டு, தங்கசாலைத் தெருவின் தெற்குமூலை ஆரம்பத்திலேயே இடதுபுற வரிசையில் அமைந்த ஒரு பழங்காலத்து மாடி வீட்டின் கீழ்த் தளத்து முகப்பு வாசலுக்குச் சற்றுத் தள்ளி, வெற்றிலை பாக்குக் கடை வைக்கத் தோதாக, ஆறடி அகல நீளத்தில் செருகுப் பலகைக் கதவு போட்டு ஒதுக்கி விடப்பட்டிருந்த சிறியதோர் அறையின் உள்ளே வந்து நுழைந்தான் சபேசன்.



அதுதான் இப்போது அவனுடைய பெருமைக்குரிய வாசஸ்தலம். அதற்கு அவன் வாடகையாகத் தர வேண்டியது மாதம் எட்டு ரூபாய். ஆனால் அதே அறை வெற்றிலைபாக்குக் கடையாக விடப்பட்டால் அந்த இடத்தின் மதிப்புக்குக் குறைந்தபட்சம் முப்பது ரூபாயாவது வாடகை வரும். ஏற்கனவே அதில் ஊதுபத்தி, சந்தனம், பன்னீர் முதலானவை விற்கும் கடையொன்று இருந்து மாதம் இருபத்தைந்து ரூபாய் வாடகை வந்து கொண்டிருந்து போன வாரம் அது காலியாகியது.

அவனுக்கு இவ்வளவு பெரிய உதவியைச் செய்தவர் யார்? ஏழுமலையான் அச்சக முதலாளி கண்ணபிரான்தான். அவருக்குச் சொந்தமான வீடு அது. சபேசனின் அநாதரவான நிலையைக் கேட்டறிந்து அவர் மனம் நெகிழ்ந்து, முதல் நாள் முன்பணமின்றிக் காகித ஜல்லி கொடுத்தது மட்டுமல்ல; அவன் தங்கிக் கொள்ள இந்தச் சிறு அறையையும் மிகக் குறைந்த வாடகைக்கு அளித்தார், அட்வான்ஸ் பணம் வாங்காமலே! தெய்வம் கோயில்களில் மட்டுமா குடியிருக்கிறது?....

அறையை நன்றாகப் பெருக்கிச் சுத்தப்படுத்திவிட்டுத் தான் வாங்கி வந்த பொருட்களை அங்கங்கே வைக்கக் கூடிய இடத்தில் பொருத்தமாக வைத்து அவற்றைத் தானே பார்த்து ரசித்தான் சபேசன். அவனுடைய தொழிலின் முக்கிய உபகரணங்களான இரண்டு பெரிய கோணிப் பைகளையும், கன அளவைக் கொக்கித் தராசையும் மட்டும் மிகப் பத்திரமாக ஒரு மூலையில் வைத்து அவற்றின் மேல் தன் காஸ்வாஸ் பையைத் தூக்கிப் போட்டு மூடினான். பிறகு சுவரில் ஓர் ஆணி அடித்துப் புதிய கண்ணாடியைப் பின்புறமாகத் திருப்பி மாட்டினான்; ஆமாம்; திருப்பித்தான் மாட்டினான். காரணம், அந்தக் கண்ணாடியின் பின்புறத்தில் திருப்பதி ஏழுமலையானின் அழகிய திருவுருவப் படம் ஒன்று 'பிரேம்' செய்யப்பட்டிருந்தது. அப்படத்தைத் தேடி வாங்க அவன் இன்று எங்கெல்லாம் சுற்றியலைந்தான்!

அந்த முகம் பார்க்கும் கண்ணாடியை வாங்க நினைத்த போது அதன் பின்னால் ஒரு சினிமா நடிகையின் படம்தான் இருந்தது. அது அவனுக்குப் பிடிக்கவில்லை. வேறு கண்ணாடி கிடைக்குமா என்று தேடிப் பார்த்தான். பின்னால் படமே இல்லாத கண்ணாடிகள் இருந்தன. ஆனால் அவை விலை அதிகமாயிருந்தன. சினிமா நடிக—நடிகைகளுடையவும், அரசியல் கட்சித் தலைவர்



களுடையவும் படங்கள் உள்ள கண்ணாடிகளை விலை மலிவு. அந்த மாதிரிப் படம் போட்ட கண்ணாடியை உபயோகப்படுத்த அவன் விரும்பவில்லை. அதனால் 'அவர்கள்' மீது அவனுக்கு வெறுப்பு, கசப்பு என்று சொல்ல முடியாது. ஏனோ அது பிடிக்கவில்லை. அவ்வளவுதான்; மனித மனத்தின் விருப்பு, வெறுப்புக்கள் எல்லாவற்றுக்குமே காரண காரியம் இருக்க முடியுமா என்ன?.. அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. சினிமா நடிகையின் படமுள்ள கண்ணாடி ஒன்றையே விலைக்கு வாங்கினான். பிறகு அந்தப் படத்தைப் பக்குவமாக எடுத்தெறிந்துவிட்டு, படக்கடைக்குப் போய்ப் பேரம் பேசாமல் இரண்டணாக் கொடுத்து ஓர் ஏழுமலையான் படத்தை வாங்கிக் கண்ணாடிக்குப் பின்னால் கச்சிதமாகப் பொருத்தி விட்டான். ஏழுமலையாண்டவனின் படத்தை அவன் தேடித் தேர்ந்து வாங்கிய காரணம் என்ன? நிச்சயமாக அதற்கு ஒரு காரணம் உண்டு. அது அவனுடைய அந்தராத்மாவில் பொங்கி நிற்கும் மாசற்ற நன்றியுணர்ச்சியொன்றின் பாற்பட்ட சொந்த விஷயம்!....

மணி நான்கு. எங்கேயாவது வெளியே போய்விட்டு வரலாமே என்று தோன்றியது சபேசனுக்கு. அத்துடன் கூடவே 'எங்கே போவது' என்ற கேள்வி எழுந்து, உடனே பதிலும் கிடைத்தது. 'நச்சியைப் பார்க்க வேண்டாமா ?'

பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்த அன்றிரவு அவனிடம் அந்த இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்து மானக்கேடு அடைந்த சபேசன் இன்று வரை அவனைப் பார்க்கவேயில்லை. இனி பார்க்கக் கூடாது என்றிருந்த தீர்மானத்தை அடுத்த நாள் காலையே மாற்றிக் கொண்டான். காரணம், அன்றிரவு அவன் மன்றோ சிலையண்டைப் படுத்துத் தூங்கிய பிறகு நச்சி அவனைப் பார்க்க வந்ததாகவும், அங்கே அவன் இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டு அவனது காலைச் சிற்றுண்டிக்காக ஒரு ரூபாய் கொடுத்து விட்டுப் போனான் என்றும் மாதவன் நாயர் சொன்னதுதான் ! அதிலிருந்து, நச்சியிடம் வேதா எல்லா விவரங்களையும் சொல்லியிருக்கிறாள் என்பதும், அவற்றைக் கேட்டபின் அவன் தன் மீது கொண்ட தப்பபிப்பிராயத்தை விட்டு விட்டதாலேயே தன்னைக் காண வந்திருக்கிறான் என்பதும் சபேசனுக்குப் புலனாயிற்று. ஆகவே, அவ்விஷயத்தைப் பொறுத்தவரையில் அவன் அமைதியடைந்தான். அதோடு கூட, வேதா வீணான துன்ப துயரங்களுக்கு உள்ளாகாமல் நிம்மதியாக வீடு போய்ச் சேர்ந்திருப்பாள் என்ற மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியினூடே மற்றோர் இனம் புரியாத திருப்தி: 'வேதா மருதமுத்துவுடன் பெங்களூர் போனது சம்பந்தமாக என் மனத்திலிருந்த கொஞ்ச நஞ்சம் அவநம்பிக்கையையும் நச்சியின் அந்த ஆத்திரச் செயல் அடியோடு போக்கி விட்டது. அவன் உண்மையாகவே ஏமாற்றப்பட்டுப் போனவன்தான். அதில் சிறிதும் சந்தேகம் இல்லை.'

இதெல்லாம் சரிதான். ஆனால் அன்று காலை மாதவன் நாயர் சொன்ன அந்த விஷயம் ? — 'என்னடா, தம்பி! உன் தோஸ்து யார்கிட்டேயாவது சண்டை கிண்டை போட்டானா? யாரையோ பழி வாங்கப் போகிறவன் மாதிரி கத்தியும் கையுமா இங்கே வந்தான். அவனோட பேச்சு போக்கு எல்லாமே ஒரு தினுசா இருந்திச்சு. முரட்டுப் பயல்; முன்கோபக்காரன். எதுக்கும் அஞ்சாமல் நினைச்சதை நினைச்சபடி செய்துடுவான். இங்கிருந்து அவன் போன வேகத்தைப் பார்த்தால் என்னமோ தகாத காரியம் பண்ணப் போறான்னுதான் தோணிச்சு.'

கடந்த ஐந்து நாட்களாக நச்சியைச் சபேசன் எங்குமே பார்க்கவில்லை. அவனும் இவனைக் காண வரவில்லை. 'ஒரு கால் தன் தங்கை வேதாவைக் கடத்திச் சென்ற மருதமுத்துவைப் பழி வாங்கி — அல்லது பழி வாங்க முயன்று — போலீஸிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பானோ?'

தன்னை மீறிய ஒருவிதப் பரபரப்பு அடைந்த சபேசன், 'இன்று எப்படியும் அவனை எங்காவது தேடிப் பார்த்துவிட வேண்டும். அப்படிப் பார்க்க முடியவில்லையானால் அவனுடைய வீட்டுக்காவது போய் விவரம் விசாரிக்க வேண்டும்' என்று தீர்மானித்தவனாய் அவசரமாக முகம் கைகால்களைக் கழுவிக்கொண்டு வந்து சுத்தமாகத் துவைத்து வைத்திருந்த உடைகளை அணிந்து கொண்டு தலை வாருவதற்காகச் சீப்புக் கண்ணாடியை எடுத்தபோது பழைய சம்பவம் ஒன்று அவன் நினைவைச் சுகமாக வருடியது. அன்றொரு நாள் வேதா அவனுக்குத் தலை வாரிக்கொள்ளச் சீப்புக் கண்ணாடி கொடுத்து விட்டுச் சீதளப் புன்னகை பூத்து நின்றாளே, அந்தச் சம்பவம்தான் அது.

தனக்குள்ளாகவே வெட்கத்துடன் மெல்லச் சிரித்துக்கொண்ட சபேசன், இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தித் தலைவாரிக் கொண்டு செருகுப் பலகைகளைப் போட்டு, அறையைச் சாத்திவிட்டுப் புறப்பட்டான்.

'கழுதை கெட்டால் குட்டிச்சுவர்' என்பது போல நச்சியைப் பார்க்க வேண்டுமானால் சென்ட்ரல் ஸ்டேஷன், மூர்மார்க்கெட் வட்டாரத்தைச் சுற்றிவர வேண்டும் என்பது சபேசனுக்குத் தெரியும். எனவே அவன் முதலில் சென்ட்ரல் ஸ்டேஷன், ஒற்றைவாடை, ஆனைகவுனி, பெரியமெட் முதலான இடங்களில் சுற்றியலைந்து தேடிப் பார்த்துவிட்டு, மூர் அங்காடிப் பக்கமாக— அதன் உட்புறச் சாலையொன்றில் சோர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தான்.

''இன்னா பிரதர்! நம்பளைக் கண்டுக்காமலே போறே? என்மேல் கோவமா?''

சட்டென்று நின்று சுற்று முற்றும் பார்த்தான். அது நச்சியின் குரல்தானே? ஆனால் அவனைக் காணோம். அந்தக் குரல் வந்த திசையில் ஒரு போலீஸ் 'வான்'தான் நின்று கொண்டிருந்தது.

கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் அப்போது ஏதோ ஒரு விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருந்ததாலேயே அப்



''அம்மா! அவரையே பொங்கல் வேலை எல்லாம் செய்ய வெச்சுட்டேன்! கொஞ்சம் மண்டையில் அடி, கண்ணாடி விழுந்து... கால் விரல் கொஞ்சம் நசுங்கிப் போச்சு பீரோ விழுந்து...கண்ணிலே கொஞ்சம் தூசு விழுந்துடுத்து...விரலிலே தேள் கொட்டிடுத்து....இருந்தாலும் என்ன? 50 ரூபா மிச்சம் ஆயிடுத்தே!''

போலீஸ் 'வேன்' அங்கு நின்று கொண்டிருக்கிறது என்பதைப் பிறகு தெரிந்து கொண்ட சபேசன் நிம்மதியடைந்தவனாய் மேலும் சிறிது தூரம் நடந்தான்.

பக்கிங்காம் கால்வாயைவிடப் படுமோசமான தண்ணீர் நிறைந்த குளம் ஒன்றின் தெற்குக் கரையோரம் பற்பல விநோதக் காட்சிகள் :

ஒரு மரத்தடியில் ரிடையரான அரசாங்க அலுவலக பியூன் ஒருவன் பௌராணிகராகிப் பாரதம் படித்துக் கொண்டிருந்தான்; அதைக் கேட்கப் பத்துப் பேர் உட்கார்ந்திருந்தனர். அவனுக்குச் சற்றுத் தள்ளிக் கைரேகை ஜோஸியன் ஒருவன்; அவனிடம் இரண்டு பேர். அப்புறம் ஒரு பெரிய கும்பல்; அதன் நடுவே ஒருவன் சப்ளாக் கட்டையைத் தட்டிக் கொண்டு சினிமா ராகங்களில் கட்சித் தலைவரொருவரின் சுயசரிதையைப் பாட்டாகப் பாடிக் கொண்டிருந்தான். அதற்கு அப்பால் இன்னொரு கூட்டம்; அங்கே பத்பொடி வியாபாரத்துக்காகச் சீட்டுக்கட்டு ஜாலவித்தை நடந்து கொண்டிருந்தது. மற்றொரு கும்பல்; அங்கே 'நினைத்த காரியம் எல்லாம் கை கூடிவிடுவதற்கான' விற்பனை, மோடி மெஸ்மரிஸ வித்தைகளுடன்! அப்புறம் ஒரு சிறு குழு; அது நரிக்குறவர் கும்பல். அதற்குச் சற்றுத் தள்ளி எடைகாட்டும் கருவியை வைத்துக் கொண்டு ஒருவன்; அங்கேயும் இரண்டு மூன்று பேர். அவனுக்குப் பக்கத்தில் ஒரு பட்சி சாஸ்திரக்காரன்; அவனிடமும் நாலு பேர். இன்னும் கொஞ்சம் அப்பால், சீலைப் பேன் குத்திக் கொண்டிருந்த நடைபாதைவாசிகள் சிலர். அவனுக்குச் சற்றுத் தள்ளி, சிரிப்பும் பேச்சுமாக இருந்த ஒரு பைத்தியக்காரன்; அவனை வேடிக்கை பார்க்கவும் ஒரு கூட்டம்.

அதற்குச் சிறிது தூரத்தில், குளத்தின் சிமிண்ட் கிராதி மேல் ஒருவன் சாய்ந்து நின்று கொண்டிருந்தான்; அவனெதிரே இன்னொருவன் தலையைச் சாய்த்துக் காட்டிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால், வெளியூரிலிருந்து வந்த ஆந்திராக்காரன் போல் காணப்பட்டான். அவனுக்குப் பின்னால் மூட்டை முடிச்சுக்களோடு இரண்டு பெண்கள்; அவர்கள் மொட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். திருப்பதிக்குப் போய் வருகிறவர்கள் போலும். குளத்துக் கிராதியில் சாய்ந்து நின்றிருந்தவன் அந்த ஆந்திராக்காரனின் காதை இழுத்துப் பிடித்துக் கொண்டு 'குரும்பி வாங்கி'யால் வெகு கவனமாகக் 'குரும்பி' எடுத்துக் கொண்டிருந்தான். மூர்மார்க்கெட்டில் நடக்கும் பல காரியங்களில் அதுவும் ஒன்று. அவ்வேலையைச் செய்து கொண்டிருந்தவன் வேறு யாருமல்ல; நச்சிதான்!

''கொஞ்சம் இருக்கிறயா பிரதர்? தோ, வந்துட்டேன்.''

சபேசனுக்கு ஒரே வியப்பு; சிரிப்பும் வந்து விட்டது. சிரிப்பை அடக்கிக் கொண்டு அவனைக் குறுகுறுவெனப் பார்த்தான்.

'ஹா' என்று ஒரு துள்ளுத் துள்ளிப் பின்னால் நகர்ந்தான் ஆந்திரன்.

''தூத்தரி! இன்னய்யா! உன் காதிலே ஒரு வண்டி அடாசு அடைச்சுக்கிட்டுக் கிடக்குது?'' என்று சலித்துக் கொண்ட நச்சி, ஒரு பட்டாணியளவுக்குக் குரும்பி அழுக்கைக் குடைந்து எடுத்து வீசினான்.

''காது, காது!'' என்று தலையை வேகமாக ஆட்டினான் ஆந்திரன்.

''உன் காதை யாரும் புட்டுக்கல்லே! சரி; துட்டை எடு! இருவது பைசா!''

ஆந்திரன் கொடுத்த இருபது பைசாவை அலட்சியமாக வாங்கி ஜேபியில் போட்டுக் கொண்டு முன்வாங்கிக் கொத்தை விரல் நுனியால் சுழற்றிக் கொண்டே தன் வழக்கமான கோணல் சிரிப்புடன் சபேசனை நோக்கி வந்த நச்சி, ''இன்னா, பிரதர்! எப்படி இருக்கிறே?'' என்றான் ஒருவித வெட்கத்துடன். அன்றிரவு அவனிடம் தான் முரட்டுத்தனமாகவும் முட்டாள்தனமாகவும் நடந்து கொண்டதற்காக மன்னிப்புக் கேட்பது போல் இருந்தது அந்த வெட்கக் குழைவு.

''இருக்கிறேன், அண்ணே! உன்னைப் பார்க்கத்தான் எங்கெல்லாமோ சுற்றியலைந்துவிட்டு வருகிறேன்'' என்று புன்னகை பூத்த சபேசன், ''இது என்ன?.....'' என்று வெகு அக்கறையாக விசாரித்தான்.

''இதுவா? இதுதான் இன்னைக்கு நம்ம பிஸினஸ்!'' என்று சிரித்த நச்சி, ''காலம்பற எழுந்திருச்சதிலிருந்து நாஸ்தாவுக்குக் காசு இல்லாமல் எங்கெங்கோ டக்கர் அடிச்சுப் பார்த்தேன். ஒண்ணும் சாயலே. அப்புறம் ஒரு யோசனை தோணிச்சு'' என்று விவரிக்கத் தொடங்கினான். (தொடரும்)

மானிடம் வென்றது!

கே.பி. நீலமணி

கிருஷ்ணபக்ஷத்து இரவு. வான் முகட்டின் எங்கோ ஒரு மூலையில், தேய்ந்த லாடம்போல, பிறைச் சந்திரன் மங்கிய ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். இயற்கையின் கைவண்ணத்தால் செழித்து வளர்ந்த அந்த மலைப் பிரதேசத்தில் எழும்பி நின்ற குன்றுகளும் பாறைகளும், எங்கோ தொலை தூரத்தில் விட்டு விட்டு வெடிக்கும் பட்டாசுகளின் ஓசையை எதிரொலித்துக் கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் கடந்து, மரங்கள் நிறைந்த மறைவான ஓர் இடத்திலிருந்த இரகசிய விடுதியொன்றில், குறிப்பிட்ட நேரத்துக்கு, குறிப்பிட்டபடி தவறாமல் ஒரு கோஷ்டியினர் ஆஜராகியிருந்தனர். அவர்கள் எல்லோரும் கொள்ளைக்காரர்கள். அங்கேயிருந்த ஒரு மேஜையைச் சுற்றி, அவர்கள் அனைவரும் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

அந்த மேஜையின்மீது நின்று கொண்டிருந்த இரண்டு மூன்று மெழுகுவத்திகள் காற்றைத் தாவிப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தன. இருளும் ஒளியும் கலந்து உறவாடிக் கொண்டிருந்த அந்த மங்கலான வெளிச்சத்தில், அவர்கள் அனைவரும் தங்கள் தலைவன் முகத்தையே மிகுந்த ஆவலுடன் பார்த்த வண்ணம், சிந்தனை வயப்பட்டிருந்தனர்.

திடீரென்று கிடைத்த ஒரு முக்கியமான செய்திதான், அவர்களுடைய தீவிரமான சிந்தனைக்குக் காரணம். அது வேறொன்றும் இல்லை.

'அவர்களுடைய அந்தக் கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்தே தீருவது' என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும், போலீஸ் சூப்பிரண்ட் பரசுராம், நாளை புதன்கிழமை அந்த வழியாக ரயிலில் வருகிறார்' என்பதுதான் அந்தச் செய்தி. 'பரசுராமைத் தீர்த்துக் கட்டி விட்டால் பிறகு கவலை இல்லை என்பது அவர்கள் எண்ணம். காரணம் அவரால் அவர்களுக்கு ஏற்பட்ட தொல்லைகள் அனந்தம். ஆனால் எத்தனை முயன்றும் அக்னி ராஜுவின் கூட்டத்தாருடைய வலையில், பரசுராமைச் சிக்க வைக்க முடியவில்லை. ஆகவேதான், பரசுராம் வருகிற ரயிலையே கவிழ்த்து விடுவது என்று, அக்னி ராஜு முடிவு செய்தான். இதற்கு அனைவருமே ஒப்புக் கொண்டனர், ரங்கையாவைத் தவிர. ரங்கையாவுக்கு இதில் இஷ்டமில்லை. தலைவனிடம் அவன் தன் கருத்தைத் தெரிவித்தான்:

"தங்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ வீரச் செயல்களைப் புரிந்திருக்கிறீர்கள். நம்முடைய கூட்டம் எத்தனையோ தீரச் செயல்களைச் சாதித்திருக்கிறது. 'சூராதி சூரன்' என்று உத்தியோகத்தில் பெயர் வாங்கிய பிரகாஷ்ராவைவிடவா? அப்படியிருக்க, பரசுராம் ஒருவருக்காக, அவர் பிரயாணம் செய்கிற ரயிலையே கவிழ்க்க வேண்டியது அவசியம்தானா?

"நம்முடைய ஒரு விரோதியைச் சுமந்து வருவதற்காக, அதில் பிரயாணம் செய்யும் எண்ணற்ற நிரபராதிகளின் உயிர்களைப் பறிக்க வேண்டுமா? கணவனும், மனைவியும், தாயும் பிள்ளையும், அண்ணனும் தங்கையும் என்று, இன்னும் எத்தனை எத்தனையோ எண்ணற்ற உறவுகளிலே பின்னிப் பிணைந்துவரும், அத்தனை மக்களையுமே கொன்றுவிட வேண்டியதுதானா? அவர்கள் ஒவ்வொருவருடைய வருகையையும் எண்ணி எண்ணி, எத்தனை எத்தனை குடும்பங்கள் ஆவலோடு காத்துக் துடித்துக் கொண்டிருக்கும்? நம் பகைவனின், ஓர் உயிருக்காக இத்தனை பெரிய பயங்கரச் சதியில் இறங்கி, பெரும் பாபத்துக்கு ஆளாக வேண்டாம் என, 'நான்' நினைக்கிறேன்.

"இது தங்களுடைய ஊழியன் ஒருவனுடைய தாழ்மையான அபிப்பிராயமே அன்றி, வேறெதுவுமில்லை. இனித் தங்களுடைய சித்தம் எதுவோ; கட்டளை எதுவோ, அதற்கு எல்லோரையும் போல் கீழ்ப்படியக் கடமைப் பட்டிருக்கிறேன். சித்தமாக இருக்கிறேன்" என்று கூறி விட்டுத் தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு விட்டான்.

ரங்கையாவின் பேச்சைக் கேட்டுக் கூடியிருந்த அனைவரும் முகத்தைச் சுளித்தனர். அருவருப்போடு அவனைப் பார்த்தனர். அக்னி ராஜுவின் முகத்தில், கோபத்தின் ஜ்வாலை வீசிக் கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரிந்தது. அதுவரை தங்கள் தலைவனுடைய உத்தரவுக்கு மறுமொழி கூறினவர்கள் எவரும் இல்லை. ஆனால் இன்று ரங்கையா கூறி விட்டான். 'முட்டாள், இவனுக்கு யார் செத்தால் என்ன, யார் வாழ்ந்தாலென்ன? சொன்ன பேச்சைக் கேட்பதை விட்டுப் பெரிய மேதாவி மாதிரி இப்படிப் பேசி, அநியாயமாகத் தலைவனின் கோபத்துக்கு ஆளாகி விட்டானே' என்று அனைவரும் அஞ்சினார்கள்.

அதே சமயத்தில் அக்னி ராஜு, ரங்கையாவின் அருகில் வந்து, அவன் தோளைத் தட்டிக்கொடுத்தான். மெல்ல, தன் ஆள்காட்டி விரலினால் அவனது தாடையைத் தூக்கிப் பிடித்து, திடீரென்று விரலைப் பின்னுக்கு இழுத்தான். முகம் தொப்பென்று கீழே இறங்கியது.

மறுகணம் —

"பளார், பளார்" என்று ஏழெட்டுப் பேய் அறைகள் அவனது கன்னத்தைச் சுவைத்துக் கன்ற வைத்தன.

"வேதாந்தமா பேசறாய்? நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு பாகவத கோஷ்டியில் இருக்க வேண்டிய கோழைகள் எல்லாம்

'கசாப்புக் கடைக்காரன் வெட்டுகிற ஆட்டின் உடலைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டுமே அன்றி, போகிற உயிரைப் பற்றிக் கவலைப்பட்டால் அவனால் தொழில் செய்ய முடியுமா?' இப்படி முழங்கிய திருடர்தலைவன் அக்னிராஜுவுக்கும் ஒரு சோதனை ஏற்பட்டது. அந்தச் சோதனை என்ன என்பதை இந்தச் சிறப்புச் சிறுகதை உணர்ச்சியோடு தருகிறது. ★

இந்தக் கூட்டத்தில் எதற்காக வந்து சேர்ந்துகொண்டீர்கள்?''—சிவப்புக் கோலிக் குண்டுகளைப் போல் ரத்தச் சிவப்பேறிய விழிகளை வெளியே உருட்டி விடுபவனைப் போல் பயங்கரமாகப் பார்த்தபடியே கேட்டான், ''கசாப்புக் கடைக்காரன் வெட்டுகிற ஆட்டின் உடலைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டுமே அன்றி, போகிற உயிரைப் பற்றிக் கவலைப்பட்டால், அவனால் தொழில் செய்ய முடியுமா? கடமையைச் செய்கையில் இம்மாதிரி கருணையும், பாசமும் தலைநீட்டலாமா? அதுவும் நம் போன்றவர்கள், அவற்றுக்கு இடம் கொடுக்கலாமா?''

அக்னி ராஜு அங்கிருந்தபடியே எல்லோரையும் பார்த்து உரக்கக் கத்தினான். ''புதன்கிழமை — நாளை இரவு மூன்று மணி வண்டியில்தான் பரசுராம் ரிசர்வ் செய்து கொண்டு வருகிறார். அதற்குள் மற்ற வண்டிகள் எல்லாம் போய்விடும். எனவே, சரியாக இரண்டு மணிக்குள், தண்டவாளத்தைப் பெயர்த்து வைத்தாகிவிட வேண்டும். பொல்லாத பரசுராமைச் சுமந்து வந்த குற்றத்துக்காக அவரோடு சேர்த்து, அந்த ரயில் வண்டியையும் முழுதும் நொறுக்கிவிட வேண்டியது என்பதுதான் தீர்ப்பு. கூட்டம் இத்துடன் கலையலாம்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

அன்றுதான் புதன்கிழமை. அமாவாசைக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன. வானத்தில், வலைவீசி, அப்பிக் கொண்டாற்போல், படர்ந்திருந்த கரிய மேகங்கள் கலைந்து விட்டனவோ என்னவோ, தெரியவில்லை. கையை நீட்டினால், விரலில் ஒட்டிக்கொள்ளும் போல், அவ்வளவு இருட்டு. அந்த இருளைப் பிளந்து கொண்டு, மண்ணிலிருந்து 'மின்னலைப் போல' எப்போதாவது திடீர் திடீரென்று பளிச்சிட்டு மறையும் பட்டாசுகளின் வெளிச்சம், வெட்டி வீசிக் கொண்டிருந்தது. ஆம்! எட்ட இருந்த ஆனால் பக்கத்துக் கிராம மக்களுக்கு, இரண்டு நாட்களுக்கு முன்பே தீபாவளியைக் கொண்டாடுவதில் ஏற்பட்ட ஓர் அவசரம். குளிரிலே வெடவெடத்துக் கொண்டிருந்த பறவைகள், அந்த வெடிச் சத்தங்களைக் கேட்டு மேலும் நெட்டிச் சிலிர்த்து நடுநடுங்கின.

அக்னி ராஜுவின் கோஷ்டி குறிப்பிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டது. அத்தனை நேரம் 'சோ'வென்று அடித்துக் கொண்டிருந்த மழை நின்று விட்டிருந்தது. எதையோ கண்டுவிட்டு, நேரப் போகிற எதையோ எண்ணிக் கண்ணீர் வடிப்பதைப் போல் மரங்களிலிருந்து தண்ணீர் விட்டு விட்டுச் சொட்டிக் கொண்டேயிருந்தது.

எங்கோ இருந்த ஆந்தை ஒன்று எதற்கோ திடீரென்று பயங்கரமாக அலறி, திடுதிடுக்க வைத்தது. கோஷ்டியினர்—தண்டவாளத்தை நெருங்கினர். பரசுராம் வருகிற வண்டியைத் தவிர, பாக்கி வண்டிகள் எல்லாம் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்து விட்டன. இனி அடுத்து வரவேண்டியது அந்த வண்டிதான். அக்னி ராஜு அவர்களைத் துரிதப்படுத்தினான்.

இமைக்கும் நேரத்துக்குள் அந்தக்கோஷ்டியினர் தங்கள் கையிலிருந்த ஆயுதங்களினால் மிக்க சுறுசுறுப்புடன் இணைந்திருந்த தண்டவாளத்தை மூலைக்கொன்றாய்ப் பெயர்த்தெறிந்துவிட்டு, மூலைக்கொருவராய்க் கண்ணுக்கெட்டாத தூரங்களில் ஒளிந்து கொண்டு வரப் போகிற துர்அதிர்ஷ்டம் பிடித்த வண்டியையே கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய ஆவலை அதிகம் தூண்ட விரும்பாதது போல், ஒளிக்கற்றையை வாரி இறைத்துக் கொண்டு, குறிப்பிட்ட நேரம் தவறாமல், வண்டி தூரத்தே வந்து கொண்டிருந்தது.

அவ்வளவுதான்; ''இனிச் சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பிராந்தியமே, அழுகையும் கூக்குரலுமான, கோர இரைச்சலுக்கு இரையாகப் போவதை முன்னாடியே எச்சரிப்பது போல், உயிரற்றதாயிருப்பினும் — உயிரற்றதாக இருப்பதனாலேயே — தன்னை நம்பி இருப்பவர்களிடம் நன்றியோடு அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பணத்துக்கு, நிறைவேற்ற வேண்டிய பணி பாக்கியிருக்கும்போது இடையிலே இந்த நாச வேலைக்காரர்களால் நான் நாசமாய்ப் போனாலும் மற்றவர்களைக்கூட என்னால் காப்பாற்ற முடியவில்லையே'' என்று அலறுவதே போல், அந்த ரயில் வண்டி தன் புகைக் கரங்களை விண்ணை நோக்கி உயர எழுப்பி, நெஞ்சம் குமுறிப் பெருமூச்சும், கடுநீரும் வடித்து, வானை முட்டும் வண்ணம் — அங்குள்ள யாரையோ உதவிக்கு அழைப்பது போல், 'க்கூ..... கூ..... க்கூ...... என்று நீளக் குரல் கொடுத்து அலறியது.

அந்தச் சமயத்தில்தான் மிகப் பெரிய ஆச்சரியம் ஒன்று நிகழ்ந்தது. அதை அந்தக் கொள்ளைக் கூட்டத்தினரும் எதிர்பார்க்கவில்லை. அதே போல், அந்த ரயில் தண்டவாளங்களும் எதிர்பார்க்கவில்லை.

''கரிய இருளைப் பிளந்து கொண்டு பெரிய ஆர்ப்பாட்டத்துடன் வருகிறாளே புகை அரக்கி, அவளுடைய தலைவிதி, இதோ என் காலடியில் பிளந்து கிடக்கிறது. என்னை அவள் தீண்ட வேண்டியதுதான், அண்டம் வெடித்துச் சிதறுவதே போல், கண்ட



TODAY DIETARY SUPPLEMENTS ARE NEEDED MORE THAN EVER BEFORE



ஊட்டக் குறைவை நிரப்பும் உணவு வகைப் பொருட்கள் இன்று எப்போதைக் காட்டிலும் மிகுந்த அவசியமுள்ளதாக இருக்கிறது. கோகோ மால்டினை விடச் சிறந்த ஊட்ட உணவுப் பொருளை உங்கள் பணத்தைக் கொண்டு வாங்கவே முடியாது. இது ஒரு முழுமையான ஆகாரம். ஊட்டச் சத்து செறிந்த லட்சிய உணவு வகைப் பொருள். முழு ஆடைப் பாலும், கோகோவும், சிறந்த தரமான பார்லி மால்ட்டும், குளுகோஸும், திறம்படக் கலக்கப்பட்ட கோகோ மால்டினில் வளரும் தசைகளுக்குத் திடத்தை எலும்புகளுக்கும் அமைப்பையும் வலிவும், உரமும் பெறவும் வேண்டிய புரதங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தாது உப்புக்கள் எல்லாம் உள்ளன. நீங்கள் சுறுசுறுப்புடன் செயல் புரிவதற்கு வேண்டிய மதிப்பு மிக்க A, B, B.-2 மற்றும் D. வைட்டமின்கள் கோகோ மால்டினில் இருக்கின்றன. கோகோ மால்டினை சூடாக அருந்தினால், அது சோர்ந்துபோன நரம்புகளுக்கு உற்சாகமளிக்கிறது. படுக்கப் போகும்போது அருந்தினால், ஆழ்ந்த உறக்கம் ஏற்பட வகை செய்கிறது.

கோகோ மால்டின்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும் லட்சிய உணவு பானம்


கோகோ மால்டின் லாபரடரீஸ்

உரிமையாளர்கள்: புரோட் லிங்க் பிரைவேட் லிட்., 46, பூசா ரோடு, புது டெல்லி-5 போன்: 52835

ஏகபோக சென்னை ஏஜெண்ட் :

76, எல்லிஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை - 2 Phone : 85982 Grams : SOUTHLAND

TL-NP-22



ஜனவரி 14 முதல்
சென்னை
பிளாஸா · மகாராஜா
மகாலக்ஷ்மி மற்றும் தென்னாடெங்கும்
சித்ரா
புரொடக்ஷன்ஸ்
சித்தி
இசை : M.S.விஸ்வநாதன் • பாடல்கள் கண்ணதாசன் • காமிரா : R.சம்பத் W.I.C.A.
எடிட்டிங் : R.தேவராஜன் • கலை : R.நாகராஜன் • ஸ்டில்ஸ் : D.I.சந்தாமியான்
ஸ்டுடியோ
பரணி
திரைக்கதை - வசனம் - டைரக்ஷன் :
K.S.கோபாலகிருஷ்ணன்
G.H.RAO

துண்டமாகப் போகிறான். இத்தனை காலம், என் கழுத்தின் மீது, தன் இரும்புக் கால்களால் உதைத்துச் சென்றவனை, இன்று நான் சரியான படி பழி வாங்கப் போகிறேன்'' என்று அத்தனை நேரம் இருமாந்திருந்த, பெயர்ந்த தண்டவாளங்களும் எதிர் பார்க்கவில்லை; ஏமாந்து விட்டன.

குபீரென்று எங்கிருந்தோ கிளம்பிய ஒருவன் தன் கையிலிருந்த தீப்பந்தத்தை இடமும் வலமுமாகச் சுழற்றியவண்ணம், புயலை விட வேகமாகத் தண்டவாளத்தின் நடுவே ஓடி, எதிரே வரும் ரயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

மறுகணம்......?

கொள்ளை கோஷ்டியினரின் தலைவிதியையே — ரயிலைக் கவிழ்க்க வந்தவர்களின் திட்டத்தையே — புரட்டி விட்டு — ரயில் நின்று விட்டது.

அவ்வளவுதான்; தீப்பந்தத்தை ஏந்தி வந்தவன், அந்தக் கணமே அதை எங்கேயோ வீசி எறிந்து விட்டு, புகையைப் போல் எங்கோ மறைந்து சென்று விட்டான்.

இமைக்கும் நேரத்தில், இத்தனையும் நிகழ்ந்து விட்டதைக் கண்டு விட்ட கொள்ளையர்கள், புற்றிலிருந்து புறப்படும் ஈசல்போல், ரயில் பெட்டிகளிலிருந்து பிரயாணிகள் கீழே இறங்குமுன், அத்தனை பேரும் சிட்டாய்ப் பறந்து, மூலைக்கொருவராய்ச் சென்று விட்டனர்.

நதிகள், எத்தனை கிளை கிளைகளாய்ப் பிரிந்து சென்றால் என்ன; கிளை கிளையாய்ப் பிரியாமலே எத்தனை நதிகள் சென்றால் என்ன? எல்லாம் இறுதியில் சங்கமமாகிற இடம், ஒன்றுதானே. கூட்டமாயும் பிரிந்தும் சென்றவர்கள் ஒருவர்பின் ஒருவராய்த் திரும்பி வந்து அந்த இரகசிய இல்லத்தில், ஒன்றாய்க் கூடிவிட்டனர். ஆனால் ஒவ்வொருவர் முகத்திலும், ஒவ்வொரு விதமான பீதியும் கலக்கமும் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தன.

எவ்வளவோ முன் ஜாக்கிரதையாகத் தாங்கள் நிறைவேற்றிய திட்டம், எப்படி — யார் மூலம் எதிரிக்கு — அல்லது வெளியுலகுக்கு எட்டியிருக்க முடியும்?

'தண்டவாளத்தைப் பெயர்த்தது, கடவுளுக்கும், தண்டவாளத்துக்கும் தங்கள் கையிலிருந்த ஆயுதங்களுக்கும், அங்கிருந்த மரம் மட்டைகளைத் தவிர, அன்னியர்கள் அறிந்திருக்க முடியாத இரகசியமாயிற்றே! பின் எப்படி இது வெளியாயிற்று? கடவுளைப்பற்றிக் கவலை இல்லை. அவருக்கு இதைவிட எவ்வளவோ வேலை; இதைப் போய் யாரிடம் சொல்லி அவருக்கு ஆக வேண்டியதுமில்லை. பிறகு மற்றவையெல்லாம் அஃறிணை. அவற்றிடம் சந்தேகப்படுவது அறிவின்மை. அப்படியானால் இன்னும் யாரா யிருக்கும்? யார் இந்தக் காரியத்தைச் செய்திருப்பார்கள்? தங்கள் கூட்டத்தின் ஒற்றுமைக்குச் சோதனைக் காலம் வந்து விட்டதா? தங்களுக்குள் ஒரு துரோகியா?

அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒன்றும் புரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ரகசியம் — ரகசியமாயிராமல் அதன் நிலைமாறினால், தன் தலைவன் குணம் எப்படியெல்லாம் மாறும் என்பதை நன்கு அறிந்திருந்த அவர்கள் குடலெல்லாம் நடுங்கியது. தலைவன் வந்து, இனி எல்லோரையும் என்னவெல்லாம் செய்யப் போகிறானோ என்கிற பயத்தினால் அவர்கள் அத்தனைபேரும் வாய்மூடி மௌனியாய், பேசாமல், பேச முடியாமல், ஒரு பயங்கர நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு, கவலைப்பட்டு, நடுங்கிக் கொண்டே யிருந்தனர். ஆனால் யாருடைய சிந்தனையில், என்ன எண்ணங்கள் விரிந்து ஓடினால் என்ன? ரங்கையா, சிந்தனையற்று, கவலையற்று, அமைதியாய், அந்த அமைதியே ஓர் அழகாய், அந்த அழகே ஓர் உருவாய், நிம்மதியாக உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அதே சமயத்தில் அக்னிராஜுவும் உள்ளே நுழைந்தான். விகாரமாயும், பயங்கரமாயும் காட்சியளிக்கும் தலைவனின் முகத்தைத் அந்த வேளையில் ஏறெடுத்தும் பார்க்கத் துணியாதவர்களைப் போல் அனைவரது சிரங்களும் தொங்கிப் போய்க் கிடந்தன. அவர்கள் தலை நிமிரவே யில்லை.

தலைவனிடமிருந்து முதன் முதலாக என்ன வார்த்தை வரப் போகிறதோ என்று அவர்களது



செவிகள் பயத்தினுல் விறைத்துக் கொண்டன. அக்னி ராஜு சட்டென்று தன்னுடைய தலைப்பாகையையும் பெல்டையும் கழற்றி மேஜையின் மீது போட்டுவிட்டு, கையில் துப்பாக்கியை ஏந்திய வண்ணம் கூட்டத்தினரை ஒரு நோட்டம் விட்டான்.

பிறகு ரங்கையாவின் அருகில் வந்து அவனை நோக்கித் துப்பாக்கியை நீட்டியபடியே, மிகவும் கம்பீரமான குரலில் கேட்டான்: ''உன் மனம்போல், ரயில் நின்று, அத்தனை பேர்களும் உயிர் தப்பி விட்டதில் உனக்குத் திருப்திதானு?''

தலைவனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அத்தனை பேருடைய உடம்பும் வெடவெடத்தது. ரங்கையாவோ, தன் தலையில் பெரிய இடியொன்று தாக்கி இறங்கினுற்போல், ஒருகணம் அப்படியே நடு நடுக்கிப் போனுன். மறுகணம்.....?

'தங்களுடைய யூகம் எத்தனை தூரம் சரியாகிப் போய் விட்டது' என்று மற்றவர்களில் சிலர் மனம் மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, ரங்கையா, ''சத்தியமாகச் சொல்கிறேன். ரயிலை நிறுத்தியது நானல்ல '' என்று அந்தப் பிராந்தியமே எதிரொலிக்கும் வண்ணம் அலறினுன்.

அவனை அப்படியே தூக்கி நிறுத்திய அக்னிராஜு, ''யார் என்று எனக்குத் தெரியும். அநாவசியமாக நீ ஏன் பதறுகிருய்? ரயில் நின்றதில் உனக்குத் திருப்தியா என்றுதானே கேட்டேன்! உன்னை நான் குற்றம் சாட்டவில்லையே !'' என்றுன்.


''ஆனுல் —

''ரயிலை நிறுத்திய குற்றவாளி வேறு எங்கேயோ இருந்து வந்துவிட வில்லை. அவன் நம்மில் ஒருவனுகத் தான் இருக்க முடியும் — இருக்க வேண்டும். இந்தக் கூட்டத்தில் இதுவரை துரோகச் செயல் நடந்ததில்லை. போட்ட இட்டங்கள் தவறியதில்லை. இன்று, நடக்கக் கூடாத இரண்டுமே நடந்துவிட்டன. அத்தகைய துரோகிக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்று நீங்களே தீர்மானியுங்கள்'' என்று அக்னிராஜு கூறி முடிப்பதற்குள், ''சுட்டுத் தள்ள வேண்டும், சுட்டுத் தள்ள வேண்டும்'' என்று மூலைக்கொரு கோஷங்கள் எழுந்தன.

அதே சமயத்தில் அக்னிராஜு அந்தத் துரோகியின் பெயரைக் கூறி விட்டான்.

மறுகணம்......?

ஆச்சரியத்தினுல் அனைவரும் ஒரு துள்ளுத் துள்ளினர். ''நீங்களா.





நீங்களா?'' என்று கேட்டனர். தலைவரா இந்தக் காரியத்தைச் செய்திருப்பார்? அனைவரது உதடுகளும் முணுமுணுத்தன.

தலைவன் என்றால் அவனும் மனிதன்தானே? மனிதன் என்றாலே அவனும் தவறு செய்யக் கூடியவன்தானே! மன விகாரங்களுக்கேற்ப; மற்றவர்களைப் போல் எப்பொழுதும் இல்லாவிட்டாலும், எப்பொழுதாகிலும் அவனும் பாச உணர்ச்சிகளுக்கு இரையாகிவிடக் கூடிய ஒரு பிறவிதானே ?

அக்னிராஜு விளக்கிக் கூறினான்:

''நீண்ட நாட்களாக என்னுடைய மகனைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவலோடு இருப்பவன் நான். அதற்கு அவனுடைய பாட்டி அவனை என்னிடம் அனுப்பி வைக்க மறுக்கிற விஷயம் உங்களுக்குத் தெரியும். ஆனால் இன்று திடீரென்று என்னுடைய மகன், தன்னுடைய பாட்டியுடன் இங்கு புறப்பட்டு இதே ரயிலில் வந்துகொண்டிருப்பதாகத் தந்தி கொடுத்திருந்தான். அதைப் படித்ததும் நான் துடித்துப் போனேன்.

''எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு, மனம் மாறி, என் மகன் என்னைத் தேடி வரும்போது வழியில் அவன் என்னாலேயே கோர விபத்துக்கு இரையாகி மாளவேண்டுமா என்கிற மனப் போராட்டத்தோடு இறுதி நிமிஷம் வரை போராடினேன். முடிவில் பாசத்தின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் கடமையைத் தூக்கி எறிந்துவிட்டுத் தான் கையில் தீப்பந்தத்துடன் சென்று ரயிலை நிறுத்தினேன். புத்திரபாசம் என்னைப் பித்தனாக்கி விட்டது. ஆயினும் நான் செய்த குற்றத்தின் கடுமையை, அதன் தன்மையை — நான் மறந்து விடவில்லை.

''நான் இட்ட ஆணையை நானே மீறிவிட்டேன். கூட்டத்தையும் கூட்டி, அதற்கென்று சில சட்டங்களையும் இயற்றி, அதை மற்றவர்கள் தலையில் மட்டும் திணித்து விட்டு, மனம் போனபடி செயல் புரிந்துவிட்ட இந்தச் சுயநலக்காரத் தலைவனை, உங்கள் கையாலேயே சுட்டுக் கொல்லுங்கள். ஆனால் இறப்பதற்கு முன்பு நான் உங்களிடம் ஒன்றே ஒன்றை வேண்டுகிறேன்.

''அதைத் தலைவன் என்னும் உரிமையில் கேட்கவில்லை. இப்போது நான் உங்கள் தலைவனுமல்ல. அந்தப் புனிதமான பதவிக்கு நான் அருகதையற்றவனாகி விட்டேன் என்பதை அறிவிக்கவே, நான் இந்த அறையினுள் நுழைந்ததுமே எனது பதவிக்குரிய சின்னங்களையெல்லாம் கழற்றி மேஜை மீது போட்டு விட்டேன்.

''இப்போது நான் உங்கள் முன் ஒரு குற்றவாளி.

''மரண தண்டனை அடையப் போகும் குற்றவாளி ஒருவனின் இறுதி விருப்பத்துக்கு அளிக்கும் ஒரு மதிப்பை எனக்கு அளித்தால் போதும். அதையே நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்'' என்று கூறும்போது அக்னி ராஜுவின் சிம்மக் குரல், குகைக்குள்ளிருந்து ஒலிப்பது போலத் தீனமாகக் கேட்டது. ஒரு கணம் அவன் தொண்டை கரகரத்தது. பிறகு அவன் தனக்கே உரிய கம்பீரமான குரலில் கூறினான்:

''நான் கூறவேண்டியவை எல்லாம் அவ்வளவுதான். அவை அத்தனையும் உண்மை. இப்போது நான் உங்கள் அனுமதியின் பேரில் என்னுடைய வீட்டுக்குப் போக விரும்புகிறேன். அங்கே இந்நேரம் வந்திருக்கும் என்னுடைய மகனைப் பார்த்துச் சில நிமிஷங்கள் பேசிவிட்டு, நான் இங்கு மரணத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தவறாமல் வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு அக்னிராஜு அடியெடுத்து வைத்தபோது தான் மற்றொரு மிகப் பெரிய ஆச்சரியம் நிகழ்ந்தது.



'தடால்' என்று தலைவனின் காலில் விழுந்த ரங்கையா, அவன் இரண்டு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ''தங்களை நான் ஏமாற்றிவிட்டேன், என்னை மன்னியுங்கள், மன்னியுங்கள்'' என்றுகதறினான். அப்படியே ஒரு கணம் அக்னி ராஜுவும், அங்கு கூடியிருந்தவர்களும் ஒன்றுமே புரியாமல் விழித்தனர். எல்லோரும் ரங்கையாவின் முகத்தையே பார்த்த வண்ணம் இருந்தனர். அவன் அதையே திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தான். அக்னி ராஜு அவனைத் தூக்கி நிறுத்தினான்.

''நான் உங்களை ஏமாற்றியது மன்றித் தங்கள் உள்ளத்தில் மாளாத புத்திர பாசத்தையும் தூண்டிவிட்டு. அநியாயமாக வஞ்சித்து விட்டேன்'' என்று அவன் கூறிக்கொண்டு வரும்போதே, ''நீ என்ன சொல்லுகிறாய், ரங்கையா ?'' என்று இடைமறித்தான் அக்னிராஜு. அப்போது அவனுடைய சொற்கள் குழப்பத்தால் தடுமாறின.

ரங்கையா தெளிவாகக் கூறினான்:

''உங்கள் மகன் ஹரிபால், அவன் பாட்டியுடன் அந்த ரயிலில் வரவில்லை. நீங்கள் வீட்டில் போய்த் தேடினால் அங்கு அவர்கள் இருக்க மாட்டார்கள்'' என்றான்.

இதைக் கேட்டதும் அக்னி ராஜு, ''ரெங்கையா, எப்படித் தெரியும் உனக்கு? தந்தியில் இன்று இந்த வண்டியில் வருவதாகத் தானே எழுதியிருந்தது?'' என்று கத்தினான். மறு கணம், ''தந்தியே பொய்.

அதை நான்தான் உங்கள் மகன்பேரில் கொடுத்தேன்'' என்று ரங்கையா கூறி முடிப்பதற்குள், 'ஆ'வென்று அலறிய அக்னிராஜு அப்படியே கண நேரத்துக்குள் தூள் தூளாகி விட்டாற் போல் 'தொப்'பென்று நாற்காலியில் சாய்ந்துவிட்டான்.

ஏககாலத்தில் கடமையிலும், பாசத்திலும் தோற்றுப்போன இரண்டு மிகப் பெரிய அடிகளின் அதிர்ச்சியைத் தாளமாட்டாமல் அக்னிராஜு கணநேரம் துடித்தான்.

'மனித உள்ளம்தான் எத்தனை விசித்திரமானது! அதை வென்றுவிட்டதாகக் கர்வப்படுவதில் அர்த்தம்தான் இருக்கிறதா? மனத்தின் எந்த ஒரு மூலையிலிருந்து, என்ன உணர்ச்சி எப்போது வெளிப்பட்டு அது மனிதனைக் கவிழ்த்துவிடும் என்று அறுதியிட்டுக் கூற முடியுமா? செருப்பைக் காலில் போட்டுக்கொண்டால் ஒழியக் கடிக்கிற இடத்தைக் கண்டறிய முடியுமா? அதேபோலச் சமயமும், சந்தர்ப்பமும் நேரும்போதுதான் உண்மையான மனிதனைக் கண்டறிய முடிகிறது. அந்த ஒரு சந்தர்ப்பத்தைத்தான் என்னிடம் நீ ஏவிவிட்டாய். அதில் நான் வீழ்ந்து விட்டேன். நான் இத்தனை காலம் எதற்கும் அஞ்சாத தலைவனாக இருந்து கண்ட பலன் என்ன?


''அன்று நீ பரகராமைப் பற்றிக் கூறிய போது உன் கன்னத்தில் அறைந்தேன். அது இன்று என் கன்னத்தில் எதிரொலிக்கிறது. அந்த ஒரு தனி உயிருக்காக, எண்ணற்ற எத்தனை உயிர்களைத் துச்சமாகப் பேசி அழிக்கக் கட்டளையிட்டேன்! எதுவும் நமக்கென்று வரும்போதுதான் அதன் தன்மையும் ஆழமும் புலனாகின்றன. ஆஹா! வாயினால் பேசிவிடுவதுதான் எத்தனை சுலபமாக இருக்கிறது? ஆனால் அந்தப் பேச்சுக்களைச் செயலாக்க முயலுகிறபோது?

''மகனென்ற பாசம் – தந்தையென்ற கடமை – இது ஒன்றைத் தவிரப் புறச் செயல்களுக்கு அங்கு இடமேயில்லையே.''

சிந்தனைத் தீயில் வெந்து சாம்பராகிக் கொண்டிருந்த அக்னிராஜு திடீரென்று ரங்கையாவின் இரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கூறினான் :

''இதை நான், நீ அடைந்த வெற்றி என்பதைவிட அன்பின் வெற்றியாகவே கருதுகிறேன். 'மகன் வருகிறான்' என்று அறிந்ததும் கண நேரத்தில் என் உள்ளம் அனுபவித்த ஆனந்தத்தை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அவன் இறந்துவிடுவானோ என்கிற பயம் வந்ததும் மனம் தவித்ததை நினைத்துப் பார்க்கிறேன். இந்த மனித யந்திரம், அன்புப் பசை இல்லாவிடில் வாழ முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். 'புறத்துறுப்புடன் மட்டுமே வாழ்ந்து வந்த நான் இன்றுதான் அகத்துறுப்பு அடையப் பெற்றேன். இனிமேல், நான் இந்தக் கூட்டத்துக்கு அருகதையற்றவனாகி விட்டேன்.

''அகத்துறுப்பு' அற்ற ஒருவனைத் தேர்ந்தெடுத்து இக் கூட்டத்தைக் கொண்டு செல்வது இனி உன் பொறுப்பு ரங்கையா!'' என்று அக்னிராஜு கூறிக்கொண்டிருக்கும் போதே அங்கிருந்தவர்கள், தலைகுனிந்த வண்ணம் ஒவ்வொருவராக வெளியேறினர்.



பம்பாய் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா சென்ட்ரல் ஆபீஸைச் சார்ந்த ஸ்ரீ கே. நடராஜன் அவர்கள் குமாரத்தி சௌ. மீனு சுஷிக்கும், டிராம்பே ஆட்டோமிக் எனர்ஜி எஸ்டாபிளிஷ்மெண்டைச் சார்ந்த ஸ்ரீ V. R. ராமன். B. Chem. (Engg.) அவர்களுக்கும் சேலத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க. மணமக்கள் !

குடுகுடுப்பை

கவியோகி



உலகமெல்லாம் சுற்றிவந்த
உண்மைக் குடுகுடுப்பை
உண்மைக் குடுகுடுப்பை
உள்ளத்தைக் கேளுங்கோ!

கலகமில்லா நல்லவழி
காட்டும் குடுகுடுப்பை
காட்டும் வழியினிலே
கவலையின்றிச் செல்லுங்கோ
குடுகுடு குடுகுடு கொடு கொடு

சொல்லடீ ஜக்கம்மா
சொகுசான நல்லகுறி
அல்லலின்றி நாடெல்லாம்
ஆக்கம் பெருகிடவே
ஊக்கம் பெருகிடவே

துரிதம்

குடுகுடுகுடுகுடு குப்பாயி
கொடுக்கும் வாக்கைக் கேளுங்கோ
கடுகடு கோபம் செல்லாதே
கட்சிச் சண்டை பொல்லாதே
பெரியவர் சொல்லைக் கேளுங்கோ
பிரிவினைப் பீடையைத் தீருங்கோ
வரிகளை யெல்லாங் குறையுங்கோ
வயிறு குளிரப் பாருங்கோ
விலைவாசிகளை இறக்குங்கோ
விருந்துச்செலவை விலக்குங்கோ
மலையா துழைத்துப் பிழையுங்கள்
வறுமை நோயைத் துரத்துங்கள்
காய்கறித் தோட்டம் போடுங்கோ
கனிகிழங்குகளை உண்ணுங்கோ
பேயினுங் கொடிய பஞ்சத்தைப்
பின்னும் வராது விரட்டுங்கோ!
பணத்தைத் தொழிலாய் மாற்றுங்கோ
பாடுபட்டுப் பிழையுங்கோ
கணக்காய்வாழப் பழகுங்கோ
கருப்புப் பணத்தை வழுவுங்கள்
பணம்பண மென்றே பறக்காமல்
பாழும் புகையிலை போடாமல்
உணவுப் பயிர்களை உண்டாக்கி
ஊரின் பசியைத் தீருங்கள்.
உழைப்பவரே இனிப் பிழைப்பவராம்
உபகாரிகளே செழிப்பவராம்
மழைக் கருணைக்கே மதிப்புண்டு
மனம் புண்ணானால் கொதிப்புண்டு
பசியே புரட்சிக் கனலாகும்
பயிரே வாழ்வின் உயிராகும்

சொன்ன குறி

சுத்தானந்த பாரதியார்



பசியைத் தீர்க்கப் பாடுபடும்
பாட்டாளி நம் கூட்டாளி !

இதனை இதனால் இவன்முடிக்கும்
என்றே நன்றாய் ஆராய்ந்தே

அதனை அவனால் முடித்திடுங்கள்
அறிவுக் குரலை மடுத்திடுங்கள்!

அள்ளிக் கொடுக்கும் அமெரிக்கா
அன்பால் ஆக்கம் பெறுவோமே

துள்ளிக் குதிக்கும் சீனாவின்
துடுக்கை அடக்கும் குறடாவாம்.'

ஒத்ததறியா துலகினிலே
உன்மனப்படியே திரியாதே

சித்தப்பன் பெரியப்பனை
சீர்திருத்தம் புரியாதே

தேர்தல்அமளி தெருவினிலே
தேடியகாசு புழுதியிலே

பேர்புகழ்பட்டத் தம்பட்டம்
பேச்சும்செயலும் மிகமட்டம்

மண்ணில்மண்டை உடைத்துக்கொண்டே
மதிமண்டலத்தைப் பிடிக்கின்றார்

விண்ணில்பறந்து சுழல்கின்றார்
விஞ்ஞானப்போரில் உழல்கின்றார்

ஐயோவென்றே போகின்றார்
அணுக்கதிராலே வேகின்றார்

தெய்வத் திருவருள் எப்படியோ !
தேசியவிதியும் இப்படியோ!

அவரவர் மொழியைப் பேசுங்கோ
ஆங்கிலம் பொதுவா யாக்குங்கோ

விவகாரங்கள் விட்டொழிய
விண்கிளர்ச்சி கெட்டொழிய

கடகடவென்றே குறிசொன்னேன்
கடவுளை நம்பி வாழுங்கள்

சடசடவென்றே சாற்றிவிட்டேன்
ஜக்கம்மாளைப் போற்றுகிறேன்

பார்வாழ்வெல்லாம் சீர்பெறவே
பழுதில்லாத குறிசொன்னேன்

ஓர்குலமாகர் சேருங்கள்
உலக நலத்தைக் கோருங்கள்

குடுகுடுகுடுகுடு வாழ்வோட்டம்
குணக்கம்வந்தால் திண்டாட்டம்

கொடுகொடு கொடையே நல்லாட்டம்
குவலயம் சக்தி விளையாட்டம்
குடுகுடுகுடுகுடு ஜகதம்பா !



காதல் இல்லையேல் காதல்



'சோ'

காட்சி 31

பம்பாய் விமான நிலையம்

(சென்னையிலிருந்து புறப்பட்ட விமானம், பம்பாய் வந்து இறங்குகிறது. பலதரப்பட்ட மனிதர்களிடையே கனகசபையும் விமானத்திலிருந்து இறங்குகிறார்... அவரைச் சுரேஷ் எதிர் கொண்டு அழைக்கிறான். வர வேற்பறைக்கு வந்து சேருகிறார்கள். கனகசபை எதையோ பறி கொடுத்தவர் போல் வருத்தமயமாக இருக்கிறார்.)

சுரேஷ்: நமஸ்காரம் ஸார்.......!

கன: நீ......

சுரே: நான்தான் ஸார், சுரேஷ்..... சபேசன் உங்களைப் பார்த்து அழைச்சிக்கிட்டுப் போகும்படி என்னை அனுப்பிச்சார். நீங்க போன தடவை பம்பாய் வரும் போது நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்.

(காரில் வந்து அமர்கிறார்கள் - கார் கிளம்புகிறது.)

கன: ஆமாம்.... சபேசனோட அந்த மீட்டிங்கிலேகூட உன்னைப் பார்த்திருக்கேன்.

(அவர் கண் கலங்குகிறது...)

சுரே: ஏன் ஸார்..... என்ன.....?

கன: உனக்கு விஷயம் தெரியாதா ?

சுரே: தெரியும் ஸார்..... சபேசன் கொடுத்த தந்தி சமாசாரம் தானே...— மாலதி......

கன: ஆமாம்பா..... மாலதியைக் காணலியாமே! எனக்கு என்ன செய்யறதுன்னு ஒண்ணுமே புரியலையே.....

சுரே: சபேசன்கூட என்ன செய்யறதுன்னு புரியாமல்தான் திணறிக்கிட்டிருக்கார் ஸார்...... இந்தச் சமயத்துலே அவருக்கு அர்ஜெண்டா பூனா போக வேண்டியதாப் போயிடுத்து.....

கன: சபேசன் இப்ப பம்பாய்லே இல்லே..?

சுரே: இல்லே. அதனுலேதான் உங்களுக்குத் தந்தி கொடுத்துட்டு அவர் கிளம்பிட்டாரு. அவர் இருக்க முடியாததுனுலேதானே உங்களையே பணம்கூட எடுத்துக்கிட்டு வரச் சொல்லித் தந்தி கொடுத்திருக்கார்.

கன: ஏம்பா..... 'மாலதியைக் காணோம்• எட்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் பணம் கொண்டு வா'ன்னு தந்தி கொடுத்திருக்கானே...... பணம் எதுக்கு?

சுரே: என்ன ஸார் இது. உங்களுக்குப் புரியலையா? மாலதியை யாரோ ஒருத்தன் தூக்கிக்கிட்டுப் போய் வெச்சுக்கிட்டுச் சபேசனை மிரட்டிப் பணம் பறிக்கிறான் ஸார். இன்னிக்கு ராத்திரி பதினொரு மணிக்குள்ளே எட்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் அவன் கைக்குப் போய்ச் சேரலைன்னு மாலதியை க்ளோஸ் பண்ணிடறதா மிரட்டி மொட்டைக் கடிதம் போட்டிருக்கான்.

கன: அய்யய்யோ! யாருப்பா அவன் ? எங்கே இருக்கான்?

சுரே: அவன் என்ன அட்ரஸா கொடுப்பான்? ஆனு அந்தப் பணத்தை அவன்கிட்ட சேர்த்துட்டா மாலதிக்கு ஒரு அபாயமும் கிடையாது. சபேசன் எங்கிட்ட பணத்தைக் கொடுத்து இன்னிக்கு அனுப்பி, மாலதியை மீட்டு வரச் சொல்ல நினைத்திருந்தார். ஆனு எதிர்பாராதவிதமா ஒரு கேஸ் விஷயமா பூனு போக வேண்டியதாப் போச்சு..... இன்னிக்குப் பாங்க் வேறே விடுமுறை நாள். அதனுலேதான் உங்களையே பணம் எடுத்துக்கிட்டு வரச் சொல்லி விட்டார்.......

கன: சபேசன் இன்னிக்கு வரமாட்டானு?

சுரே: நாளைக்குத்தான் ஸார் வருவார்.

கன: அப்ப மாலதியின் கதி !

சுரே: ஏன் ஸார்...... நீங்க பணம் கொண்டு வரலியா ?

கன: சபேசன் வராமலே, பணத்தை அனுப்பி மாலதியை மீட்டுப்பிடலாம்னு சொல்றியா ?

கரே: வேறே வழி இல்லையே ஸார். அந்த மிரட்டல் கடிதத்துலே என்ன எழுதி யிருக்கான்னு பாருங்க — இதோ என்கிட்ட தான் இருக்குது.....

(கடிதத்தைக் காட்டுகிறான், கனகசபை படிக்கிறார்.)

கன: "சபேசன்! மாலதியை எங்கு தேடினாலும் கிடைக்க மாட்டாள். அவள் இப்போது என் கைதி. நீ எனக்கு ரூபாய் எட்டாயிரத்து ஐந்நூறு கொடுத்தால் அவளை விடுதலை செய்யலாம். இந்தப் பணம் நாளைய தினம் இரவு பதினொரு மணிக்கு என் கைக்கு வரவேண்டும். சௌபாத்தி கடற்கரையில், கறுப்பு கோட், வெள்ளை பூட்ஸ், வெள்ளை ஹேட், சிவப்பு 'டை' அணிந்த ஓர் உருவம் பதினொரு மணிக்குக் காத்து நிற்கும். அத னிடம் உன் ஆள் மூலம் பணத்தைச் சேர்த் தால் நீ உடனே மாலதியைப் பார்த்து அழைத்துச் செல்லலாம். இல்லை யேல், அவள் பிணமாகி விடு வாள். இந்த விஷயத்தை, போலீஸாருக்கோ, மற்ற அதிகாரி களுக்கோ தெரியப்படுத்த முயற்சி நடந்தால் — அந்த முயற்சியும் அழியும், மாலதியும் அழிவாள்! — குறிப்பு: பணம் ஒரு தனி ஆள் மூலம் அனுப்ப வேண்டும்."

கரே: பார்த்திங்களா ஸார். இது நேத்து வந்த கடிதம். இன் னிக்கு ராத்திரி பதினொரு மணிக் குப் பணத்தைக் கொடுத்தால் தான் மாலதியைக் காப்பாத்த முடியும்.....

கன: அதென்னப்பா, அது? அவன் கணக்கா எட்டாயிரத்து ஐந்நூறு ரூபா கேக்கறான்?

கரே: அதுக்கு மேலே வந்தா, அவனுக்கு இன்கம் டாக்ஸ் தகராறு வருமோ என்னமோ? இதெல்லாம் எனக்கு என்ன ஸார், தெரியும்.

கன: அவன் யாருன்னே புரியமாட்டேங்குதே.......

கரே: ஒண்ணு செய்யுங்க..... இன்னிக்கு ராத்திரி பதினொரு மணிக்குப் பணத்தைக் கொடுத்து மாலதியை மீட்டு வரதுக்கு நீங்களே போங்க. அப்போ அவன்கிட்டேயே எல்லாம் விசாரிச்சுக்கலாம்......

கன: என்ன தம்பி விளையாடறே.....என் மனசு எவ்வளவு கஷ்டப்படறதுன்னு உனக் குப் புரியலையே.....

கரே: பின்னே என்ன ஸார். விஷயம் இவ்வளவு சீரியஸாப் போச்சு. நீங்க என்னமோ யோசனை பண்ணிக்கிட்டிருக் கிங்க. சபேசன் என்னைப் பொறுப்பா வைச்சு விட்டுப் போகாட்டி நான் கவலையே பட்டிருக்க மாட்டேன்.

கன: தம்பி..... நான் பணத்தை உன் கிட்டே கொடுத்துடறேன். நீதான் போய் மாலதியை மீட்டுக்கிட்டு வரணும். எனக்குப் பயமா இருக்குது..... அவனுக்கு ஒண்ணும் ஆபத்து இருக்காதே.

கரே: அவளை மீட்டுட்டா அப்புறம் ஆபத்து என்ன ஸார்.....

(கார் சபேசன் வீட்டை அடைகிறது; இருவரும் இறங்குகிறார்கள்.)

கன: அப்போ பணத்தை நீ வாங்கிக் கிறியா......

கரே: சரி..... கொடுங்க....

கன (பணத்தைக் கொடுக்கிறார்): சபேசன் இப்படி என்னைத் தனியா உட்டுப்புட்டானே. இப்ப பணத்தைக் கொடுக்கிறதான்னும் தெரியலே...... பணத்தைப் பார்த்துக்கிட்டு இருந்தா பொண்ணு கதி என்ன ஆறதுன் னும் புரியலே!..... கடவுளே......

கரே: நீங்க பேசறதைப் பார்த்தா..... பணத்தை என்னை நம்பிக் கொடுக்க பய



படருப்பலே இருக்கே..... நீங்களே வெச்சுக் குங்க. ராத்திரி தனியா போய்ப் பணத்தைக் கொடுத்து மாலதியை மீட்டுக்கிட்டு வந்தா வாங்க. இல்லே பணத்தைப் பாதுகாத்துக் கிட்டு, சௌக்கியமா இருங்க. இந்தாங்க பணம்...... நான் வரேன்.

(பணத்தைக் கனகசபையின் கைகளில் திணித்து விட்டு நகர்கிறான்.)

கன: கோச்சுக்காதே தம்பி..... ஏதோ இளவன் பேசிப்புட்டேன். இந்தா, நீதான் இந்தக் காரியத்தைச் செய்யணும். என்னாலே தனியா அந்த வேளையிலே அங்கே போய் அந்த மாதிரி ஆளையெல்லாம் பார்க்க முடி யாது....... இந்தா பணத்தைப் பிடி..... எப் படியோ மாலதி சௌக்கியமா வந்து சேர்ந்தால் போறும்.

கரே (வாங்கிக் கொண்டு): நீங்க ஒண் ணும் கவலைப்படாதிங்க ஸார்..... எல்லாம்

இனிமே நான் பார்த்துக்கறேன்...... உங்க மாலதி உயிரோட திரும்பி வரது என் பொறுப்பு...... நான் வரேன் ஸார்...

(காட்சி முடிவு)

காட்சி 32

(சபேசன் வீடு, தோட்டம்)

(கனகசபை வந்து சேர்ந்து சில மணி நேரங்கள் ஆகின்றன. அவர் தோட்டத்தில் அமர்ந்திருக்கிறார்.... சபேசனும், மாலதியும் ஒரு காரில் வந்து இறங்குகிறார்கள்.)

சபே (கனகசபையைப் பார்த்து): அடடே! கனகசபை...... நீ எங்கே இங்கே வந்தே ? எப்போ வந்தே? ஏன் வந்தே ? எப்ப திரும்பிப் போறே?

கன: யார் பேத்தறது? நான் எட்டாயிரத்து ஐந்நூறு ரூபாயைக் கண்ணை மூடிக்கிட்டுக் கொடுக்காட்டி, இப்ப மாலதியை உயிரோட பார்த்திருக்க முடியுமா...... மாலதி ! நல்ல வேளையம்மா. தப்பிச்சே.... உன்னை ரொம்பக் கொடுமைப்படுத்திட்டாங்களா........?

மால: சித்தப்பா! நீங்க பேசறது எனக்கே புரியலே. நான் யார்கிட்டேயோ மாட்டிக்கிட்ட மாதிரி இல்லே பேசறீங்க.....

கன: அப்போ நீ ஒரு அயோக்கியன்கிட்ட மாட்டிக்கலையா ?

சபே: ஏய்! அவ காலையிலேருந்து என்கூடத்தான் இருக்கா. நானு அயோக்கியன்......?

கன: அய்யய்யோ! என்னை ஏமாத்திட்டானே படுபாவி !...... சபேசா.... மாலதி, தொலைஞ்சு போகலியா ?

சபே: எழவு! என்ன உளறிக்கிட்டே இருக்கே..... என் வீட்டுக்கு வரதெல்லாம் சித்தப்பிரமை கேஸா இருக்குது!

கன: பின்னே அந்தத் தந்தி வந்துதே! 'மாலதி தொலைஞ்சு போயிட்டா, உடனே பணத்தை எடுத்துக்கிட்டு வா'ன்னு நீ தந்தி கொடுத்தியே...... இதோ தந்தி....

சபே (தந்தியைப் பார்த்து): மை காட் ! எவனோ அயோக்கியப் பய செய்திருக்கான்...

மால: இதை எப்படிச் சித்தப்பா நீங்க நம்பினீங்க......?

கன: பைத்தியக்காரத்தனம்..... இதைப் பார்த்தவுடனே எனக்குக் கைகால் ஓடலை.... பிளேன்லே வந்து சேர்ந்தேன்..... இங்கே வருவானே ஒரு பய..... சுரேஷ்.... அவன் தான் இத்தனையும் செய்திருக்கான்.

மால: சுரேஷா?

சபே: ஓஹோ!

கன: மாலதியைப் பிடிச்சு வெச்சுக்கிட்டு எவனோ அவளை மிரட்டறதா சொன்னான். எட்டாயிரத்து ஐந்நூறு ரூபா இன்னிக்கு பதினொரு மணிக்குக் கொடுத்தால்தான் மாலதியை உயிரோட பார்க்கலாம்னு ஒரு லெட்டரையும் காட்டினான்.... நான் பயந்து போய்ப் பணத்தைக் கொடுத்துட்டேன்.



சபே: பணத்தைக் கொடுத்திட்டியா.....உனக்கு அறிவு இருக்கா? நான் எங்கேன்னு விசாரிக்க வேண்டாம்?

கன: நான் என்னத்தைக் கண்டேன். நீ ஏதோ கேஸ் விஷயமா பூனா போயிட்டதா சொன்னான். நீ எங்கே போயிருந்தே ?

சபே: பூனாவிலே ஒரு எக்ஸிபிஷன். அதைப் பார்க்க மாலதியைக் கூட்டிக்கிட்டுப் போயிருந்தேன். அதுதான் போகட்டும். பணத்தை ஏன் குடுத்தே ? மாலதியை எவனோ பிடிச்சு வெச்சுக்கிட்டான்னே வெச்சுப்போம். அவன் கேக்கிற பணத்தை நான் தந்திருக்கமாட்டேனா? உன்னைத்தான் கேப்பேனா? உன் மண்டையிலே இது உறைக்கலையா......?

கன: நீதான் இங்கே இல்லியே! இன்னிக்குப் பாங்கெல்லாம் லீவு...... அதுனாலே உன் கையிலே பணமில்லேன்னு, நம்ப வேண்டியதுதானே......

சபே: கல்யாணம் பண்ணிக்கிற மாப்பிள்ளையைப் போட்டு மிரட்டினே. பத்தாயிரம் கொண்டான்னு. அவன் ஆளே போயிட்டான். இப்ப பாரு, நீயே பணத்தைக் கோட்டை விட்டுட்டு நிக்கிறே.....!

கன: அது ஒரு பிரின்ஸிபிள்..... மாலதியைக் கட்டிக்கிறவனுக்குப் பணம் சம்பாதிக்க வேண்டிய தெம்பு இருக்குதான்னு தெரியாம பெண்ணைக் கொடுக்க முடியுமா.. இந்த சுரேஷை இப்ப என்ன செய்யலாம்..... போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுப்பமா?

சபே: பார்ப்போம்!.... நான் போய் அவனைப் பார்க்கிறேன்..... அவன் ஏதோ விஷமம் செய்யறான்..... நல்ல பையன்..... அவன் புத்தி ஏன் இப்படிப் போவுது..... அந்தப் பய தியாகராஜனைப் பத்தி வேறே கன்னு, பின்னுன்னு பேசறான்!

கன (மாலதி அழுது கொண்டு நிற்பதைக் கவனிக்கிறார்): என்னம்மா? ஏன் அழுறே..... இப்ப என்ன ஆயிட்டுது.....

சபே: அந்த நாகராஜன் செத்துப் போன பேச்சை நான் எடுத்தது தப்பு......

கன: நான் என்னம்மா, செய்ய முடியும்? ஒரு சின்னப் பந்தயம் மாதிரி வெச்சேன்..... இந்த மாதிரி ஆகும்னு நான் கண்டேனு?

சபே: நீ செய்தது தப்புன்னு இப்பவாவது தெரிஞ்சுக்கிட்டியே! அதுவே பெரிசு.

கன: நான் செஞ்சது என்ன தப்பு? இப்பவும் சொல்றேன். செத்துப் போனவன் பொழைச்சு வந்தாலும் நான் முடிவை மாத்திக்க மாட்டேன்...... எப்படியாவது பணம் சம்பாதிக்க முடியும்னு காட்டச் சொன்னேன். அது தப்பா?

மால: அவரை நீங்கதான் சித்தப்பா கொன்னுட்டீங்க!..... உங்க பிடிவாதத்தாலேதான் அவர் மனமொடிஞ்சு இந்த உலகத்தை விட்டே போயிட்டார்!

(உள்ளே போகிறாள்)

கன: இனிமே அதை நினைச்சு என்ன பிரயோசனம்?...... சபேசன்..... நேரே..... போய் சுரேஷ் மேலே போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுத்துப்புடுவோம், வா!

சபே: இரு! இரு! அவன் எதுக்காக இதைச் செய்தான்னு முதல்லே கண்டு பிடிப்போம். அவன் விளையாட்டுப் பய..... ஒரு வேளை சும்மா விளையாடியிருப்பான்....

கன: அவன் ஊரைவிட்டே ஓடிப்புடப் போறான்யா!

சபே: எனக்குத் தெரியாம அவன் ஊரை விட்டுப் போயிடுவானு? பார்த்துடறேன்..... நான் நேரே போய் அவனைப் பார்த்து இழுத்துக்கிட்டு வரேன்.

கன: என் பணம் என்ன ஆறது?

சபே: அதைப்பத்தி இனிமே கவலைப் படாதே. சுரேஷ்கிட்ட எப்பவும் ஒரு பிரின்ஸ்பின். யார் கிட்டேயும் பணம் வாங்க மாட்டான்..... அப்படி வாங்கிட்டான்னு—திருப்பிக் கொடுக்க மாட்டான். போனது போனதுதான்!...... (தொடரும்)

புரந்தரதாசர்

அ. ராம்கோபால்

இன்றைக்கு 402 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1564ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் தேதி மகரசங்கராந்தி தினத்தன்று புரந்தரதாசர் தம் இகலோக வாழ்வைத் துறந்தார்.

புரந்தரதாசரின் பூர்வாசிரமப் பெயர் கிருஷ்ணப்ப நாயக் என்பதாகும். பெரும் வர்த்தகர். தனவந்தர். மகாஉலோபியும் கூட. எச்சில் கையால் காகத்தை விரட்டக் கூட மாட்டார். அவ்விதமானவர். கடைசியில் தம் கணக்கற்ற ஐசுவரியங்களை ஏழை எளியவர்களுக்குத் தானமாக அளித்துவிட்டுக் கையில் தாளம் ஏந்தி ஹரிபஜனை செய்யக் கிளம்பி விட்டார்.



இவ்விதம் அவர் திடீரென மாற ஒரு சிறு சம்பவம்தான் காரணமாக நின்றது. ஒரு நாள் அவரும் அவர் மனைவியும் விஜய நகர சாம்ராஜ்யத் தலைநகரான ஹம்பிக்குப் போயிருந்தனர். அவர்கள் இவ்விதம் அங்கு சென்றதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு: ஹம்பியை மனைவியும் தாமும் சுற்றிப் பார்த்து ஆனந்திக்க வேண்டும், அந்த நகரிலும் தம் வர்த்தகத்தை விஸ்தரிக்க வேண்டும் என்பவையே யாகும் அந்த நோக்கங்கள்.

தம் மனைவி சகிதம் ஹம்பி நகரை அவர் சுற்றி வந்து கொண்டிருந்த போது அங்கு ஓரிடத்தில் முற்றிலும் எதிர்பாராதவிதமாக வியாசதீர்த்தர் என்ற பெரியார் ஒருவரை அவர் சந்திக்க நேர்ந்தது. இந்த வியாச தீர்த்தர் மத்வமத ஆசாரியர்களில் ஒருவர். அவரைச் சந்தித்து அவரிடம் உபதேசம் கேட்ட கிருஷ்ணப்ப நாயக்கரின் மனத்தில் ஹரிபக்தி கிளர்ந்து எழுந்தது. இதன் பயனைத் தம் தொழில் சொத்து அத்தனையும் துறந்து வியாசதீர்த்தரின் சீடராக அவர் மாறினார். இவ்விதம் அவர் மாறிய பிறகு தான் அவர் புரந்தரதாசர் எனப் பெயர் பெற்றார். புரந்தர்கட் என்பது அவர் பிறந்து வளர்ந்த ஊராகும்.

வியாசதீர்த்தரின் சீடரான பிறகு மத்வ மதத்தின் முக்கிய கொள்கைகளைக் கன்னட மொழியில் இனிக்கும் இலகுவான பாடல்களாக இயற்றி அவற்றைத் தாளத்துடன் தாமே பாடி மக்கள் மனத்தில் பக்திக் கனலை மூட்டி வந்தார். இதன் காரணமாகப் பக்தித் துறையில் மட்டுமின்றிக் கர்னுடக சங்கீதத் துறையிலும்கூட அவருக்கு மிக உன்னத ஸ்தானம் கிட்டியது.

பொங்கலன்று பட்டம் விடலாம்!

தமிழனுக்கு மட்டும் உரிய தனிப் பண்டிகை பொங்கல் என நம்மில் சிலர் நினைப்பது உண்மைக்குப் பொருந்தாத தொன்றேயாகும்.

குஜராத், சௌராஷ்டிரம் ஆகிய பகுதிகளில் வாழுபவர்கள் இப் பண்டிகையை உத்தராயணம் எனப் பெயரிட்டுக் கொண்டாடுகிருர்கள். கடல், நதிக் கரைகளில் பெரும் திரளாகக் கூடிக் குளித்துவிட்டு அங்கே சிறப்பாக சூரிய பூஜை நடத்துகிருர்கள்.

வீர மராட்டியரோ இப்பண்டிகையை மகர சங்கராந்தி என அழைக்கிருர்கள். எள்ளும் வெல்லமும் சேர்த்து, ''தில்குட்'' என்ற பட்சணம் தயாரிக்கிருர்கள். ஒருவருக்கொருவர் இதைக் கொடுத்து, ''தில்குட் த்யா ஆணி கோட் போலா' (எள்ளு வெல்ல மிட்டாயை எடுத்துக் கொள்ளுங்கள். அதைப் போல் இனிக்க இனிக்கப் பேசுங்கள்) எனப் பரஸ்பரம் அன்று வாழ்த்திக் கொள்வது அவர்கள் வழக்கம். இனிமையான வழக்கம்தானே இது!

பஞ்சாப், ஹிமாசலப் பிரதேசம் ஆகியவற்றில் மாதா அல்லது லோஹடி என இப் பண்டிகையைக் கொண்டாடுகிருர்கள். நம் பக்கங்களில் காமன் பண்டிகையைப் போல இதை அங்கே அவர்கள் கொண்டாடுகிருர்கள். நம் பக்கங்களில் கார்த்திகைத் தீபத்தின் போது குழந்தைகள் சுளுந்து கொளுத்துவது போல் அங்கே சிறுவர் சிறுமிகள் இப்பண்டிகையின்போது சுளுந்து கொளுத்துவார்கள்.

கங்கை கடலில் சங்கமம் ஆகும் இடத்துக்குக் கங்காசாகர் எனப் பெயர். அந்த இடத்தில் மகரசங்கராந்தி தினத்தன்று கடலிலிருந்து ஒரு புதிய தீவு மேடிடுகிறதாம்! அந்தத் தீவுக்கு அன்றைய தினம் லட்சக் கணக்கில் வங்காளிகள் சென்று நீராடுகிருர்கள். அன்றைய தினம் அங்கே போக்குவரத்துக்குக் கல்கத்தாவிலிருந்து கங்காசாகருக்கு விமான சர்வீஸ்கூட உண்டு. சங்கராந்தி ஸ்நானம் முடிந்தபிறகு அந்தத் தீவு மீண்டும் கடலில் அமிழ்ந்து விடுகிறதாம்!

ஆந்திராவிலும் உத்தரப் பிரதேசத்திலும் இது பட்டம் விடும் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. லக்ஷ்மணபுரியில் பட்டம் விடுவதைப் பார்ப்பதற்கென்று வெளியூர்களிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் வந்து கூடி விடுவார்கள்.

அ. ரா.



பிரசித்தி பெற்ற அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் அருமை மனைவியார் ஸ்ரீமதி ஜாக்குலின் கென்னடி நியூயார்க் நகர சமூக கூடத்தில் கிறிஸ்துமஸ் விருந்தின்போது நான்கு வயதான பாபி ஜான்ஸனை மடியில் அமர்த்தி மகிழ்கிருர். இந்த விருந்தைக் கொடுத்தவர் செனட்டர் ராபர்ட் கென்னடி. அந்த நீக்ரோக் குழந்தைக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு பச்சிளம் பாலகன் ஒருவன் வியக்கும் காட்சி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

நாணயமான தொழில்

பிரிட்டிஷ் அரசாங்க நாணயச் சாலை சென்ற ஆண்டு 105 கோடி நாணயங்களைத் தயாரித்தது--இவ்வளவும் சொந்த உபயோகத்துக்காக அல்ல! 51 நாடுகளுக்காக 108 வெவ்வேறு வகையான நாணயங்கள் அங்கே அச்சிடப்பட்டன. கானு, மலாவி, ஸியாரலியோன், பிலிப்பைன்ஸ், ஜாம்பியா, தென் அரேபியா, பர்மா, இலங்கை, வியட்நாம், இஸ்ரேல், இராக், மஸ்கத், அபிசீனியா ஆகிய நாடுகளுக்கெல்லாம் பிரிட்டன்தான் நாணயங்கள் தயாரித்துக் கொடுக்கின்றது. - துராப்

ஆதாரம்: ஸ்டேட்ஸ்மேன்



ஏருழவர்

ஏர் உழவர் வாழ்ந்தால்
பார் முழுதும் வாழும்!
போர்த் தொழிலைப் பெருக்கிப்
போகவிடாமல் நாட்டை
ஏர்த் தொழிலைப் பெருக்கி
இன்பவளம் செய்யும்

ஏர் உழவர் வாழ்ந்தால்
பார் முழுதும் வாழும்!
விண்ணில் போய் வாழும்
விஞ்ஞானம் வளர்தல்
மண்ணில் செய் உழவு
வளர்வதனால் என்னும்

ஏர் உழவர் வாழ்ந்தால்
பார் முழுதும் வாழும்!
பணமுடைய நாடும்
படையுடைய நாடும்
உணவுநா டாக்கும்
உழவருக்குப் பணியும்

ஏர் உழவர் வாழ்ந்தால்
பார் முழுதும் வாழும்!
பஞ்சம் பசி வறுமை
பகைவர்களாம் இவரை
அஞ்சியோடச் செய்யும்
அரச வள்ளல் உழவர்
ஏர் உழவர் வாழ்ந்தால்
பார் முழுதும் வாழும்!

- தமிழ்முடி

குளத்தில் விழுந்தாயா? ரொம்ப வந்தனம்!



நியூயார்க் நகரில் மாணவர்கள் விருந்து ஒன்றில் திரு ஏ. கே. செட்டியார் கலந்து கொண்டார். அந்த விருந்தில் மாணவர்களே பரிமாறினார்கள். அங்கு கூடியிருந்த மாணவர்கள் 52 தேசங்களைச் சேர்ந்தவர்கள். செட்டியார் மேஜையில் ஒரு குறும்புக்காரக் கிரேக்கப் பெண் உட்கார்ந்திருந்தாள். ஒவ்வொரு மொழியிலும் 'வந்தனம்' என்ற வார்த்தையைக் கற்றுக்கொள்வது செட்டியாரின் வழக்கம். அந்தக் கிரேக்கப் பெண்ணைப் பார்த்து வந்தனம் என்பதற்குக் கிரேக்க மொழியில் என்ன சொல்வது என்று கேட்டார். அதற்கு அவள் ''பியினே பினிக்ஸ்'' என்று கூறினாள். ஒரு கிரேக்க மாணவன் அவருக்குப் பரிமாறியபோது அவனைப் பார்த்துப் புன்முறுவலுடனும், அன்புடனும் 'பியினே பினிக்ஸ்' என்றார். அவன் முகம் சட்டென்று மாறிவிட்டது. அவன் அவர் காதோடு 'இனி இந்த மாதிரி வார்த்தையைக் கூறாதீர்கள். 'பியினே பினிக்ஸ்' என்றால் குளத்தில் விழு என்று அர்த்தம். இந்தத் தடவை விட்டு விடுகிறேன்'' என்றான்.

அந்தச் சம்பவம் நிகழ்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பாரிசுக்குச் சென்றார். அதே கிரேக்கப் பெண் அப்போது பாரிசில் படித்துக்கொண்டிருந்தாள். அவரை வரவேற்பதற்காக ரயில் நிலையத்துக்கு அவள் வந்திருந்தாள். அவளைக் கண்டதும் அவர் முதலில் கூறிய வார்த்தை என்ன தெரியுமா?-'பியினே பினிக்ஸ்!'


ஆதாரம்: உலகம் சுற்றும் தமிழன்
தகவல்: அச்சுதமங்கலம் பாப்பா

ராமு போட்ட போடு!

விஜயதசமியன்று ராமுவைப் படிக்க வைத்தார்கள். சூடிகையான பையன் அவன். மூன்றே மாதங்களில் எழுத்துக்கூட்டி நன்றாகப் படிக்கக் கற்றுக்கொண்டு விட்டான். உபாத்தியாயர்களிடமெல்லாம் கெட்டிக்காரப் பையன் என்று பெயர் வாங்கினான்.

ஆனால் நாளடைவில் பள்ளிக்கு நேரம் கழித்து வரலானான். ஒரு நாள், இரண்டு நாட்கள் உபாத்தியாயர் ஒன்றும் கேட்கவில்லை. ஏதாவது காரணம் இருக்கும் என்று எண்ணினார்.

நேரம் கழித்து வரும் பழக்கம் நீடிக்கவே, ஒரு நாள் உபாத்தியாயர் ராமுவைக் கேட்டார்: ''ராமு! இப்போதெல்லாம் நேரம் கழித்து வருகிறாயே, ஏன்?''



''அதுவா? நம்ப பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் ஒரு கம்பத்தில் எழுதியிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா, ஸார்! 'பள்ளிக்கூடம்! மெதுவாகப் போ!' என்று போட்டிருக்கிறதே!'' என்று சட்டென்று பதிலளித்தான் ராமு.

பொங்கல் புடவை

எஸ். பத்மாவதி

பசுபதி படுகோழை. அவன் எப்படி மாப்பிள்ளையானான் என்பது எல்லோருக்கும் பரம ஆச்சரியம். ஒரு மாப்பிள்ளைக்கு வேண்டிய குணநலன்கள் ஒன்றும் அவனிடம் இல்லை. கலியாணத்தின்போது அவன் தலை நிமிர்ந்து யாரையும் பார்க்கவே யில்லை. 'கலியாணப் போட்டோ' எடுக்கும்போதுகூட அவன் முகம் குனிந்தே இருப்பதைக் கவனித்த அவன் மனைவி கனகா ''கொஞ்சம் நிமிர்ந்துதான் பாருங்களேன்!'' என்று குரல் கொடுக்கும்படி ஆயிற்றென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

கலியாணமாகி இரு மாதத்தில் 'பொங்கல்' வந்தது. பொங்கல் பண்டிகையைத் தங்களுடனேயே கொண்டாட வர வேண்டும் என்று மாமனாரிடமிருந்து பசுபதிக்கு அழைப்பு வந்தது. புதிதாக மணமான அவன் நண்பர்கள், தங்கள் மனைவிமார்களுக்குப் புடவை வாங்கக் கடைக்குப் போனபோது பசுபதியையும் இழுத்துக் கொண்டு போய், ஒரு புடவை வாங்கும்படி செய்து விட்டார்கள். புடவைகளைப் பார்த்ததும் பசுபதி பெண்களைப் பார்த்தது போலக் கூச்சப்பட்டுக் கொண்டு தலை குனிந்து கொண்டதைப் பார்த்த கடைக்காரர், தாமே ஒரு புடவையைத் தேர்ந்தெடுத்து அவன் தலையில் கட்டி அனுப்பினார்.

அதைக் கொண்டு போய் மறைவாகப் பெட்டியில் வைக்கும் வரையில்பசுபதி பட்டபாடு... அப்பப்பா! ஊரிலுள்ள ஜனங்கள் எல்லோரும்தன்னையே விழித்துப் பார்ப்பதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டு நடுநடுங்கிப் போய் விட்டான்.

அடுத்த நாள் ரயிலில் கனகத்தின் ஊருக்குப் போகும்போது அருகில் அமர்ந்திருந்தவர், ''ஏன் சார்! இந்த... ....'' என்று ஆரம்பிக்கு முன் பசுபதி அவருக்கு எப்படி நான் புடவை வாங்கியது தெரிந்தது என்று கலங்கி, பரிதாபமாக இடைமறித்து, ''புடவை கடையில்தான் வாங்கினேன்...'' என்று சொன்னான். அவர் அவனை ஆச்சரியத்துடன் விழித்துப் பார்த்துவிட்டு, ''புத்தகம்கூட ஜவுளிக் கடையில் விற்கிறானா?'' என்று முணுமுணுத்ததும்தான், அவர் தம் கையிலிருந்த புத்தகத்தைப் பற்றிக் கேட்கிறார், பையிலிருக்கும் புடவையைப் பற்றிக் கேட்கவில்லை என்று அவனுக்குப் புரிந்தது. சிறிது நிம்மதியாக மூச்சு வந்தது.


ரயிலடிக்கு வந்திருந்த மச்சினன் பயல் ரமணன், ''அத்தான்! எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்தீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே பெட்டியைக் கையில் தூக்கிக் கொண்ட போது...

அவனுக்கு 'எக்ஸ்ரே' கண்கள் இருப்பதாகவும், அவன் பெட்டியிலிருக்கும் புடவையைப் பார்த்துவிட்டதாகவும் எண்ணிக் கொண்ட பசுபதி ''உனக்குச் சட்டைக்குப் பட்டுத்துணி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றுஅவசரமாகச் சொல்லி முடித்தான்.

ரமணன் குதித்துச் சந்தோஷப்பட்டபோது 'நாம் ஏன் இப்படிச் சொன்னோம்' என்று பசுபதியின் மனம் ஏங்கியது.

குற்ற உணர்வுடன் மாமனார் வீட்டில் நுழைந்த பசுபதிக்குக் கனகம் கண்ணில் படாதது சிறிது நிம்மதியாக இருந்தது.

மாமனார், மாமியார் உபசாரத்துக்குப் பிறகு, குளிக்க எண்ணிப் பெட்டியைத் திறந்தபோது மேலாக இருந்த புடவை நழுவிக் கீழே விழுந்தது. அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த மாமனார் குனிந்து அதைக் கையில் எடுத்தபோது, மிரள மிரள விழித்தான் பசுபதி. பிறகு அசட்டுச் சிரிப்புடன், ''ஹி...ஹி...ஹி...! உங்களுக்கு லுங்கியாகக் கட்டிக்



கொள்ள இருக்கட்டும் என்ற தீர்மானத்துடன்தான் இதைத் தேர்ந்தெடுத்து வாங்கினேன்'' என்று சொல்லி முடித்தான்.

மாமனார் ஒரு கணம், கட்டம் போட்ட அந்தப் புடவையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு ஒன்றும் பேசாமல் அதை வைத்துவிட்டு வெளியேறினார்.

தாம் ஏதாவது தப்பாகச் சொல்லி விட்டோமோ என்று பகபதி மருண்டு புடவையைக் கையில் எடுத்த சமயம், நாணிக் கோணிக் கொண்டு மாமியார் காப்பியுடன் உள்ளே நுழைந்து அதை மேஜையின் மேல் வைத்தாள். அவள் கண்கள் புடவை மேல் தாவுவதைக் கவனித்த மாப்பிள்ளை பகபதி பதைபதைத்தான். திரும்பவும் ஓர் அசட்டுச் சிரிப்புடன் ''உங்களுக்கு இரண்டு ரவிக்கைகளுக்குத் துணி வாங்கினேன்'' என்று அவசரமாகச் சொல்லி முடித்தான்.

'ஒரு புடவைத் துணியில் தனக்கு இரண்டு ஜாக்கெட்டுகள் தான் தைக்க முடியும் என்ற உண்மை எப்படி மாப்பிள்ளைக்குத் தெரிந்தது?' என்பது போல் மாமியார் ஒரு நிமிடம் தடுமாறிவிட்டுப் புடவைத் தலைப்பை இழுத்து மூடிக்கொண்டு விடுவிடென்று உள்ளே சென்று மறைந்து விட்டாள்.

''அத்தான்! அத்தான்!'' என்று கூறிக்கொண்டே மச்சினி பங்கஜா உள்ளே குதித்து வந்தாள். ''யாருக்கு இது?'' என்று புடவையைக் கையில் எடுத்துக் கேட்கவும், பகபதி கதிகலங்கி விட்டான். தான் கனகத்துக்கு வாங்கியிருப்பது தெரிந்துவிட்டதே என்ற படபடப்பில், ''எல்லாம் உனக்குத்தான் பங்கஜா. பாவாடை, சட்டைதைக்க!'' என்று திக்கித் திக்கிச் சொல்லி முடித்தான்.

அந்தச் சமயம் பார்த்து அவர்கள் வீட்டுக் குச்சு நாய், உள்ளே குதித்து வந்து பகபதிமேல் தொத்திற்று. பகபதி உடனே குழம்பி விட்டான். அது தனக்கு என்ன வாங்கி வந்திருக்கிறாய் என்று கேட்கிறதோ என்று! அந்தப் புடவையைக் கிழித்து நாய்க் குட்டிக்கு எத்தனை சட்டை தைக்கலாம் என்று அவன் கணக்குப் போட்டபோது நல்லவேளையாக மச்சினி பங்கஜா அதைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடி விட்டாள்.



அப்பாடி! நாய்க்குத் தப்பினேன்...'' என்று பகபதி பெருமூச்சு விட்டான். தன் கோழைத் தனத்தை எண்ணி, எண்ணி அவனுக்கே ஆத்திரம் வந்தது. ''ஊரில் இருக்கும் தன் நண்பர்கள் வெளிப் படையாகத் தங்கள் மனைவிமார்களுக்கென்று புடவை வாங்கும்போது தான் மட்டும் இப்படி இருப்பானேன்'' என்று எண்ணியவனுக்கு அந்தப் புடவையைப் பார்க்கப் பார்க்கப் பற்றிக் கொண்டு வந்தது. எல்லாம் இந்தப் புடவை யினால்தானே இவ்வளவு சங்கடம் என்று நொந்து கொண்டபோது, ''மாப்பிள்ளை ஐயா!''. என்று குரல் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டு எழுந்து நின்றான் பகபதி.

கனகத்தின் வீட்டு வேலைக்காரி மங்கம்மா கையில் துடைப்பத்துடன் பல்லிளித்துக் கொண்டு நின்றாள்.

'மங்கம்மா பெரிய வாயாடி, சண்டைக்காரி' என்று கேள்விப் பட்டிருந்ததால் 'மாப்பிள்ளை ஐயாவுக்குத் தெரியாததா? பொங்கலுக்கு நம்மைக் கவனிக்கணும்' என்று மங்கம்மா தலையைத் துடைப்பைக் கட்டையால் சொறிந்து கொண்ட போது கையில் வைத்திருந்த புடவையைச் சட்டென்று அவள் கைகளில் தூக்கிப் போட்டு விட்டான் பகபதி. மிரள மிரள விழித்துக் கொண்டு, ''உனக்குத்தான் வாங்கி வந்தேன்...'' என்று அவன் நாக் குழறியபோது........ பயம் என்பதையே அறியாத மங்கம்மா ஒரு கணம் நடுநடுங்கித் தன் ஆயுதமான

துடைப்பத்தை நழுவ விட்டு விட்டுப் பதில் பேசாமல் புடவையுடன் மறைந்து விட்டாள்.

கொஞ்சமும் எதிர்பாராத விதமாக நடந்து விட்ட நிகழ்ச்சியினால் பசுபதி அதிர்ந்து போய் விட்டான். இப்படி நடக்குமென்று முன்கூட்டியே தெரிந்திருந்தால், அவன் அந்தப் புடவையை வாங்கி வந்திருக்கவே மாட்டான். தன்னைப் புடவைக் கடைக்கு அழைத்துச் சென்று கனகத்துக்கு ஒரு புடவை வாங்கும்படி செய்த தன் நண்பர்களை யெல்லாம் மனமாரத் திட்டித் தீர்த்தான். ஆனால் என்ன பயன்? அவனுடைய முட்டாள்தனத் தினால் விபரீதம் விளைந்து விட்டதே!

பசுபதிக்குத் தன் செய்கையை எண்ணிப் பார்த்த போது உடம்பெல்லாம் குளிர் ஜுரம் வந்தது போல நடுநடுங்கியது. 'கேவலம் தன் கோழைத்தனத்தினால், ரூபாய் இருநூறு கொடுத்துக் கனகத்துக்கு வாங்கிய புடவையை வேலைக்காரி மங்கம்மா கையிலா தூக்கிக் கொடுத்தோம்......' என்று எண்ணிய போது அவமானத்தினால் அவன் உடம்பு படபடத்தது. இனி மேல் கனகத்தின் முகத்தில் எப்படி விழிப்பது.....?

அறைக்கு வெளியில் கசமுச வென்ற பேச் சொலி கேட்டது. தலை சுற்ற அருகிலிருந்த கட்டிலில் கண்ணை மூடிக் கொண்டு 'தொப்' பென்று அமர்ந்தான். அடுத்த விநாடி..... அவன் கண் முன்னால் சினிமா காட்சி ஒன்று தெரிந்தது.

சட்டைத் துணிக்காக மச்சினன் கையை நீட்டுகிறான். அப்பொழுது அவசரமாக நுழைந்த மாமனார், ''எங்கே, என் பட்டு அங்கி.......?'' என்று கேட்கிறார். மாமியார் நாணிக் கோணிக் கொண்டு தையல்காரன் சகிதம் உள்ளே நுழைந்து, ''ரவிக்கைக்கு அளவு எடுக்க அழைத்து வந்தேன்...'' என்று சொல்லும் சமயம் பங்கஜா ஓடி வந்து, ''எனக்குப் பாவாடை சட்டைக்குத்தான் பட்டுத் துணி'' என்று சொல்லுகிறாள். வள்வள் என்ற சத்தத்துடன் நாய் ஓடி வந்து புடவையைக் கவ்வுகிறது. 'ஹ....ஹ..... ஹஹ்ஹா!' என்ற பயங்கரச் சிரிப்புடன், தன் காவிப் பற்களைக் காட்டியபடி மங்கம்மா ஓடி வந்தாள். நாயிடமிருந்து, ''இது எனக்குக் கொடுத்தது'' என்று கூறிப் புடவையைப் பிடுங்கிக் கொள்ளுகிறாள்........'' பசுபதி தன் கற்பனைச் சினிமாவுக்கு அவசரமாகத் திரை போட்டுவிட்டு, பதறிக் கொண்டு கட்டிலிலிருந்து எழுந்தான்.

''இனிமேல் ஒரு நிமிடம்கூட இங்கு இருக்க முடியாது...... எல்லோரும் கும்ப

சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரலாறு

சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற வீரர்கள் வரலாற்றைத் தொகுக்கும் வேலை இப்பொழுது நடைபெற்று வருகிறது. சுதந்திரப் போரில் பங்குபெற்றவர்களில் இதுவரை சுமார் 10,000 பேர்கள் பற்றித் தகவல் கிடைத்துள்ளது. சுதந்திரப் போரில் தீவிரப் பங்கு கொண்டவர்களைப் பற்றி அவர்களது குடும்பத்தினர் கீழே குறிப்பிட்டபடி தகவல்கள் கொடுத்தால் வரலாற்றுத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ள ஏதுவாக இருக்கும். விடுதலை இயக்கம் சம்பந்தமான சத்தியாக்கிரகங்களில் அல்லது போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள் வெள்ளைத் தாளில் அல்லது அச்சிடப்பட்ட பாரத்தில் விவரங்கள் எழுதி அனுப்பலாம். (அச்சிட்ட பாரங்களை, கன்வினர், சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரலாறு தொகுப்பு மாநில கமிட்டி, 11–18 மவுண்ட்ரோடு, சென்னை–2 என்ற முகவரியில் கேட்டுப் பெறலாம்) முழுக் கையெழுத்துடன் கீழ்க்கண்ட தகவல்கள் அளிக்குமாறு கோரப்படுகிறது.

1. பெயர், முகவரி
2. பிறந்த தேதி அல்லது வயது
3. கல்வி சம்பந்தமான தகவல்கள்
4. சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட வருடம்.
5. கலந்து கொண்ட போராட்டங்கள், இயக்கங்கள் பற்றிய விவரம்.
6. சிறைவாசம் பற்றிய விவரம் (எத்தனை தடவை சிறைவாசம், எந்த ஆண்டு எந்த சிறை, தண்டனை காலம்.)
7. சிறை சகாக்கள் ஒன்றிரண்டு பேரைக் குறிப்பிடலாம்.

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களா என்பதுதான் முக்கியம். அவர்களுடைய தற்போதைய அரசியல் சார்பு என்ன என்பது முக்கியமல்ல.

— எஸ். விஜயலக்ஷ்மி
கன்வினர்

தைப் பெண்ணே!



தகத்தகிட என ஆடித் தைப்பெண்ணே, வருவாய்!
தவம்பொங்க வளம்பொங்கத் தண்ணருளே தருவாய்!
அகத்தினிலே சுகம்பொங்க அருங்கடைக்கண் பார்ப்பாய்!
ஆனந்தப் பொங்கலின்னாள் அன்புமனஞ் சேர்ப்பாய்!

மங்களத்'தை' மாமகளே, வான்கருணை சுரப்பாய்!
மலருகின்ற புதுவாழ்வை மகிழ்ந்தீந்து புரப்பாய்!
பொங்குமொளிக் கதிரிறையைப் போற்றிடவே செய்வாய்!
புகழ்உழவின் பலனென்று புகன்றுநலம் பெய்வாய்!

செங்கரும்பைக் கரத்தேந்திச் சீர்நடனம் இடுவாய்!
செந்தமிழர் வாழ்வினிக்கச் செய்துமனந் தொடுவாய்!
இங்கிதப்பொன் முகச்சுடரால் இன்பமெலாம் கொடுப்பாய்!
எழில்வீரப் புன்னகையால் எதிரிபலம் தடுப்பாய்!

கலைபொங்க வருமுன்னைக் களிந்துவர வேற்போம்!
கருணைக்கோர் உருவமுன்றன் களிமொழிகள் ஏற்போம்!
நிலைபொங்க மறைபொங்க நெறிபொங்க வேண்டும்!
நின்னருளால் தமிழ்ப்பெண்ணே, இன்னலற வேண்டும்!

— என். எஸ். சிதம்பரம்

லாக இங்கு வருமுன் இங்கிருந்து யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிவிட வேண்டியதுதான்......" என்று எண்ணி அவசரம் அவசரமாகப் பெட்டியினுள் துணி மணிகளை அடைத்தான்.

பின்னால் வளையல் ஓசை கேட்டது. சப்த நாடியும் ஒடுங்கத் தலையைத் திருப்ப, தைரியமின்றித் திகைத்து நின்றான் பகபதி. அடுத்த நிமிடம் விசும்பல் ஒலி தொடர்ந்தது. தர்மசங்கடத்துடன் திரும்பிப் பார்த்தான் பகபதி.

அவன் விழிகள் பதுங்கின. பயத்தில் பற்கள் 'கட..... கட' வென்று அடித்துக் கொண்டன.

கனகம் தன் கைகளில் அவன் வாங்கிக் கொண்டு வந்த புடவையை வைத்துக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தாள்.

'வேலைக்காரி எல்லா விஷயங்களையும் சொல்லியிருப்பாள்...... பூமியே பிளந்து.... தன்னை விழுங்கி விடாதா.......' என்று பகபதி துடித்தான்.

கனகம் நெருங்கி வந்தாள்...... கம்மிய குரலில், "இதோ...... பாருங்கள்..... ஊரி லிருந்து நீங்கள் வந்து இவ்வளவு நேரமாகியும் நான் வந்து விசாரிக்காதது தப்புத்தான். நீங்கள் என் கையில் ஆசையாகப் புடவையைத் தரத் துடித்துக் கொண்டிருந்த போது, நான் வராமல் இருந்ததால் கோபமடைந்து அப்பா அம்மாவிடம் மறைமுகமாக இடித்துக் காட்டிப் பேசியதை அறிந்த போதாவது நான் புரிந்து கொண்டு வந்திருக்க வேண்டும். வெட்கத்தினால் பேசாமல் இருந்துவிட்டேன். அதற்காகக் கோபித்துக் கொண்டு எனக்கு வாங்கி வந்த புடவையை மங்கம்மா கையில் விட்டெறிந்துவிட்டு ஊருக்குப் புறப்படுவது நியாயமா........? யாருக்கும் பயப்படாத மங்கம்மாவே, 'மாப்பிள்ளை ஐயா படா....... கோவமா இருக்கிறாரு' என்று சொல்லி நடுங்கி விட்டுப் புடவையை என்னிடம் கொடுத்த போதுதான் எனக்கு நிலைமை புரிந்தது..... என்னை மன்னித்து.... மன்னித்துவிடுங்கள்....." மேலே பேச முடியாமல் கனகம் தடுமாறவே பகபதியால் பொறுக்க முடியவில்லை.


தன் கோழைத்தனத்தினால் ஏற்பட்ட எல்லாச் சிக்கல்களையும், ஒரு நொடியில் தீர்த்து, தன் ஆசையை நிறைவேற்றிய மங்கம்மாவை மனத்துக்குள் வாழ்த்தினான்.

பெட்போர்டால்

எதிர்காலம் உருவாக்கப்படுகிறது !

இந்தியாவெங்கும் கட்டட வேலைகள் நடக்கும் ஆயிரக்கணக்கான இடங்களில் — முரடான உழைப்பு, நீடித்திருப்பதில் நம்பிக்கை சிக்கனத்துடன் சிறப்பான சேவை இவற்றிற்குப் பெயர்பெற்ற பெட்போர்டு டம்ப்பர்களை நீங்கள் பார்க்கலாம்.

பெட்போர்டு டம்ப்பர், அணைக்கட்டுகள், பெரிய ரோடுகள் அமைத்தல், சுரங்க அபிவிருத்தி, நிலச் சீர்திருத்தம் ஆகியவை பற்றிய கடினமான வேலைகளுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் வேறு எந்த வண்டியைக் காட்டிலும் இது மிக உறுதியுடன் அதிக வேலை செய்யும் சக்தி வாய்ந்தது. உறுதி மிருந்த-கணகவரும் அம்சங்கள் கொண்ட பெட்போர்டு டம்ப்பர் உங்கள் வேலைகளை விரைவிலும் சிக்கனமாகவும் செய்து முடிப்பதுடன் உங்களுக்கு அதிக லாபத்தையும் தேடித் தருகிறது !




லாபம் பெற வேண்டுமானால் விவேகத்துடன் பெட்போர்டு வாங்கவும்

ஹிந்துஸ்தான் பெட்போர்டு வாங்குங்கள்

HM
HINDUSTAN MOTORS

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட்., கல்கத்தா

அதிகாரம் பெற்ற ஹிந்துஸ்தான் மோட்டார் வியாபாரிகள்: ஆக்ரா கண்ட்., அலிகார், அஹமதாபாத், அஹமத்நகர், அஜ்மீர், அலஹாபாத், அம்பாலா கண்ட்., அமிர்தசரஸ், அவுரங்காபாத், பெங்களூர், பரேலி, பரோடா, பிலாய், போபால், புவனேஸ்வர், பம்பாய், கல்கத்தா, சண்டிகார், கோயம்புத்தூர், கட்டாக், டேரா-டூன், தன்பாத், தன்லார், திப்ருகார், தும்கா, கௌஹாதி, கோவா, குவாலியர், இம்பால், இந்தூர், ஜபல்பூர், ஜெய்ப்பூர், ஜல்கான், ஜம்மு, ஜோத்பூர், ஜோர்ஹட், ஜலந்தர் சிட்டி, கான்பூர், காட்மண்டு, கோலாப்பூர், கும்பகோணம், லக்னோ, மதராஸ், மதுரை, மங்களூர், மீரட், நாக்பூர், புது டில்லி, பாளையங்கோட்டை, பாடியாலா, பாட்னா, பாண்டிச்சேரி, பூனா, ராஜ்கோட், ராஞ்சி, சம்பல்பூர், செகந்திராபாத், ஷில்லாங், ஸில்சார், ஸிலிகுரி, ஸ்ரீநகர், டாடாநகர், டேஜ்பூர், தானா, திருவனந்தபுரம், வாரணாசி கண்ட்., விஜயவாடா, விஜயநகரம் சிட்டி.



காலச்சக்கரம்

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 17

அறுபத்தைந்தாவது கலை !

புதுதில்லியில் நடுத்தரமான ஓட்டல் ஒன்றின் அறையில் உட்கார்ந்து அன்று காலைப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்த தங்கப்பன் டெலிபோன் மணி அடித்ததும் துள்ளி எழுந்து அதனை எடுத்தான். தனக்கு டெலிபோன் செய்யக் கூடியவர்கள் டில்லியில் இரண்டு மூன்று பேர்கள்தான். அவர்களிலும் இது அநேகமாக மிருணாளினியாகத்தானிருக்கும். ஆர்வத்துடன் ரிஸீவரைக் காதில் பொருத்திக் கொண்டு, ''தங்கப்பன் ஹியர்!'' என்று குரல் கொடுத்தான்.

''என்ன போங்க, போயும் போயும் ஒரு 'டூ ஸ்டார்' ஓட்டலில் உட்கார்ந்திருக்கிறீர்கள்! சேச்சே! எனக்கு அல்லவா அவமானமாயிருக்கிறது! அசோகா, ஜன்பத், ஒபிராய் ஆகியவற்றுக்கெல்லாம் ஃபோன் பண்ணி நீங்க இல்லேன்னு ஏமாந்தேன்!''

''என் தாய் மாமன் முருகேசனை உங்களுக்குத் தெரியுமா? அவர்கூட ஏறத்தாழ இப்படித்தான் பேசினார், மிருணாளினி! ஆனால் அவருக்கும் உங்களுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்! அவர் உள்ளபடியாகவே நான் விமானப் பயணம்தான் செய்ய வேண்டும் என்று மனப்பூர்வமாக நம்பி வாதாடினார். நீங்க கிண்டல் செய்யறீங்க.''

மிருணாளினி கலகல வென்று சிரித்தாள், மறுபுறத்தில். ''சரி, கிண்டலை இத்துடன் நிறுத்தி விடுகிறேன். இப்போது 'ஸீரியஸ்' ஆகப் பேசுகிறேன்: சாயந்திரம் ராஷ்டிரபதி பவனில் குடியரசு தினப் பார்ட்டி. நீங்கள் வருகிறீர்களா?''

''வேடிக்கைப் பேச்சை நீங்க நிறுத்தி வைச்சதாக எனக்குத் தோணலே. அங்கே வர எனக்கு அழைப்பு ஏது? எனக்கு அருகதை தான் ஏது?''

''அழைப்பு என்ன பிரமாதம்? அனுப்பி வைக்கிறேன், ஓர் ஆள் மூலமாக. புதுதில்லியில் இது போன்ற அழைப்பிதழ்கள் தண்ணீர் பட்டபாடு! அருகதைக்கு ஒரு நல்ல டெரிலின் ஸூட் தேவை. இருக்கிறதா? இல்லே, அதிலும் சிக்கனமா?''

''இருக்கிறது மிருணாளினி, ஆனால் உங்களை நான் எப்போது சந்திப்பது?''

''பார்ட்டியிலேயே பார்க்கலாம். அங்கே உங்களுக்கு ஓர் அதிசயம் காத்திருக்கிறது.''

மிருணாளினி டெலிபோனை வைத்து விட்டாள். அவள் எங்கிருந்து பேசினாள்; விலாசம் அல்லது டெலிபோன் எண் என்ன என்பது தோன்றும் தங்கப்பனுக்குத் தெரியாதாகையால் ஓரளவு ஏமாற்றத்துடன் ரிஸீவரை மாட்டி விட்டு எழுந்தான். மிருணாளினி தன் எதிர்காலத் திட்டங்களைப் பற்றிய எத்தனையோ விஷயங்களை அந்தரங்கமாகப் பாதுகாத்தது போல் தன் இருப்பிடம் பற்றிய விவரங்களையும் ரகசியமாகவே வைத்திருந்தாள். ஒரு மர்மமான மங்கை தான் அவள். பிரிந்து கிடந்த காலைப் பத்திரிகையை மடித்துச் சுருட்டிக் குப்பைத் தொட்டியில் போட முற்பட்டவனுக்கு மிருணாளினியைப் பற்றிச் செல்லம் எச்சரிக்கை செய்திருந்தது நினைவுக்கு வந்தது. சென்னையில் இரண்டு நாட்கள் சபாபதி வீட்டில் தங்கிவிட்டுப் புதுதில்லிக்கு அவன் கிளம்பிய தினத்தன்று ஓர் ஐந்து நிமிஷங்கள் அவனுடன் தனிமையில் பேசக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது செல்லத்துக்கு.

''புதுதில்லிக்கு அடிக்கடி நீங்க போய் வருகிறது பற்றியோ அங்கே உஷாவை நீங்க சந்திக்க நேரலாம் என்பது பற்றியோ எனக்குக் கொஞ்சம்கூடக் கவலை இல்லே, அத்தான். என்னுடைய காதலில் தளராத நம்பிக்கை வைக்க எனக்கு நீங்க கற்றுத் தந்திருக்கீங்க. ஆனால் அங்கே மிருணாளினியிடம் மட்டும் நீங்க ஜாக்கிரதையாக இருக்கணும்; உரிமையோடு நான் சொல்லி

றேன்; என்னை நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டாலும் சரிதான். அவளுடைய சகவாசம் உங்களுக்கு நல்லதில்லே. இந்த நாட்டுக்கே அவளால் ஆபத்து ஏதாவது நேர்ந்தாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். எனக்கு என்னமோ அப்படித்தான் தோணுது.''

'கெட்டிக்காரப் பெண்தான், செல்லம்!' என்று எண்ணித் தனக்குள் இப்போது மெல்லச் சிரித்துக் கொண்டான் தங்கப்பன். செல்லத்தினுடைய நிலையிலிருந்து பார்க்கும் போது அவளுடைய அனுமானம் சரியான ஒன்றுதானே?'

அடுத்தாற்போல் சென்டிரல் ஸ்டேஷனில் அவன் ரயிலேறிய போது சபாபதி மட்டுமே வழியனுப்ப வந்ததும், ரயில் கிளம்ப இன்னும் பத்து நிமிஷங்கள் இருக்கும் போது பெட்டிக்குள் அவனுடன் ஏறி அமர்ந்து கொண்டு தழு தழுத்த குரலில், ''தம்பி! எனக்கு இருப்பது ஒரே பெண். அவளும் உன்னையே தான் மலைபோல நம்பிக்கிட்டிருக்காள்'' என்று கூறியதும் தங்கப்பனின் மனத் திரையில் ஒரு படக் காட்சியாக விரிந்தது. ''உனக்குத் தெரியாததில்லே தம்பி, அவளுக்கும் வயசாகிக்கிட்டே வருது; நான் வாயை மூடிக்கிட்டிருந்தாலும் ஊரார் வாயை மூட முடியுமா? செல்லமோ உன்னைத் தவிர வேறு யாரையும் மாப்பிள்ளையாக நான் நினைத்துக்கூடப் பார்க்கக் கூடாதென்று பிடிவாதமாயிருக்கிறாள். அவள் உன் பேரிலே வைச்சிருக்கிற அபரிமிதமான அன்பைப் பார்க்கிறப்போ எனக்கு உன் மேலே வருத்தமும் கோபம் பொங்குதே தவிர வேறே ஒன்னும் செய்யத் தோணலே!'' முகத்தைத் துடைத்துக் கொள்வது போன்ற பாவனையில் யாரும் பார்த்து விடாதபடி மேல் துண்டால் கண்ணீரை ஒற்றி எடுத்தார் சபாபதி.

தங்கப்பன் தானாகவேதான் இந்த நிலையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தானென்றாலும் இப்போது அவனையும் அறியாமல் அவனிடத்தில் ஓர் ஏக்கப் பெருமூச்சு எழுந்தது.

தனித்து மாற்றுடை தரித்துக் கொண்டு அவன் வெளியே கிளம்பினான். தொழிலகம் சம்பந்தமாக அவன் ஓரிரு உயர்தர அதிகாரிகளைப் பேட்டி காணவேண்டியிருந்தது. ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு போய் செக்ரடேரியட்டில் முதலில் தான் சந்திக்க வேண்டிய உயர் அதிகாரியின் அறை வாசலில் நின்று கொண்டு உள்ளே சீட்டைக் கொடுத்து அனுப்பினான், பியூனிடம். அந்த அதிகாரி அவனுக்கு ஏற்கனவே பரிச்சயமானவர்தான். தன் தொழிலகம் சம்பந்தமாக அவன் டில்லிக்கு முதன் முறையாக வந்திருந்த போது இவரிடம் ஒரு காரியமாகப் போனான். வந்த விஷயத்தைப் பற்றி — தன் தொழிலகம் விரைவாக விரிவடைந்து வருவது பற்றியும் தன் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் அதற்குத் தேவைப்படும் சர்க்கார் அனுமதிகளைப் பற்றியும் — அவன் உற்சாகமாகப் பேசிக் கொண்டேயிருக்கையில், அவர் புன்னகை புரிந்தார்; மேல் கூரையைப் பார்த்தார்; இரண்டு கைவிரல்களிலும் உள்ள நகங்களை ஒன்றுசேர வைத்து உரசி மெருகேற்றினார்; சிகரெட் பற்ற வைத்து ஊதினார்; கடைசியில் பொறுமை இழந்தவராகக் குறுக்கே புகுந்தார்: ''மன்னியுங்கள்! ஆனால் நீங்கள் கட்டிக் கொண்டிருக்கும் கைக்கடிகாரம் என் கவனத்தைக் கவர்ந்தது'' என்றார். ''ரொம்ப அபூர்வமான தொன்றாயிருக்கிறதே? எங்கே பிடித்தீர்கள்?''

''இதுவா?'' என்றான் தங்கப்பன் ஆச்சரியத்துடன். ''சர்வ சாதாரணமான ஒரு கடிகாரம்தானே இது?'' என்று கூறிக் கழற்றிக் காண்பித்தான்.



அதைக் கையில் வாங்கி முன்னும் பின்னுமாக அலட்சியமாகவும் அசுவாரசியமாகவும் புரட்டிப் பார்த்தபடியே, "நல்ல காலண்டர் வாட்சாக ஒன்று வாங்க வேண்டுமென்று பார்க்கிறேன். கிடைக்க மாட்டேனென்கிறது. ஏன் ஸார்! உங்க பிஸினஸ் பிரதிநிதிகள் யாராவது ஸிலோனிலோ மலேயாவிலோ இருப்பார்களே? இந்தப் பக்கம் அவர்கள் வரும்போது, ஒரு நல்ல புதுக் கைக் கடிகாரம் வாங்கிக் கட்டிக் கொண்டு வரச் சொல்லுங்களேன். அது ஒன்றும் சட்டத்தை மீறியதாகாதல்லவா?" என்றார்.

"ஆமாம், சொல்லலாம்தான்" என்று இழுத்தான் தங்கப்பன். "ஆனால் எனக்கு மலேயாவிலும் ஸிலோனிலும் பிரதிநிதிகள் யாரும் கிடையாதே!"

"இல்லையானால் உங்கள் சிநேகிதர்கள் யாராவது மேனாட்டுக்குப் போய்த் திரும்புகிறதாக இருந்தால் அவர்களிடம் சொல்லி வையுங்களேன்!"

அவர் கூறி வருவதன் உட்கருத்து ஒரு மின்னலைப் போல் தங்கப்பனின் மூளையில் பளிச்சிட்டது. "ஆகட்டும், ஸார்! இன்னும் ஒரு வாரத்திலே லண்டனிலேயிருந்து ஒருவர் கிளம்ப இருக்கிறார்; வழியில் ஜெனிவாவிலே இறங்கி ஒரு நாள் தங்கிவிட்டு வரச் சொல்லி எழுதுகிறேன்" என்றான்.

"மிஸ்டர் தங்கப்பன்! இன்னும் பத்து நிமிஷங்களிலே எனக்கு மினிஸ்டரோடே 'கான்பரன்ஸ்' இருக்கிறது. அதற்கு நான் தயாராக வேண்டும். 'இப் யூ வில் எக்ஸ்யூஸ் மீ!' நீங்கள் எனக்கு, உங்கள் விஷயமாக யோசனை செய்து ஒரு முடிவுக்கு வர ஒரு வாரம் டைம் கொடுங்களேன்."

அவர் முன்னால் தான் விரித்த காகிதங்கள் தஸ்தாவேஜுகள் அனைத்தையும் திரட்டித் தோல் பைக்குள் திணித்துக் கொண்டு எழுந்தான் தங்கப்பன். அவரிடம் கைகுலுக்கி விடைபெற்றான். "மறுபடியும் ஃபோன் பண்ணிவிட்டு வருகிறேன் நான்."

"செய்யுங்கள்" என்றார் அதிகாரி. கதவருகே சென்றதும், "பை தி வே" என்று அவனைத் திரும்பவும் அழைத்தார். தமது கால்சராய்ப் பையிலிருந்து மணிபர்ஸை எடுத்துத் திறந்தவாறே, "அந்த ரிஸ்ட் வாட்சுக்கு எவ்வளவு ஆகும் என்று சொன்னால் கொடுத்து விடுகிறேன். ஆனால் உங்களுக்குச் சரியான 'அமௌண்ட்' தெரிய நியாயமில்லையே?"



"இருக்கட்டும், ஸார், எங்கே ஓடிப்போகிறது? அப்புறம் வாங்கிக் கொள்கிறேன்" என்றான் தங்கப்பன்.

பழைய தில்லியின் எந்த மூலையில் எந்தச் சந்தில் எந்தக் கடையில் கள்ளக் கடத்தல் பொருள்கள் விற்கப்படுகின்றன என்பதை மிருணாளினியிடம் கேட்டறிந்தான். அங்கு போய் விலையுயர்ந்த ஒரு காலண்டர் கைக் கடிகாரத்தை ஒன்றுக்கு ஐந்தாக விலை கொடுத்து வாங்கினான். மறுநாளே அதனை அந்த அதிகாரியிடம் தந்தான்.

"நான் எதிர்பார்த்ததை விடச் சீக்கிரமாகவே என் நண்பன் மேனாட்டிலிருந்து திரும்பி விட்டான். அதிலும் அதிசயத்தைப் பாருங்கள்! ஏதோ சொல்லி வைத்தாற்போல் அவன் தானாகவே இந்தக் கடிகாரத்தை வாங்கி வந்திருக்கிறான்!"

இந்த முறை அதிகாரி பர்ஸை எடுக்கவில்லை. ஆனால் அன்றைக்குக் காரியம் நடந்தது. அப்புறம் படிப்படியாக இரும்பு பீரோ என்றும் 'ஃப்ரிஜிரேட்டர்' என்றும் 'ஏர் கண்டிஷனர்' என்றும் பல பேர்களுக்குப் பல விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் வாங்கித் தந்து விட்டான். அவன் கோரிய அனுமதிகளும் சலுகைகளும் தாராளமாகக் கிடைத்து வந்தன.

இவற்றிலெல்லாம் அவன் விசேஷமாக ரசித்த பகுதியும் ஒன்றுண்டு. அது இந்த கைய அதிகாரிகள் எல்லோருமே நயமாகவும் நாசூக்காகவும் நடந்துகொண்ட விதம் தான். லஞ்சம் வாங்குவதை அவர்கள் ஓர் அற்புதமான அருங்கலையாக வளர்த்துவிட்டிருந்தார்கள். நெருங்கிய நண்பனை தங்கப்பன், தங்களுக்கு அன்பு மிகுதியில் தரும் ஒரு வெகுமதியாக ஒவ்வொன்றையும் கருதி அதனை மறுக்க மனமில்லாமல் பெருந்தன்மையுடன் ஏற்றார்கள்! ஒரு பிறந்த நாள் வைபவம் அல்லது வேறு ஏதேனும் ஒரு விசேஷ தினத்தன்று உற்ற தோழர்கள் பரிசுகள் பரிமாறிக் கொள்வதில் குற்றம் என்ன இருக்கிறது?

இன்று தங்கப்பன் பேட்டி காண வந்திருந்த அந்த அதிகாரி தமக்கு ஒரு 'டேப் ரிகார்டர்' தேவை என்பதைக் கூறாமல் கூறி வெளிப்படுத்தினார். அவருடைய மகள் கல்யாணமாகிப் புகுந்த வீட்டுக்குப் போய் விட்டாளாம். போகுமுன் அவள் குரலையேனும் பதிவு செய்து கொள்ளலாம் என்று பக்கத்து வீட்டிலிருந்து டேப் ரிக்கார்டரைக் கடன் வாங்கி மகளைப் பாடச் சொல்லி ரிகார்ட் செய்தார்களாம். ஆனால் அவர் தம் மகளை நினைத்து ஏங்கும்போதெல்லாம் அவள் குரல் இனிமையைக் கேட்க எண்ணும் சமயத்திலெல்லாம் ஒவ்வொரு தடவையும் அவர் பக்கத்து வீட்டுக்காரர் தயவையல்லவா நாட வேண்டியிருக்கிறது? எவ்வளவு தர்ம சங்கடமான தாளமுடியாத மன வேதனையை அளிக்கும் நிலை இது?

தங்கப்பன், "த்சொ! த்சொ!" என்று அவருக்காகப் பரிதாபப்பட்டு விட்டுக் கிளம்பினான். மந்திரி ஓர் அண்டாவைத் தூக்குகிறார் என்றால் நாம் ஒரு சொம்பையாவது தூக்குவோமே என்று பியூன் நினைக்கும் அளவுக்கு லஞ்ச சூழல்கள் மலிந்து பரவி நாற்றமெடுத்த அந்தச் சர்க்கார் காரியாலயக் கட்டடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியே திறந்தவெளிக்கு வந்து சுத்தமான காற்றைப் பல முறை நெடிய மூச்சுக்களாக உள்ளுக்கு இழுத்த போது தேகத்திலிருந்த விஷ வாயுக்களை வெளியேற்றுவது போல் ஒரு பிரமை உண்டாயிற்று அவனுக்கு.

'இந்த விஷ வாயுக்களின் பிறப்பிடத்தையே அல்லவா அழிக்க வேண்டும்?' அதற்கான காலம் நெருங்கி வந்துவிட்டது என்பதொன்றுதான் தங்கப்பனுக்கு இத்தனைக்குமிடையிலிருந்த ஒரே ஆறுதல். 'அதற்கான ஏற்பாடுகளை மிருணாளினி செய்து வருகிறாள். தேவையான திட்டங்களையெல்லாம் வகுத்து வருகிறாள்!'

அத்தியாயம் 18

காத்திருந்த அதிசயம்

புது தில்லிக்கு வந்த பிறகு ஆரம்பத்தில் கொஞ்ச நாட்களுக்கு மிருணாளினி தோற்றத்தில் வெகுவாக மாறி விட்டிருந்தாள். சில தினங்களில் அவள் ஒரு மார்வாரி போலவும் வேறுசில நாட்களில் ஒரு முஸ்லிம் நங்கை போலவும் இன்னும் சில தினங்களில் தமிழ் நாட்டு மங்கை போலவும் காட்சியளித்தாள். அவ்வப்போது சில நாட்கள் தலைமறைவாகவும் இருந்து விடுவாள். ஆனால் நாளாவட்டத்தில், தன் மீது போலீஸாருக்குத் தீவிர சந்தேகம் ஏதும் விழவில்லை என்பதும் சத்தியபுரி சப்-இன்ஸ்பெக்டரின் கெடுபிடி புதுதில்லிவரை எட்டவில்லை, எட்டாது என்பதும் உறுதியான பிறகு, அவள் சகஜமாகத் தன் வழக்கமான உருவத்திலேயே உலவி வர ஆரம்பித்தாள். ஆனால் தலையைச் சுற்றி மட்டும் அவள் புடவைத் தலைப்பு எப்போதும் முக்காடு போட்ட நிலையில் இருக்கும். எந்த விநாடியும் அதனை இழுத்துக் குளிருக்குப் போர்த்திக் கொள்வது போல் இயல்பாக முகத்தைக் கண்களுக்குக் கீழே மூடிக்கொள்ள அவள் தயாராயிருந்தாள்.

எனினும் இப்போது ராஷ்டிரபதிபவன் தேநீர் விருந்தில் தான் காண்கின்ற இந்தக் கோலத்தில் அவளை இதற்குமுன் வேறு எங்கும் எப்போதும் பார்த்ததில்லை என்று உணர்ந்தான் தங்கப்பன். அவள் ஒரு பஞ்சாபியைப் போல் உடை அணிந்து எடுப்பாகத் தோற்றமளித்தாள். அவள் மேனியை அந்த ஆடை கழுத்து முதல் கணுக்கால் வரை முழுமையாக மறைத்து விட்டிருந்தாலும் செதுக்கிய கற்சிலை போன்ற எழில் வடிவத்தை முழுமையாக எடுத்துக் காட்டவே அப்படி மறைத்திருப்பதாகத் தென்பட்டது. கரும் சிவப்பு நிறத்தில் பூப்போட்ட ஸல்வாருக்கும் இளம் கறுப்பு நிற கம்மீஸுக்கும் இடையே தந்தம் போன்ற அவளது கரங்கள் மட்டும் தோள்கள் முதல் விரல் நுனி வரை தெற்றெனத் தெரிந்து கண்ணைப் பறித்தன. ஸல்வாரைப் போன்ற அதே ரகத் துணி ஒன்றை அவள் தோள்கள் மீதாக ஓர் அலட்சிய பாவத்துடன் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள்.

"எனக்கு ஓர் அதிசயம் காத்திருக்கிறது என்றீர்களே? நிஜம்தான்! அதிசயப்பட்டு விட்டேன்!" என்றான் தங்கப்பன், மேலும் கீழுமாக அவள் எழில் உருவத்தின் மீது தன் கண் பார்வையை ஓட்டியபடியே. "இத்தனை நாட்களாக நான் உங்கள் அக அழகை மட்டும்தான் உண்மையாகவே ரசித்து வந்தேன். புற அழகைப் புறக்கணித்து வந்தேன். இன்று அத்தனை கவசத்தில் நான் அதை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது!"

"அதற்குள் மூர்ச்சையாகி விழுந்துவிடாதீர்கள்!" என்றாள் மிருணாளினி. "உங்களுக்கு ஓர் அதிசயம் காத்திருக்கிறது என்று

நான் சொன்ன போது என்னைப் பற்றிக் குறிப் பிட்டுக் கொள்ளவில்லை.''

''ஏன், ராஷ்டிரபதிபவனுக்கு நான் வந் திருப்பதே அதிசயம்தான். ஆனால் இங்கு நீங்கள் உலவி வருவது எனக்கு ஆச்சரிய மளிக்கவில்லை. போலீஸாரின் கண்காணிப்பின் கிழேயே சத்தியபுரியில் என் வீட்டில் நீங்கள் நிம்மதியாகப் படுத்துத் தூங்கியதை நான் மறக்கவில்லை. இருந்தாலும் ஒரு பெண் ணுக்கு இத்தனை துணிச்சல் கூடாது!''

''புகழ்ச்சி போதும், உரக்கப் பேசா தீர்கள்!'' என்றாள் மிருணாளினி.

''இது போன்ற ஒரு பெரிய கூட்டத்தி னிடையில்தான் ரகசியம் பேசினால் யாரும் கவனிக்க மாட்டார்கள்! உங்களுக்கு நான் சொல்லித் தர வேண்டுமா என்ன? ஒதுங்கி ஒளிந்து பேசினால்தான் என்ன பேசுகி றார்கள் என்று மறைந்திருந்து கேட்க இரண்டு பேர் வருவார்கள். அதனால் நீங்கள் இப் போதே சொல்லி விடுங்கள். உங்கள் திட் டங்கள் என்ன ஆயின? அவை சீக்கிரம் நிறை வேற்றப்பட வேண்டும்; இனியும் தாமத மாவதற்கில்லை என்று எனக்குக் கொஞ்ச நாட்களாக அடிக்கடி தோன்றிக் கொண் டிருக்கிறது.''

'' வெகு சீக்கிரம் நிறைவேறத்தான் போகின்றன. ஆனால் அவை ரகசியம் என்பது மட்டுமில்லை; அவை குறித்து விரிவாக நிதானமாக நீண்ட நேரம் பேச வேண்டும். அதற்கு ஏற்ற இடமில்லை இது. இப்போது நீங்கள் உஷாவைச் சந்திக்க வேண்டும். சாவ காசமாக நாளைக்கு எல்லாவற்றையும் நான் உங்களுக்கு விளக்கிச் சொல்கிறேன்.... வாருங்கள்.'' இப்படிக் கூறிக் கொண்டே ராஷ்டிரபதி பவன் தோட்டத்தில் குழுமி யிருந்த விருந்தினர் கூட்டத்தினிடையில் வழி ஏற்படுத்திக் கொண்டு முன்னால் சென் றாள் மிருணாளினி. தன்னைப் பின்தொடர்ந்து வந்த தங்கப்பனைத் திரும்பிப் பார்த்து, ''என் பெயர் ஸுஜாதா என்பது நினைவிருக் கிறது இல்லையா? சத்தியபுரியில் இருந்தவரை யில் என்னை ஒரே ஒரு தடவைதான் உஷா உங்கள் தொழிலகத்தில் வைத்துப் பார்த் திருக்கிறாள். இங்கே புதுதில்லிக்கு வந்த பிறகு அவளுடன் அபூர்வமாக எப்போதாவது பேசிப் பழக வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. அவளும் என்னை ஸுஜாதா என்றுதான் அழைக்கிறாள்; ஞாபகம் இருக்கட்டும்!''

இப்படி எச்சரித்துக் கொண்டே நடந்த மிருணாளினி ஓரிடத்தில் நின்று சட்டென்று தங்கப்பனின் கையைப் பிடித்து இழுத்துத் தனக்கு முன்பாக நிறுத்தினாள். அதே சம யத்தில் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கிய விசாலமான அழகிய தோட்டத் தில் மலர்களோடு போட்டியிடும் பலவித நிறங்களில் மின்சார பல்புகள் பளிச்சென்று எரிந்து சூழ்நிலையை ஒரு சொப்பனபுரியாக மாற்றின. இருட்டிக் கொண்டே வந்ததால் பிரகாசமான ஆயிரம் 'வாட்' மின் விளக்கு களும் அந்தக் கணத்தில் பொருத்தப்பட்டுப்



பசுமையான புல்வெளிகளையும் மலர்ச் செடி களையும் ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தின.

இத்தகைய ஒரு சொப்பனபுரியில் மிதந்து வரும் சௌந்தர்ய தேவதையாக உஷா தங்கப்பனின் கண்ணெதிரே காட்சி தந் தாள். தங்கப்பனின் தேகத்தில் ரத்தஓட்டமே ஒரு கணம் நின்று விட்டது! (தொடரும்)


4. 18 மாத சந்தா தொகை முழுவதும் செலுத்திய பிறகு அங்கத்தினருக்கு மேலும் ரூ. 35.00 மதிப்புள்ள புத்தகங்களையும், 3 பரிசு புத்தகங்களையும் டிரஸ்டார் அனுப்பி வைப்பார்கள். இவைகளைப் பெற அங்கத்தினர் முன் செய்ததுபோல் செய்யவேண்டும்.

5. 18 மாதங்களுக்கும் சந்தா செலுத்த முடியாமற்போன அங்கத்தினர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகையளவு மதிப்புள்ள புத்தகங்கள் அனுப்பப்படும். இவ்வங்கத்தினர்கள் புத்தகங்களுக்கான பாக்கிங் மற்றும் தபால் செலவையும் ஏற்கவேண்டும்.


இத் திட்டத்தில் சேர்ந்து 18 மாதங்களும் சந்தா செலுத்தும் அங்கத்தினர் அடையும் லாபம் என்ன ?

i) அங்கத்தினர் தேர்ந்தெடுக்கும் புத்தகங்களின் மொத்த மதிப்பு	...	ரூ.	90.00
ii) 12 பரிசு புத்தகங்களின் மதிப்பு	...	ரூ.	20.00
iii) இலவசமாகப் பெறும் புத்தகப் பட்டியலின் மதிப்பு	...	ரூ.	1.00
iv) இலவசமாகப்பெறும் "புத்தக நண்பன்" 18 பிரதிகளின் மதிப்பு	...	ரூ.	9.00
v) பாக்கிங், தபால் செலவு இலவசம்	...	ரூ.	10.00
		ரூ.	130.00
அங்கத்தினர் செலுத்தும்தொகை		ரூ.	90.00
அங்கத்தினர் அடையும் லாபம்		ரூ.	40.00

முதல் மாத சந்தா கட்டியவுடன் பரிசாக கொடுக்கப்படும் புத்தகங்கள் !



பனிப்படலத்துப் பாவை


ஆரம்ப நீதி மார்க்



தாயார் கொடுத்த தனம்


சிலம் தரும் செல்வம்


ரதோத்சவம்


நாகரிகச் சிற்பிகள்


பெரும் புகழும்


வாழ்வதற்கு வழி

கீழ்க்கண்ட கூபனை உடனே பூர்த்தி செய்து அனுப்பி அங்கத்தினர் ஆகுங்கள்.

தென் மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டர்லிங் ரோடு, சென்னை-34

ஐயா,

"வீட்டு நூலகம்" அமைக்கும் உங்கள் திட்டத்தில், அதன் நிபந்தனைகளுக்குட்பட்டு, அங்கத்தினராக சேர விரும்புகிறேன். இதற்கான முதல்மாத சந்தாவான ரூ. 5.00 மணியாடர் மூலம் அனுப்பியுள்ளேன். விளம்பரத்தில் காட்டியுள்ள எட்டு பரிசு புத்தகங்களில் எனக்குப் பிடித்த மூன்று புத்தகங்களின் பெயர்களை கீழே கொடுத்துள்ளேன்.

1

2

3

பெயர் ....

ஊர் : .... கையொப்பம் ....

தேதி : .... முழு விலாசம் ....

....

*குறிப்பு : சந்தா தொகை எப்பொழுதும் மணியாடர் மூலம் தான் அனுப்பப்பட வேண்டும். சென்னையில் வசிக்கும் அங்கத்தினர் சந்தா தொகையை டிரஸ்டின் அலுவலகத்தில் நேரில் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

முடிவு தேதி 10—3—1966

இதோ ஒரு வரன்



கணியூர் ஸ்ரீனிவாசன்

"ஸார்! ஸார்!" என்று கூவியபடியே யாரோ கதவைத் தட்டவும், சபேசன் எழுந்து போய்க் கதவைத் திறந்தார். வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் எதிரில் வந்து நின்றான்.

"நீங்கள்தானே சபேசன்?..... 'தேன் துளி' பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தவர்.......?" என்று அவன் கேட்கவும், "ஆமாம். உள்ளே வாருங்கள்!" என்று உற்சாகமாக உள்ளே அழைத்துச் சென்றார் சபேசன். அவர் உள்ளத்தில் மகிழ்ச்சி. பின்னே இருக்காதா? பெண்ணுக்கு வரன் கோரிப் பத்திரிகையில் விளம்பரம் போட்டுப் பத்து நாட்களாகின்றன. எங்கிருந்தும் ஒரு தகவலுமில்லை. நம்பிக்கை இழந்திருக்கும் சமயம் இதோ ஒருவன் வீடு தேடியே வந்திருக்கிறான்!

இருவரும் அமர்ந்து கொண்டதும் பேச்சு தொடர்ந்தது.

"விளம்பரத்தில் கூறியிருப்பது...."

"என் பெண்ணைப் பற்றித்தான். அதில் சொல்லியிருக்கிற மாதிரி அழகு சுமார்தான். படிப்பும் அதிகமில்லை. வயசும் சற்று அதிகம்தான். இருபத்தியேழு. கல்யாணத்தையும் ஆடம்பரமில்லாமல் எளிய முறையில்தான் நடத்திக் கொடுப்போம்....." என்று கூறிக் கொண்டு போனவரை இடைமறித்தான் இளைஞன்.

"இதெல்லாம் விளம்பரத்திலேயே இருக்கிறதே! நீங்கள் வேறு சொல்வானேன்?..... பெண்ணுக்குத் தாயார் இருக்கிறார்களா? கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்?"

"தாயாரா?" என்று பெருமூச்செறிந்தார் சபேசன். "அவள் இருந்தால் இத்தனை வயசுக்குப் பெண்ணைக் கல்யாணமில்லாமல் விட்டு வைத்திருப்பாளா? மகராஜி போய் மூணு வருஷமாகிறது. எனக்கு இரண்டு பெண்கள். இன்னொருத்தி சின்னவள். ஸ்கூலில் படிக்கிறாள்" என்றவர் வீட்டின் உள்பக்கம் பார்வையைச் செலுத்தி ஏதோ சைகை செய்தார்.

கையில் காப்பி டம்ளர்களுடன் பிரவேசித்த அவரது தமக்கை டீப்பாயின் மேல் அவற்றை வைத்துவிட்டு அடக்கமாக ஓர் ஓரமாக நின்றாள்.

"எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று உபசரித்த சபேசன், "இது என் அக்கா. இவள்தான் வீட்டைப் பார்த்துக் கொள்கிறாள்" என்று அறிமுகப்படுத்திவிட்டு, "ஆமாம். உங்களைப் பற்றி ஏதும் சொல்லவில்லையே?" என்று ஆரம்பித்தார்.

இளைஞன் சூள் கொட்டினான். "என்னைப் பற்றியா? சொல்லிக் கொள்ள விசேஷமாக ஒன்றுமில்லை....... சர்க்கார் உத்தியோகம். தகப்பனார் இல்லை. தாயாரும், கல்யாணத்துக்கு ஒரு தங்கையும் இருக்கிறார்கள். அவளுக்காகத்தான்....." என்று கூறிக்கொண்டு போனவனை உற்சாகத்துடன் இடைமறித்தார் சபேசன்.

"அதற்கென்ன?...... வரன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களாக்கும். உங்கள் கல்யாணம் நல்லபடியாய் முடியட்டும். நல்ல பையனை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்து விட்டால் போகிறது!" என்றவர், "என்ன அக்கா, பேசாமல் நிற்கிறாய்? ராகு காலம் நெருங்குகிறது. சீக்கிரம் நிர்மலாவை வரச் சொல். இவர் பார்த்து விடட்டும்!" என்று அவசரப்படுத்தினார்.


"இருங்கள், இருங்கள்!" என்று துள்ளியெழுந்தான் வந்தவன்.

"நான் பெண் பார்க்க வரவில்லை ஸார்! எனக்குக் கல்யாணமாகி இரண்டு குழந்தைகளும் இருக்கின்றன" என்று அவன் கூறியதும், "என்ன அது, அப்படியா?" என்று கூவினார் சபேசன்.

"ஆமாம், சார்!" என்று கூறி ஈனஸ்வரத்தில் தொடர்ந்தான் இளைஞன்.

"என் தங்கைக்கு ஐந்தாறு வருஷங்களாக வரன் பார்த்துக் கொண்டிருக்கிறேன். படிப்பும் சுமார், அழகும் சுமார். 'ஓஹோ' என்று கல்யாணத்தை நடத்த ஆஸ்திபாஸ்தி இல்லை. வயசும் இருபத்தெட்டாகி விட்டது. வரன் ஏதும் அமையவில்லையே என்று கவலையோடு இருந்த சமயம் உங்கள் விளம்பரம் கண்ணில் பட்டது. என் தங்கைக்காக நானே கொடுத்தமாதிரி அத்தனை கச்சிதமாக இருந்தது! உடனே ஒரு யோசனை தோன்றியது. விளம்பரத்துக்கு உங்களுக்குப் பல இடங்களிலிருந்து பதில் வந்திருக்குமில்லையா? அவற்றில் உங்கள் பெண்ணுக்குப் பொருத்தமில்லாத, நீங்கள் ஒதுக்கின வரன்கள் இருக்குமில்லையா? அதில் எதையாவது என் தங்கைக்குப் பிரயோசனப்படுத்திக் கொள்ள முடியுமா என்று பார்க்க வந்தேன். ஆனால் நீங்கள் என்னடாவென்றால் நான் விவரம் கூற ஆரம்பிப்பதற்குள்......"

அவன் பேச்சை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்த போது சபேசன் முகத்தில் நீர் தெளித்து அவர் தமக்கை விசிறியால் விசிறிக் கொண்டிருந்தாள்!



சர்க்கஸ் கரடி

— எஸ். பாபு —

டவுனுக்குள் நான் வந்தபோது இந்தச் சர்க்கஸ் கண்ணில் படும் என்று நான் நினைக்க வில்லை. ஒரு காலத்தில்..... அது அந்தக் காலம். இப்போது, ''எங்கேயாவது போ — எப்படியாவது தொலை — ஒரு நூறு ரூபாய் சம்பாதித்துக் கொண்டு வராவிட்டால் இந்த வீட்டுக்குள் வராதே!'' என்று மவராசி, அவள் விரட்டி அனுப்பி விட்டாள். நேற்று முழுதும், இன்று காலை முழுதும் நடந்து நடந்து, இருபத்தியாறு மைல் நடந்து, காட்டுப்பாளையத்திலிருந்து டவுனுக்கு வந்து சேர்ந்தேன். இங்கே முதலில் என் கண்ணில்பட்டது இந்தச் சர்க்கஸ் நோட்டீசுதான். அதிலே, ''கரடி! கரடி!'' என்று பெரிய எழுத்தில் இருந்ததைப் பழைய நினைவில் சுலபமாகப் படித்து விட்டேன். அடியில் சிறிய எழுத்தில் இருந்ததை எழுத்துக் கூட்டச் சிறிது நேரம் பிடித்தது. தட்டுத் தடுமாறிப் படித்து விட்டேன்.

குஸ்தி போடும் கரடியாம் அது. அந்தக் கரடியிடம் குஸ்தி போடுவதில் ஐந்து நிமிஷங்கள் தாக்குப் பிடித்தால் பத்து ரூபாய் இனாம் தருவார்களாம். ஒவ்வொரு ஐந்து நிமிஷத்துக்கும் பத்து பத்து ரூபாய். கரடியைக் குஸ்தி போட்டு மல்லாத்தி விட்டால் அதிகப்படியாக ஓர் ஐம்பது ரூபாய் இனாம் தருவார்களாம்.

'அப்படியா?' என்று எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டு சாயங்காலம் வரையில் பொழுதைப் போக்கத் தயாரானேன். ஆறு மணிக்கு மேல்தான் முதல் ஆட்டம் தொடங்கும். அது வரையில் சாப்பாடு தண்ணிக்கு வழி வேண்டுமே. சர்க்கஸிலேயே ஏதாவது வேலை இருக்கும். சமயத்துக்கு எவனாவது உடம்பாகப் படுத்து விடுவான்; அல்லது ஓடி விடுவான். சர்க்கஸ் இருந்த மைதானத்தைக் கண்டு பிடிக்க எனக்கு அதிக நேரம் ஆகவில்லை. சின்ன டவுன்தான். இரண்டு மூன்று யானைகள், நாலைந்து குதிரைகள், ஒரு டஜன் குரங்குகள், ஒரு கரடி, மூன்று சிங்கங்கள் இவைதான் அவர்களிடமிருந்த மிருகங்கள். பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள் என்று பத்து இருபது பேர்கள் இருந்தார்கள். ஒரு குள்ளனும் இருந்தான்.

நான் போன நேரம் நல்ல நேரம். மிருகங்களுக்குத் தீனி வைக்கிற நேரம். தீனியை ஒருவன் போட்டு வர, இன்னொருவன் எந்தத் தீனி வேண்டுமோ, அதைக் கொண்டு வந்து தருவான். கொண்டு வந்து தருகிற ஆள் வழக்கமாக வருபவன் வராததால் தரத்தில் சற்றே உயர்ந்தவனை சர்க்கஸ் வித்தைக்காரனுக்குக் கோபம். நேரத்துக்கு வேலையை முடித்துக் கொண்டு அவன் உறங்கப் போக வேண்டும். சர்க்கஸ் வர்க்கத்தினரிடையே வர்க்க பேதம் ஆட்சி செலுத்துகிற மாதிரி வேறு எங்கும் ஆட்சி செலுத்துவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒருவன் செய்கிற வேலையை இன்னொருவன் நிச்சயமாகச் செய்யவே மாட்டான்.

'நான் தீனி கொண்டு வந்து தருகிறேன். என்ன கூலி தருவாய்?'' என்று கேட்டுக் கொண்டு சர்க்கஸ்காரன் முன் போய் நின்றேன் நான். என்னை மேலும் கீழும் பார்த்தான் சர்க்கஸ்காரன். நான் ஒல்லியாக எப்போதும் எட்டு நாட்கள் பட்டினி கிடந்தவன் போலத்தான் இருப்பேன் சாதாரணமாக— இப்போது இரண்டு நாட்களாகப் பட்டினி. நடையும் வேறு மைல் கணக்காக நடந்து வந்திருந்தேன். போட்டிருந்த பனியன் மூன்று இடங்களில்தான் கிழிந்திருந்தது. தலையில் கட்டியிருந்த உருமால் பெரிசாக இருந்தது. காலில் செருப்பேது?

அவன் பார்வைக்குச் சளைக்காமல் நானும் பார்த்தேன்.

''உனக்கும் தீனி தருகிறேன்'' என்றான்.

''அது சரி. அதைத் தவிர ஒரு ரூபாய் பணமும் தர வேண்டும்'' என்றேன்.

''ஒரு ரூபாய் சரிப்படாது. முதலாளி சம்மதிக்க மாட்டார்.''

''அப்போ மிருகங்களெல்லாம் பட்டினி கிடக்கட்டும்.''

''மாலையில் ஆட்டம் பார்க்கக் காசில்லாமல் விடச் சொல்லுகிறேன்.''

''அதுவும்தான். ஆனால் ஒரு ரூபாயும் வேண்டும்.''

''தீனி போட்டு விட்டு முதலாளியைக் கேட்டுப் பார்க்கலாம். தந்தால் உன் அதிர்ஷ்டம்'' என்றான் சர்க்கஸ்காரன்.

எங்கள் விவாதத்தைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்த சர்க்கஸ் முதலாளி, ''வழக்கமாக வருகிற ஆள் எங்கே?'' என்று விசாரித்துவிட்டு, ''அவன் சம்பளத்தில் ஒரு ரூபாய் பிடித்துக் கொண்டு இவனுக்குக் கொடுத்துவிடு'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

சர்க்கஸ்காரன், ''அடேயப்பா! எங்க முதலாளியை ஏதோ சொக்குப் பொடி போட்டு மயக்கிவிட்டாயே!'' என்றான்.

''அப்படியே அவர் கரடியையும் மயக்கி விட்டேனென்றால் நான் இன்று ஜெயித்து விடுவேன்'' என்றேன்.

''பெரிய வஸ்தாதுதான்னு சொல்லு. கரடியோடு குஸ்திபோட வந்திருக்கிறயா நீ?'' என்று அப்படியே அங்கு வந்தவர்கள் போனவர்கள் எல்லோருக்கும் கிண்டலாகவும் ஓர் அழுத்தமான ஹாஸ்யத்துடனும் என்னை அறிமுகம் செய்து வைக்க ஆரம்பித்தான் அவன். அந்தக் கரடியைப் பார்த்துக் கொள்பவன்தான் அவன் என்றும், அவன் பெயர் ராஜு என்றும் அறிந்து கொண்டேன். சர்க்கஸில் இருந்த பலரும் வந்து, என் உடம்பில் எத்தனை எலும்பு அன்று மாலை நொறுங்கப் போகிறது என்று ஜோசியம் சொல்லிக் கணக்குப் பார்ப்பதில் செலவிட்டனர். எனக்கும் பயமாகத்தான் இருந்தது — ஆனால் பணம் தேவையாயிற்றே. கரடியுடன் குஸ்தி போடுவது அப்படி என்ன சிரமமான காரியம்? கன்னத்தில் ஓர் அறை. முதுகில் வயிற்றில் ஓர் அறை வாங்கினால்தான் என்ன? பார்க்கலாமே.

என் ஒரு ரூபாய்க்கு ஒரு மணி நேர வேலை இருந்தது. அதுவும் சற்றுச் சிரமமான வேலைதான். எவ்விதத்திலும் முணுமுணுக்காமல், ராஜுவிடம் திருப்திகரமான வகையில் நடந்து கொண்டேன். இடையில் ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் குஸ்தியிலே அந்தக் கரடியை ஜெயிக்க ஏதாவது வழி உண்டா என்று ராஜுவையே கூடக் கேட்டுப் பார்த்தேன்.

''உண்டாலே! அப்படி வழி உண்டுன்னு உனக்குச் சொல்லித் தருவேன்னு நினைச்சுட்டியா நீ?'' என்று 'ஹா ஹா' என்று உரக்கச் சிரித்தான்.

ஒரு நிமிஷம் கழித்து, ''நீ கேக்கிற பணத்தை முச்சூடும் கொடுக்கிறேன்னுசொன்னாக்கூட, வழி உண்டானுக்கூடச் சொல்ல மாட்டேன். ஏன் தெரியுமா? கரடி என்னுடையது. அது எத்தனை மனுஷனைக் குஸ்தியிலே தள்ளுகிறதோ அத்தனை பத்து ரூபாய் எனக்கு முதலாளி தருகிறார். முதல் பத்து நாளிலே பத்து ஆசாமி வந்து ஏமாந்துபூட்டான். இப்போ இரண்டு மூன்று நாட்களா யாருமே கரடியோடே குஸ்தி போட வரவேயில்லே. கவலைப்படறேன்'' என்றான்.

''நான் ஜெயிக்கப் போடுவேன்'' என்றேன் தைரியமாக.

''அட என் வஸ்தாதே!'' என்று மார்பிலே கை வைத்து இலேசாக அவன் தள்ளினான். அவன் இலேசாகத்தான் தள்ளினான். ஆனால் நான் தள்ளாடிக் கீழே விழுந்து விட்டேன்.


''ஓஹோஹோ'' என்று சிரித்தான் ராஜு. ''அந்தக் கரடி உன்னை ஓர் அறையிலேயே கீழே தள்ளிடும் பாரு.'' ஆனால் நிஜமாகவே எழுந்து என் மேல் படிந்த தூசியைத் தட்டிக் கொண்டே, ''அதையும்தான் பார்க்கலாமே'' என்று இல்லாத மீசையைத் திருகிக் கொண்டே நின்றேன்.

சர்க்கஸ் நடக்கிறதோ இல்லையோ, சர்க்கஸ் கொட்டகையிலே பொழுது கலபமாகப் போய் விடுகிறது. மிருகங்களுக்கெல்லாம் தீனி போட்டபிறகு எனக்கும் சாப்பாடு போட்டார்கள். நல்ல சாப்பாடுதான்—சாப்பிட்டேன். பிறகு சற்று நேரம் அங்கேயே புல் தரையில் படுத்து உறங்கினேன். நோட்டீசு கொடுப்பதற்கு டிரம் அடிக்கிற ஆசாமி அன்று வரவில்லை; தேடினார்கள்; அகப்படவில்லை. காட்சி ஆரம்பிக்குமுன் நோட்டீசு கொடுக்கிற வண்டி திரும்பி வந்து விடுமா என்று கேட்டுக் கொண்டு மாலை மூன்றரை மணி முதல் ஆறரை மணி வரையில் டிரம் அடிக்கும் வேலையை ஒப்புக் கொண்டேன். அதற்கு ஒரு ரூபாய் சம்பளம். எனக்கு முன்பின் டிரம் அடித்துப் பழக்கமில்லை என்று சொன்னதும் எப்படி அடிக்க வேண்டும் என்று முதலாளியே காட்டினார். இரண்டு மூன்று தடவைகளுக்குள் பிடித்துக் கொண்டேன். ''கெட்டிக்கார ஆசாமிதான். ஆனால் எங்கள் கரடியிடம் அகப்பட்டுக் கொள்ளாதே. எலும்புகளை நொறுக்கிவிடும்'' என்றார் முதலாளி.

''என் எலும்புகள் ரப்பரால் செய்யப்பட்டவை'' என்றேன்.

டவுன் அப்படி ஒன்றும் சின்ன டவுன் இல்லை. நான் நினைத்ததைவிடப் பெரிதுதான். தெருத் தெருவாக டிரம் அடித்து நோட்டீசு கொடுத்து வந்தோம். ஒரு பகுதிதான் முடிந்திருக்கும். அதற்குள் மணி ஆறாகிவிட்டது. வேறு வழியாகத் திரும்பினோம். கூடாரம் தயாராகி விட்டது. ஜனங்களும் கூடிவிட்டார்கள். பெரியவர்களும் குழந்தைகளுமாக இரண்டாயிரம் பேர்களாவது இருக்கும். நாலாயிரம் ஐயாயிரமாவது வருமிருக்கும். காட்சி நேரத்தில் நான் வேலை செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டு, காலரிக்குப் போய்க் காட்சியைப் பார்க்க உட்கார்ந்து விட்டேன்.

ஆறரை மணிக்கு என்று சொன்ன ஆட்டம் ஏழேகால் மணிக்குத்தான் ஆரம்பமாகியது. நகர முனிசிபல் கமிஷனர் தலைமை



உஸ்தாத் ஆஸ்ராம் கூறுகிறது
"அது Osram
ஆஸ்ரம் தானு என்று
பார்ப்பதில் பலாம்
இருக்கிறது"
வேலையிலோ அல்லது விளையாட்டிலோ! சரியான வெளிச்ச அமைப்பின் வித்தியாசம் நன்கு விளங்கும் உங்கள் ஆபீசிற்கும், வீட்டிற்கும் ஆஸ்ரம் விளக்குகள் மிகச்சிறந்தவை. ஏனெனில் நீண்ட உழைப்பிற்கும், அதிகப்படியான வெளிச்சம் அளிக்கவும் ஏற்றபடி அவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் நம்பக்கூடிய விளக்கைக் கேட்டு வாங்குங்கள் — உலகத்திலேயே விளக்குகளிலும், வெளிச்ச அமைப்புகளிலும் உலகிலேயே முதன்மையாக விளங்கும் ஜி.இ.ஸி.ஆதரவுடன் தயாரானவை அவை.
G.E.C. உமது உத்திரவாதம்
தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி
ஆப் இந்தியா பி. லிமிடெட்



பொங்கல் திருநாளில்
பகைமை ஒழிந்து, சமாதானம் ஓங்கி
உற்பத்தி பெருகி, மக்கள் நலம் பெற்று
சேமிப்பு வளர்ந்து, நாடு வளம் பெற்று
வாழப்பிரார்த்திக்கிறோம்.
இந்தியன் பாங்க் நாடும் மக்களும் சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அபிவிருத்தியடையவும், மக்களிடையே சேமிப்பு பழக்கத்தைப் பரவச் செய்யவும். தங்களது 169 கிளைகள் மூலம் அயராமல் தொண்டு செய்து வருகிறது.
இந்தியன் பாங்க் லிட்.
சென்னை - 1
S.B. ACCOUNT
ELEGANT

யில் நடக்க இருந்த காட்சி அது — அவர் குடும்பத்துடன் வர அத்தனை நேரம் ஆகிவிட்டது. வழக்கமான காட்சிகள்தான். ட்ரபீஸியம் — பார் விளையாட்டு, கோமாளி, சைக்கிள் வித்தைகள், கத்தி விளையாட்டுகள் சிங்கமும் ஆடும் ஒரு கூண்டில், நீப்பந்தம் என்று ஒன்றன்பின் ஒன்றாக நடந்தன. இன்டர்வெல்லுக்குப் பிறகு முதல் காட்சியாகக் கரடி வந்து அதன் கூண்டில் நிறுத்தப்பட்டது.

ஒலிபெருக்கி சொல்லிற்று: "எங்களுடைய ஜிமூட்டுக் கரடியுடன் குஸ்தியிடுவதற்குத் துணிச்சல் உள்ளவர்கள் யாராகிலும் உண்டானால் அவர்கள் முன் வரலாம். ஓர் ஐந்து நிமிடங்கள் இந்தக் கரடியுடன் குஸ்தியிட்டுச் சமாளித்து விடுபவர்களுக்குப் பத்து ரூபாய் இனும் தருகிறோம். அப்படிச் சமாளிக்கிற ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கும் பத்துப் பத்து ரூபாய் தருகிறோம். கரடியைத் தோல்வியுறச் செய்து மல்லாத்தி விட்டால் இந்தப் பணத்துடன் ஒரு ஐம்பது ரூபாய் அதிகப்படியாகத் தருகிறோம். உயிருக்கு ஆபத்து நேராது பார்த்துக் கொள்வோம். யாராவது குஸ்தி போடத் தயாரா?"

என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த முரடன் ஒருவன், "போன வாரம் நான் அந்தக் கரடியுடன் ஒரு தரம் குஸ்தி போட்டேன். இரண்டு நிமிஷங்களுக்குள்ளாகவே அது என்னை மண்ணைக் கவ்வ வைத்து விட்டது" என்றான். "எனக்கு உடம்பு வலி தீர மூன்று நாளாயிற்று" என்றான் ஒரு நிமிஷம் கழித்து.


இதற்குள் வாட்டசாட்டமான ஓர் ஆசாமி எழுந்து கரடியுடன் தான் குஸ்தி போடுவதாக முன்வந்தான். அவன் பெயர், உயரம், கனம், ஊர் எல்லாவற்றையும் ஒலிபெருக்கியில் சொன்னார்கள். நான் கவனிக்கவில்லை. "எத்தனை நிமிஷங்கள் கரடியோடு குஸ்தி போடுவாய்?" என்று கேட்ட கேள்விக்கு, "பார்க்கிறேன்" என்று பதில் அளித்தான் அந்த ஆசாமி. கரடிக் கூண்டுக்குள் அவன் போனவுடனேயே கரடி அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு விட்டது. உலுக்கு உலுக்கு என்று உலுக்கி அவனை இரண்டே நிமிஷங்களில் கீழே தள்ளி விட்டது. கூட்டத்தின் ஆனந்தமும் கைதட்டலும் சொல்லி முடியாது. வெளிச்சத்தின் கீழ் நில்லாமலே அந்த ஆசாமி வெளியே கொண்டு வரப்பட்டதும் நகர்ந்து விட்டான்.

நான் எழுந்தேன். உடனே ராஜுவின் குரல் ஒலிபெருக்கியில் கேட்டது: "இதோ இந்த வஸ்தாது கரடியுடன் குஸ்தி போடத் தயாராக வர்றாரு" என்று.

கூடியிருந்தவர்கள் எல்லாம் சற்றுத் தடுமாற்றத்துடன் முன்வந்த என்னையே பார்த்தனர். என் கால்கள் இடறின. ஆனால் விழுந்து விடாமல் டென்ட் கயிற்றைப் பற்றிக் கொண்டேன்.

"ஐந்து நிமிஷமென்ன? ஐம்பது நிமிஷங்கள் கூட அந்தக் கரடியைச் சமாளிப்பாருடா இவரு!" என்று அவன் உரக்கச் சொன்னதும், கூடாரம் முழுவதுமே சிரித்ததும் என் காதில் விழுந்தன.

நான் சர்க்கஸ் ரிங்கின் மத்தியிலிருந்த கரடிக் கூண்டை அணுகினேன்.



"டேய்! டேய்! மெதுவா...மெதுவா. இன்னும் உன் பங்கு இன்னும் ஒன்னேமுக்கால் இஞ்சுதான் இருக்கு. ஜாஸ்தி குடிச்சிடாதே!"

"உன் பெயர்?" என்று கேட்டது ராஜுவின் குரல்.

"ராகப் பிள்ளை!"

"ஊர்?"

"குப்பாம்பட்டி!"

"உத்தியோகம்?"

"சுகபோஜனம்!"

"உயரம்?"

"ஐந்தடி ஒன்பதங்குலம்."

"கனம்?"

"நாற்பிருபது பவுண்டு. கிலோ கணக்குத் தெரியாது."

சர்க்கஸ் பார்க்க வந்தவர்கள் உரக்கச் சிரித்தார்கள்.

"அந்தக் கரடியைப் பார். பயமாக இல்லையா உனக்கு?"

"பயமாகத்தான் இருக்கிறது. ஆனால் எனக்குப் பணம் அவசியமாகத் தேவையாக இருக்கிறதே!" என்றேன்.

"அதைச் சம்பாதிக்கச் சுலபமான வழி வேறு ஒன்றும் தெரியவில்லையா உனக்கு?"

"வழி இருக்கு. செய்யத் தெம்பில்லே. கூட்டைடயடிக்கலாம்."

"பட்டே தமாஷா பேசறாரு ஐயா, கரடிக் கூண்டை விட்டு வெளியே வரச்சே இப்படி இருக்கிறாரா பார்க்கலாம். கூண்டுக் கதவண்டை வா. கதவு திறந்ததும் உள்ளே போவோம்" என்றான் ராஜு.

பயமாகத்தான் இருந்தது. உள்ளே போனேன். கரடியார் பாய்ந்தோடி வந்து என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார் — நெருக்கமாகவே தழுவிக் கொண்டார். ஒரு மணி நேரம் அந்தக் கரடியின் துர்நாற்றத்தைப் பொறுத்துக் கொண்டிருந்துவிட முடியுமானால்...... நாற்பிருபது ரூபாய் — கிடைக்கும் — அதை மல்லாத்திவிட்டால்

கூடவும் ஐம்பது ரூபாய் கிடைக்கும். பணம் இல்லாமல் வீடு போக முடியாதே! வரும்போது நடந்து வந்து விட்டேன். திரும்பும்போது ரயிலில் பஸ்ஸில் போகலா மல்லவா?

கரடி என்னைத் தழுவியபடியே நின்றது. முன்பிருந்த இறுக்கம் இப்போது இல்லை. என்னைத் தழுவிய கைகள் தளரவில்லை. ராஜுவின் குரல் உரக்கவே ஒலித்தது. "ஐந்து நிமிஷங்களாகி விட்டது. ராகப்பிள்ளை சமாளித்து விட்டாரே, பலே பேஷ்!" என்றான்.

ஒரே கைதட்டல். நான் நிமிராமல் கரடியின் பிடியிலேயே நின்றேன். பத்து நிமிஷமாயிற்று...... பதினைந்து நிமிஷமாயிற்று.... இருபது நிமிஷமாயிற்று.... இருபத்தைந்து நிமிஷமாயிற்று; முப்பது நிமிஷமாயிற்று; முப்பத்தைந்து நிமிஷமாயிற்று.

ராஜுவின் குரல் ஒலிபெருக்கியில் நேரத்தையும், என் சாமர்த்தியத்தையும் பற்றி விமரிசனம் செய்து கொண்டே யிருந்தது. கூட்டம் ஓயாமல் கைதட்டிக் கொண்டிருந்தது. முப்பது நிமிஷங்களுக்கு மேல் சற்று ஓய்ந்தது. இன்னும் பத்து நிமிஷங்களில்..... என்று நான் தீர்மானித்துக் கொள்வதற்கும் ராஜுவின் குரல் ஒலிபெருக்கியில், "நாற்பது நிமிஷங்கள்" என்பதற்கும் சரியாக இருந்தது. அடுத்த காட்சி வேறு பத்தரை மணிக்கு ஆரம்பிக்க வேண்டுமே என்று முதலாளியே கூண்டண்டை வந்து நின்றார். கரடி என்னைத் தழுவியபடியே நின்றது. சற்று நேரத்துக்கெல்லாம் அது பிடியைத் தளர்த்தி விட்டுத் தரையில் சாய்ந்தது. மல்லாந்து பூனைக் குட்டி மாதிரி நாலு கால்களையும் மேலே தூக்கிக் கொண்டது. அதன் மேல் விழுந்த என்னைக் கடிக்கிற மாதிரி கழுத்தில் கவ்வியது. "நாற்பத்தைந்து நிமிஷங்கள்" என்று ராஜு சொல்லி முடித்ததும் நான் கரடியை விட்டு நகர்ந்து கூண்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன்.

"என் கரடிக்கு ஏதாவது ஆபத்து உண்டாக்கியிருந்தாயோ அவ்வளவுதான்......" என்று ராஜுவும் முதலாளியும் கீழே கிடந்த கரடியை நோக்கிக் கூண்டுக்குள் ஓடினார்கள். கரடி ஆவேசத்துடன் எழுந்து அவர்கள் இருவரையும் ஆளுக்கோர் அறை வைத்துக் கீழே சாய்த்து விட்டது.

கூட்டம் அவர்களைக் கண்டு நகைக்கவும் கைதட்டவும் ஆரம்பித்து விட்டது. சர்க்கஸ் முதலாளியையும், ராஜுவையும் கரடிக் கூண்டை விட்டு வெளியே கொணர்ந்தார்கள். முதலாளி என் பக்கம் வந்து நின்றுகொண்டு ஒரு நூறு ரூபாய் நோட்டையும் ஒரு நாலு பத்து ரூபாய் நோட்டையும் எண்ணி என் கையில் தந்தார். "பத்து ஆண்டுகளாக நான் இந்த சர்க்கஸ் நடத்துகிறேன். எட்டு வருஷங்களாக இந்தக் கரடி என்னிடம் இருக்கிறது. இதுவரை சுமார் நாலாயிரம் ஐயாயிரம் பேருடன் குஸ்தி போட்டு இந்தக் கரடி அவர்களை வீழ்த்தியிருக்கும். இந்த ஒரு தடவை தான் அது தோற்றது" என்று சொன்னார்.

நகர முனிசிபல் கமிஷனர், "ராகப் பிள்ளைக்கு நான் ஒரு பத்து ரூபாய் தருகிறேன்" என்றார்.

கூட்டத்தில் இருந்தவர்களில் வேறு சிலரும் ஆளுக்குக் கொஞ்சம் தந்தார்கள். இருநூறு ரூபாய்க்கு மேல் சேர்ந்து விட்டது. ஆனால் அந்தச் சர்க்கஸ் காட்சி முழுவதையும் பார்த்துவிட்டு, இரண்டாவது காட்சியில் வேறு புது ஆட்டம் ஒன்றுமில்லை என்று தெரிந்து கொண்டுதான் முதலாளியிடமும், ராஜுவிடமும் விடைபெற்றுக் கொண்டு காட்டுப்பாளையத்தையும் அந்த மவராசியையும் நோக்கி ரயிலைத் தேடிக் கிளம்பினேன்.

"கரடியைப் பற்றி ஒன்றும் தெரியாதவனெல்லாம் கரடி சர்க்கஸ் காட்டுகிறான்கள்" என்று முணு முணுத்துக் கொண்டே நடந்தேன். ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. நாலு தரம் புரையேறியது; மவராசிதான் நினைச்சிருப்பாள் ரூபாய்க்கு எங்கே போய் அலைக்கழியறாரோ என்று. இவ்வளவு சுலபமாக என் வாழ்நாளில் ஒரு நாள் கூடப் பணம் சம்பாதித்ததில்லை.

நான் தொழில் செய்து கொண்டிருந்த போது ஒரு கரடியை வைத்துத்தான் பிழைத்துக் கொண்டிருந்தேன். பூனைக் குட்டிகளைப் போலக் கரடிகளுக்கும் கழுத்தில் சொறிந்து கொடுத்தால் பிடிக்கும். சொறி சொறி என்று கழுத்தைக் கொணர்ந்து ஒருவன் மேல் தேய்த்துக் கொள்ளும். ஆனந்தம் மிகுந்து விட்டால் மல்லாந்து படுத்துக் கொள்ளும்.

இதுதான் ரகசியம். இதை நான் சர்க்கஸ் காரனுக்குச் சொல்லித் தருவானேன்?

கால்கேட் டூத் பிரஷ்

மேலும் துப்புரவாக உங்கள் பற்களை சுத்தம் செய்யும்படி அமைக்கப்பட்டிருக்கிறது!



TBG-15 TAM

4 சைஸ்கள் • அடல்ட் • ஜூனியர் • சைல்ட் • பேபி
ஹார்ட் • மீடியம் • ஸாஃப்ட்

ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸ்ஸில்கள் உறுதியாகப் பொருத்தப்பட்ட படியால் அதிக நாள் உழைக்கக்கூடியது!

புதியது மிகவும் கவர்ச்சியானது !!
கால்கேட் சூபர் டீலக்ஸ் டூத் பிரஷ்

கவர்ச்சியான, நவீன பெட்டியில்......விசேஷமான உருவமைப்புடன் அதிகமான பிரஸ்ஸில்களைக் கொண்ட மூன்று வகையாக வேலைகளைச் செய்யும் டூத் பிரஷ்!



வாய் துர்நாற்றத்தை அகற்ற கால்கேட் காட்டும் வழி

ஜலதோஷமா ?

பெப்ஸ்

சாப்பிடுங்கள் !

பெப்ஸ் வில்லைகளை மெதுவாகச் சுவையுங்கள். குணமளிக்கும் ஆவிபோன்ற அதன் சத்து உடனே வேலை செய்யத் தொடங்குவதை உணரலாம் — எரிச்சலூட்டும் ரணமான பகுதிகளுக்கு இதமூட்டுகிறது. உபாதை பரவுவதைத் தடுக்கவும் உதவுகிறது. விரைவில் நீங்கள் உடல்நலம் பெறுகிறீர்கள்.

★ தொண்டைப் புண்ணுக்கும் ப்ராங்கைடிஸுக்கும் நிச்சயநிவாரணம்.
★ குழந்தைகளுக்கு ஆபத்தில்லாதது.
★ எல்லா மருந்து வியாபாரிகளிடமும், பலசரக்குக் கடைகளிலும் விற்கப்படுகிறது.

பெப்ஸ்

உடனடி நிவாரணமளிக்கிறது

SHBI-FP-1 TAM



சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

மெஸர்ஸ் மோதி & கம்பெனி, 214, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, தபால் பெட்டி நெ. 1902, சென்னை .

வட்ட மேஜை

★ மிரட்டல் ஆட்சி மாறுமா?
★ புதிய பூதம்
★ ரசிகர்கள் கவனத்துக்கு
★ நெஞ்சில் நிழலாடுகிறது

என் தகப்பனார் ஓர் ஏழை வியாபாரி. அவரிடம் சென்ற 28–10–65ல் குடந்தைத் தாலுகா திருப்பனந்தாள் வட்ட தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், பி. டி. ஓ. மற்றும் சில அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வந்து "நீர் ஆயிரம் ரூபாய்க்குக் கடன் பத்திரம் வாங்க வேண்டும். இல்லையானால் ஆர். டி. ஓ. வருவார். கடை தீ பறக்கும்" என்று கூறி மிரட்டினர். பின் மூந்நூறு ரூபாய்க்கு என் தகப்பனார் பத்திரம் வாங்கினார். இப்போது 25–12–65ல் ஆர். டி. ஓ. முதலியவர்கள் வந்து 10 கிராம் தங்கம் கேட்கின்றனர். மறுத்தால் கடையை மூடி விடுவார்களாம். இந்த ராணுவ அரசாங்கத்தில் வேலை புரியும் சர்க்கார் அதிகாரிகள் கூட அரசாங்கத்துக்குக் காவடி தூக்குகின்றனர். இந்நாள் என்று மாறுமோ? மாறினால்தான் சுதந்திர இந்தியா முன்னேறும்.

கதிராமங்கலம்,
28–12–65 த. வை. நாதன்

இன்று புதிதாகக் கிளம்பியுள்ள பூதம் தேச நெருக்கடியின் பெயரால் நடத்தப்படும் கட்டாய நிதி, கடன் வசூல்களாகும். தங்கப் பத்திரத்துக்காக மக்களிடம் பெறும் பணத்தைக் கொண்டு அதிகாரிகள் சட்ட விரோதமான (14 காரட் அல்லாத) சுத்தத் தங்கத்தைக் கள்ள மார்க்கெட்டுகளில் ஏராளமான அளவில் தாங்களே நேரில் கொள் முதல் செய்கிறார்கள். இது சட்டத்தையும், நாட்டுப் பற்றையுமே கேலி செய்வதாகும். பதினெட்டு ஆண்டுகளாகத் திட்டங்களின் பெயரால் வசூலித்த கோடிக் கணக்கான ரூபாய்களை விரயம் செய்யாமல் ஓரளவுக்கேனும் நியாயமான முறையில் பாதுகாப்புச் செலவு செய்திருந்தால் ஒரு பெரும் வல்லரசுக்கு ஈடான ராணுவ பலத்தைப் பெற்றிருக்கலாம். விவசாயத்தில் சீர்திருத்தங்களின் பெயரால் குழப்பம் செய்யாமலும் புத்தகப் பூச்சிகளான அதிகாரிகள் பட்டாளங்களைப் பெருக்காமலும் இருந்திருந்தால் இப்போது புதிய வரிகளைத் தேடும் கட்டாயம் இருக்காது. பாதுகாப்புச் சட்டங்கள் மூலம், மக்களைப் பயமுறுத்தாமல், அவர்களின் உணர்ச்சிகளைச் சுதந்திரமாக வெளியிடச் செய்து நிலையான முன்னேற்றத்துக்கு வழி தேடுவதே நாட்டின் எதிர்கால நலத்தை உறுதிப்படுத்தும்.

மாயூரம்,
27-12-65 'ஒரு தேசிய அன்பன்'

சங்கீத சீசன் சமயத்தில் சென்னைக்கு வந்து மியூஸிக் அகாடமிக்குப் போயிருந்தேன். கர்நாடக சங்கீதத்தைச் சிறப்பாகப் பாட வல்லவர்கள் அரிதாக இருக்கும் இந்நாளில் உயர்ந்த சங்கீதத்தைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்ததில் பெருமகிழ்ச்சியும் அதனை மதராஸ் ரசிகப் பெருமக்களுடன் பகிர்ந்துகொள்ளும் பாக்கியத்தையும் நினைந்து மகிழ்ந்தேன். சில பிரபல பாடக பாடகிகளின் கச்சேரிகளுக்குக் காலையிலேயே டிக்கட்டுகள் அநேகமாக விற்று முடிந்தும் கூட ரசிகர்கள் கச்சேரி ஆரம்பமான பிறகும் மாலை 5–30லிருந்து இரவு 7–15 வரை வந்த வண்ணம் இருந்தார்கள். மெய் மறந்து தேவ கானத்தில் மூழ்கியிருக்கும் வேளையில் இந்த 'அகால ரசிகர்கள்' குறுக்கும் நெடுக்குமாகப் போனது எவ்வளவு துன்பத்தைக் கொடுத்தது என்பது விவரிக்க இயலாது.

என் பக்கத்திலிருந்த ஒருவருக்கு உற்சாகம் அதிகமாகித் தம் 'சங்கீத ஞானத்தை'யும் வெளிப்படுத்தும் நோக்கத்துடன் பாடகியுடன் 'உதவிப் பாடக'ராகிவிட்டார். மிருதங்கம், கடம், தனி ஆவர்த்தனத்தின்போது எழுந்து வெளியே சென்றவர் பலர். ஸ்ரீ உஸ்தாத் படே குலாம் அலிகான் தம் கச்சேரியில் இடைவேளை அறிவித்த மாதிரி நாமும் ஏன் இந்த ஜனங்களுக்காக இடைவேளை விடக்கூடாது என்று தோன்றுகிறது.

தரமான சங்கீதத்தைப் பூரணமாக அநுபவிக்க நிசப்தமும் அமைதியான சூழ்நிலையும் வேண்டும் என்பதையும், பக்கத்திலுள்ளவர்களுடன் பேசுதல், கூடப் பாடுதல், குறுக்கும் நெடுக்குமாக அலைதல், குழந்தைகளை அழ விடுதல், பாடகர்களின் அபூர்வ 'பிடி'களின் போது ஆரவாரம் செய்தல் இவை தொல்லை என்பதை ரசிகர்கள் உணர்வார்களா?

நெல்லூர்
27–12–65 எஸ். கல்யாணராமன்

ஷோலோகாவின் அமர சிருஷ்டியான 'வெறுப்பு' என்ற சிறுகதை (சிறுகதைதானே?) மிகப் பிரமாதமாக அமைந்திருந்தது.

அவரது சிருஷ்டி என்ற வகையில் தேவையான சமயத்தில் முதலில் தமிழில் ஒரு கதையை வெளியிட்ட பெருமை கல்கிக்கே சாரும். 'வெறுப்'பை மொழி பெயர்த்துள்ள திரு ரா. வீ. திரம்பட தம் பணியை நிறைவேற்றி யிருக்கிறார்.

'அன்பும் வெறுப்பும் அருகருகே வாழ்கின்றன' என்ற வாசகத்தில் ஆரம்பித்து, 'அவற்றைச் சரியான பாதையில் இயக்கினால் வெறுப்பும் அன்பாகும். தவறான பாதையில் இயக்கினால் அன்பும் வெறுப்பாகும். அமுதமும் விஷமாவது போல் விஷமும் அமுதமாகலாம் அல்லவா?' என்று தத்துவார்த்தமாய்ச் சொல்லி முடிக்கும் லெப்டினன்ட் கேராசிமோவையும், அவர் சொல்லிக் கொண்டு வந்த பிற பொன்மொழிகளையும், அவரின் அநுபவங்களையும் யாருமே மறக்க இயலாது. அவ்வளவும் நெஞ்சத்தில் நிழலாடுகின்றன.

விருத்தாசலம்
31–12–65 எஸ். கிருஷ்ணமூர்த்தி

Edited printed & published by T Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10


பாண்ட்ஸ்
ட்ரீம்:ப்ளவர் :பேஸ் பவுடர்
POND'S
சொப்பன சுந்தரியின்
வதனப் பொலிவை
உங்களுக்கு அளிக்கும்
பாண்ட்ஸ் ட்ரீம்:ப்ளவர் :பேஸ்
பவுடர் சீராகப் படிந்து முகத்தி
லுள்ள சிறு குறைகளை மூடி
மறைக்கிறது...முகத்தைப் பளிச்
சென்று வைக்கிறது! உங்கள்
சரும நிறத்திற்கேற்றபடி தேர்ந்
தெடுக்கப் பலவித வண்ணங்
களில் கிடைக்கின்றது.
சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ்
இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

JWT-P-3218

GISTERED No. M. 4392
gistered as a Newspaper in Ceylon

